
பங்களா காலி இல்லை
மேதாவி
பிரேமா™
பிரசுரம்
மர்ம நாவல்


பங்களா
காண
இல்லை


பிரேமா TM
பிரசுரம்
மேதாவி
மர்ம நாவல்

# பங்களா காலி இல்லை

மர்ம நாவல்

எழுதியவர்

மேதாவி

பிரேமா™

பிரசுரம்

59, ஆற்காடு சாலை,
கோடம்பாக்கம்,
சென்னை – 600 024.

044- 24800325, 24833180. : 9486000325
e-mail : aruram@premapirasuram.com
website: www.premapirasuram.com

பிரேமா பிரசுரம் - 200

முன்றாம் பதிப்பு : நவம்பர் 20016

சகல உரிமைகளும் பெற்றது

இந்நாவலில் வரும் பெயர்கள், சம்பவங்கள், சூழ்நிலைகள் அனைத்தும் கற்பனையே. இறந்தோர், இருப்போர் எவரையும் குறிப்பிடுவன ஆகா.

# 1

அன்று சித்ராபௌர்ணமி. இரவு நேரம்.

முருக பக்தர்கள் பலர், பால் காவடி சுமந்தபடி "செந்திலுறை நாதனுக்குலிவேல் வேல்!" பழனிமலையப்பனுக்குலிவேல் வேல்! "எட்டுக்குடி முருகனுக்கு வேல்! வேல்!" திருத்தணிகை வேலவனுக்கு வேல்! வேல்!" என்று ஆவேசம் பொங்கக்

கூச்சலிட்ட படி ஊர்வலம் வந்து கொண்டிருந்தார்கள். ஊர்வலத்திலே ஏழெட்டுபேர் தீப்பந்தங்களைப் பிடித்துக் கொண்டு வந்தார்கள். எல்லோருக்கும் முன்னால் ஒரு காஸ்லிலைட் விளக்கு சென்று கொண்டிருந்தது.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமான வேலவனின் பெயரை உச்சரித்ததுமே, கேட்டவருக்கெல்லாம் மெய்ச்சிலிர்ப்பு ஏற்பட்டது. காவடி ஏந்தி வந்தவர்கள் முன்னால் வீதியிலே சாஷ்டாங்கமாக விழுந்து பல பக்தர்கள் நமஸ்காரம் செய்தார்கள். வீதியின் இருமருங்கிலும் உள்ள வீடுகளில் உள்ளவர்கள் ஆங்காங்கு ஊர்வலத்தை நிறுத்தி நைவேத்தியம் காட்டினார்கள்.

ஊர்வலம் பவானியின் வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தது. பவானி தனது கையிலே தீபாராதனைத் தட்டைப் பிடித்தபடி மெய் மறந்தவளாய் பக்தி லயிப்போடு அந்த ஊர்வலத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

**பவானிக்கு முப்பத்தேழு வயது இருக்கும்! ஆனால் அழகின் பொலிவு இன்னும் குன்றிவிடவில்லை. கட்டுடல் இன்னும் தளர்ந்து விடவில்லை. சின்னப் பெண்ணைப் போலவே தோற்றம் அளித்தாள். நெற்றியில் அழகாகக் குங்கும திலகமிட்டு மகாலட்சுமி போலவும் விளங்கினாள். அந்தக் குங்குமப் பொட்டையும் அவளுடைய பட்டுப்புடவையையும் பார்த்து விட்டு தெருப்பெண்களி** ல் சிலர் ஏதோ தங்களுக்குள் முணு முணுத்தார்கள்.

திடீரென்று ஒரு பக்தர் ஆவேசத்தோடு பாடினார்;

**திருப்புகழ் படிப்பவர்கள்**
**சிந்தை வலுவாலே**
**ஒருத்தரை மதிப்பதில்லை**
**உந்தனருளாலே!**

அதைக் கேட்டதும் பவானிக்கு புல்லரிப்பு ஏற்பட்டது. அவளது கணவர் கஜபதி எத்தனையோ ஆயிரந்தரம் அந்த அடிகளைப் பாடி அவள் கேட்டிருக்கிறாள். உள்ளபடியே கஜபதி திருப்புகழைப் பாராயணம் செய்யாத நாளே கிடையாது. தனது வாழ்க்கையிலும் அவர் யாரையும் லட்சியம் செய்து தலை வணங்கியது கிடையாது. சொல்லப் போனால் இப்பொழுது தனது குடும்பத்தையே லட்சியம் செய்யாமல் அவர் எங்கோ மறைந்து விட்டார். பூமியே வெடித்து விழுங்கி விட்டதைப் போல மாயமாய் மறைந்து விட்டார்...அதுவும் இதே போன்ற ஒரு சித்ராபௌர்ணமி தினத்திலே!

**பவானியின் கண்களிலே நீர் மல்கி அவள் பார்வையைத் திரையிட்டு மறைத்தது. எல்லை கடந்த துயரத்தாலும் பதைபதைப்பாலும் அவள் இதயமே வெடித்துவிடும் போல் இருந்தது. இதற்குள் ஊர்வலம் அவள் வீட்டின் முன்னே வந்துவிட்டது. தன்னை ஒருவாறு சமாளி**த்தவளாய் வீதியில் இறங்கிச் சென்று நைவேத்தியம் காட்டினாள். பிறகு கொழுந்து விட்டெறிந்து கொண்டிருக்கும் அந்தக் கற்பூரத்தோடு வேகமாக வீட்டினுள் நுழைந்தாள்.

உள்ளே கூடத்தில் அவள் கணவர் கஜபதியின் பெரிய அளவு புகைப்படமொன்று மாட்டப்பட்டிருந்தது. அந்தப் படத்தின் முன்னால், கற்பூரத் தட்டை ஏந்திக் காட்டிய பவானி, அதை மெல்லக் கீழே வைத்து அந்தக் கற்பூரஒளியிலே தனது கரத்தைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

பிறகு அவள் பார்வை அந்தப் புகைப்படத்தின் பக்கம் திரும்பியது. எல்லையற்ற சோகத்தால் அவள் கண்களிருந்து மாலைமாலையாகக் கண்ணீர் வடிந்தது.

**"பதினேழு வருஷங்களுக்கு முன்னால் இதே சித்ரா பௌர்ணமி தினத்தன்று நீங்கள் மாயமாய் மறைந்து விட்டீர்கள்! எங்கே செல்லுகிறீர்களென்று மறைமுகமாகக் கூட நீங்கள் எனக்குத் தெரிவிக்கவில்லை! ஏன் அப்படிச் சென்றீர்கள்! மறந்துங்கூட நான் உங்களிடம் மரியாதை தவறி நடக்கவில்லை. கனவில்கூட நான் உங்கள் கருத்தை எதிர்த்து நின்றதில்லை. இருந்த போதிலும் நீங்கள் என்னைத் தனியே விட்டுப் போய்விட்டீர்கள்-தவித்துத் தத்தளிக்க விட்டுப் போய் விட்டீர்கள்! என் கையில் அப்பொழுது அந்தப் பசலைப்பிள்ளை சேகர் மட்டும் இல்லாமலிருந்தால் நான் தற்கொலை செய்து கொண்டு இறந்திருப்பேன்!..." என்று கூறிக் கொண்டே வந்த பவானி அளவு கடந்த சோகத்தால் முகத்தை மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி அழலானாள். கல்யாணமான புதிதில் கணவரோடு கழித்த நாட்களெல்லாம் அவளுடைய நினைவுத் திரையில் வந்து முட்டின. அவளது கணவர் கஜபதி அவள்மீது அளவில்லாத ஆசையுடன் அவளைச் சுற்றியே வளையவளைய வந்து கொண்டிருப்பார். அத்தகைய** கணவரோடு வாழ்வின் இன்பங்களை எல்லாம் அனுபவிக்க வேண்டிய இளமைப் பருவத்தில் பதினேழு வருஷங்கள் வீணாகிவிட்டன. அது மட்டுமா? அவளுடைய குங்குமப்பொட்டை அழித்து அவளுக்கு வெள்ளைப் புடவை உடுத்திப் பார்க்கச் சமூகம் வற்புறுத்தியது. ஆனால் தன் கணவர் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்று தெரியாத நிலையில் அத்தகைய அலங்கோலங்கள் எல்லாம் சுமக்கப் பவானி எப்படிச் சம்மதிப்பாள். அவள் நெஞ்சம் குமுறியது.

பிறகு ஒருவாறு தேறியவளாய் தனது புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்ட பவானி. "ஆனால் நீங்களாக சொந்த விருப்பிலே-மறைந்திருக்க மாட்டீர்கள்! உங்களை அந்தச் சண்டாளன் செங்கல்வராயன்தான் எங்கோ கொண்டுபோய் மறைத்து வைத்து இருக்கிறான்! -இந்த எண்ணத்தில் தான் உங்களை நான் சென்ற பதினேழு வருஷங்களாக தேடி அலைந்து கொண்டு இருக்கிறேன். உங்களை அந்தப் பாவி மறைத்து வைத்திருக்கும் இடத்தை நிச்சயம்

கண்டு பிடித்தே தீருவேன்!" என்று திட முடிவோடு கூறினாள். வைராக்கியத்தின் ஜொலிப்பு அவள் முகத்திலே தீவிரமாகப் படர்ந்தது.

**ஏதோ நினைவு வந்தவளாய், எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்து விட்டு வீதிக்கதவை வெளிப்புறம் இழுத்துச் சாத்தி விட்டு. தெருவில் இறங்கி நடக்க ஆரம்பித்தாள். அவளுக்குப் பின்னால் சிறிது தொலைவிலே முருக பக்தர்களி** ன் "வேல்-வேல்" கோஷம் வானளாவ எழுந்தபடியிருந்தது.

ஆனால் பவானியின் வாயோ, "மாந்தோப்பு பங்களா" என்று முணு முணுத்தது

◆ ◆ ◆

ஊரின் ஒதுக்குப் புறத்திலேதான் அந்தப் பிரமாண்டமான மாந்தோப்பு இருந்தது. ஓங்கி வளர்ந்த பெரும்பெரும் மாமரங்கள் அடர்த்தியாக நெருங்கி நின்ற அந்த மாந்தோப்பிலே பகலில் கூட இருட்டு ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கும். இரவு நேரத்திலோ அந்தத் தோப்பு இன்னும் பயங்கரமாகக் காட்சி அளித்தது. மயான அமைதியைப் பரப்பிக் கொண்டிருந்த அந்த மாந்தோப்பிலே இடைஇடையே ஆந்தைகளின் அலறல் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. மரங்களிலிருந்து விழுந்த சருகுகள் தோப்பு முழுவதும் ஏராளமாகப் பரவிக் கிடந்ததால், அவற்றின் மீது கீரி, ஓணான், பாம்பு முதலியவை ஊர்ந்து செல்லும் பொழுது சரசரவென்ற சத்தத்தை எழுப்பிக் கொண்டிருந்தன. அதை "இருளடிச்சான் தோப்பு" என்றும், அங்கே இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் மோகினிப் பேய் உலாவுவதாகவும் ஒரு கொலை வெறியனின் ஆவி சுற்றிக் கொண்டிருப்பதாகவும் அருகே வசிக்கும் மக்கள் சொல்வார்கள்.

அந்தத் தோப்பின் மத்தியிலே ஒரு பெரிய பங்களா காட்சியளித்தது. அந்தப் பங்களா பெரும்பாலும் பூட்டியே கிடக்கும். ஆனால் அதன் முன்னால் "பங்களா காலி இல்லை!" என்ற விளம்பரப் பலகை எப்போதும் தொங்கும்!

**அன்றையத்தினம் பங்களாவின் மாடி அறை ஒன்றைத்தவிர மற்ற இடங்களெல்லாம் இருண்டு கிடந்தன. மாடி அறையின் கண்ணாடி ஜன்னலும் மூடப்பட்டிருந்தது. அதன் வழியாக மிக மங்கலான வெளிச்சம் வெளி** யே தெரிந்து கொண்டிருந்தது.

**பகல் வேளையிலேயே பயங்கரத்தைப் பரப்பும் அந்தத் தோப்பிற்குள் பவானி மெதுவாக நுழைந்தாள். சருகுகளி** ன் மீது அவள் காலடிபடுவதால் "சரக் சரக்" என்ற சத்தம் எழுந்து கொண்டேயிருந்தது. இந்தச் சத்தத்தால் பயந்துபோன ஊர்வன சில, வேகமாக இங்குமங்கும் "சரசர" வென ஓடின.

பவானியின் மனதில் இனம்புரியாத ஒரு பயம் கவ்வியது..

அந்தப் பங்களாவைச் சுற்றி மோகினிப் பேயோ கொலைகாரனின் கொடூர ஆவியோ உலாவுமா? இந்தக் காலத்தில் பேய் பிசாசுகளை நம்புவது மூடத்தனம் என்று அவளுடைய அறிவு கூறினாலும் உள்ளுணர்வு உறுத்திக் கொண்டேயிருந்தது. பவானி அந்தப் பங்களாவை நெருங்கிய போது திடீரென பங்களாவில் இருந்து ஒரு மனோகரமான பாட்டுச் சத்தம் கிளம்பியது. உள்ளத்தை உலுப்பியெடுக்கும் உருக்கத்தோடு எழும்பிய அந்தப் பெண் குரல் வட்டாரம் முழுவதுமே வேதனையைப் பரப்பி நின்றது.

**"துன்பம் நேர்கையில்**
**யாழ் எடுத்து நீ**
**இன்பம் சேர்க்க மாட்டாயா?-கண்ணே**
**இன்பம் சேர்க்க மாட்டாயா?-"**

ஆன்மாவையே இன்பவேதனையில் ஆழ்த்தும் பாவேந்தர் பாரதிதாசனாரின் அந்தப் பாடலை, எலும்பும் உருகும் ஏக்க பாவத்திலே அந்தப் பெண் பாடியதைக் கேட்டதும் பவானியின் உடல் சிலிர்த்தது. வினாடி நேரம் பிரமைதட்டிப் போனவளாய் சிலை போல் ஸ்தம்பித்து நின்று விட்டாள். பாட்டுச் சத்தம் மெல்லமெல்ல ஓய்ந்தது.

**"அது அக்காளின் குரல்! இறந்துபோன காமாட்சி அக்காளின் குரல்!" என்று தன்னை மீறி மூச்சு வாங்கக் கூறினாள் பவானி. அவள்**

**முகம் முழுவதும் முத்துமுத்தாக வியர்வைத்துளிகள் கொப்பளி**த்து எழுந்தன. அவற்றைத் தனது புடவைத் தலைப்பால் துடைத்துவிட்டுக் கொண்டாள். எல்லை மீறிய படபடப்பினால் அவள் கரங்கள் நடுங்கின.

"அப்படியானால் காமாட்சி அக்காள் இறக்கவில்லை!-அவள் இறந்து விட்டாளென்று அவள் கணவன் செங்கல்வராயன் பொய்க்கதையைத் தான் கட்டிவிட்டு இருக்கிறான். அவள் இந்த பங்களாவில்தான் அடைபட்டிருக்கிறாள்!... அப்படியானால் என் கணவரும் மறைந்துவிட இல்லை! அவரும் இங்குதான் எங்கோ இருக்கிறார்..." என்று பரபரப்போடு தொடர்ந்து கூறிய பவானி அந்தப் பங்களாவை நோக்கி விரைவாக நடந்தாள்.

பங்களாவில் வெளி வாசல் கதவு தாளிடப்படாமல் சாத்தப்பட்டிருந்தது.

பவானி மெதுவாகக் கை வைத்து அந்தக் கதவைத் திறந்தாள். பல காலமாகக் கவனிப்பாரற்றுக் கிடக்கும் அந்தக் கதவின் கீல் பட்டைகளில் ஏராளமாக துருவேறியிருந்ததால் திறக்கும் பொழுது பயங்கரமாகக் "கிரீச்" சிட்டது.

அளவு கடந்த திகிலால் மனம் "திக்-திக்" கென்று அடித்துக் கொள்ள மெதுவாக முன் ஹாலுக்குள் அடியெடுத்து வைத்தாள் பவானி. இருண்டு கிடந்த முன் ஹாலிலே தூசியும் குப்பையும் நிறைந்திருந்தன. ஒரு பக்கத்திலே பெரிய சிலந்தியொன்று வலை பின்னியிருந்தது. இடது பக்கத்து மூலையொன்றில் ஒரு வௌவால் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்தது. வெளியிலே "உய்-உய்" என்று வீசும் பேய்க் காற்றிலே சருகுகள் சரசரவென்று பறக்கும் சத்தம் அந்த ஹாலுக்குள் பயங்கரமாக ஒலித்துக் கொண்டிருந்தது. பவானி மெல்ல மெல்ல எதிர்ப்புறமிருந்த மாடிப்படிக்கட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

**திடீரென்று ஒரு சூறாவளிக்காற்று அடித்து வெளியே கிடந்த சருகுகளை வாரிக்கொண்டுவந்து ஹாலில் கொட்டியது. எங்கோ திறந்திருந்த ஒரு ஜன்னல் கதவு, காற்றின் வேகத்தில், "படீர்-படீர்" என அடித்துக் கொண்டது. ஹாலி**ன் மத்தியிலே உயரத்தில் தொங்கிக்

கொண்டிருந்த கண்ணாடி ஸஸ்தர் கொத்து பேயாட்டம் ஆடியது. பவானியின் உடல் அவளைமீறி நடுங்கியது.

பீதியோடு மாடிப்படிக்கட்டை நெருங்கிய பவானி அதனருகே நின்று மேலே அண்ணாந்து பார்த்தாள். மாடிப்படிக்கட்டின் மீது பிசாசின் கரங்களைப் போல இருள் சரிவுகள் திட்டுதிட்டாக விழுந்திருந்தன. பவானி ஓரளவு துணிச்சலை வரவழைத்துக் கொண்டு மெல்லமெல்ல அந்த மாடிப்படிகளில் ஏறி நடக்கலானாள். வெளியே "உய்ங்-உய்ங்" என்று பேய்க்காற்று வீசிக் கொண்டிருந்தது.

பாதிப் படிக்கட்டை அவள் கடந்து கொண்டிருந்த பொழுது படார் என்று ஒரு பயங்கரமான சத்தம் அவளுக்குப் பின்னால் கேட்டது. பதறிப்போன பவானி சட்டென்று திரும்பிப் பார்த்தாள். அவள் திறந்து வைத்து விட்டு வந்திருந்த வெளிவாயிற் கதவு காற்றின் வேகத்திலே மூடிக் கொண்டு விட்டது.

நெஞ்சை அழுத்திப் பிடித்தவளாய் பவானி ஒரு நெடு மூச்சு விட்டபடி மாடிப்படிக்கட்டின் மேலே ஏறினாள். மேல் தளத்தை அடைந்த பவானி தனக்கு எதிரே சாத்தப் பட்டிருந்த ஒரு அறைக் கதவின் மீது கையைவைத்து மெதுவாக அழுத்திப் பார்த்தாள். அந்தக் கதவு பூட்டப்பட்டிருந்தது. ஆயாசத்தோடு இருப்புறமும் திரும்பிப் பார்த்தாள் பவானி.

அப்பொழுது இடது பக்கமிருந்த ஒரு அறைக்குள் "டணால்" என்று ஏதோ உலோகம் கீழே விழும் சத்தம் கேட்டது. சட்டென்று அந்த அறையை நோக்கி நடந்தாள் பவானி.

அந்த அறையின் கதவும் மூடப்பட்டுத்தான் இருந்தது. ஆனால் சாத்தப்பட்டிருந்த கண்ணாடி ஜன்னல் கதவுகள் வழியாக உள்ளே மங்கலான விளக்கு எரிந்து கொண்டிருப்பது தெரிந்தது. சுற்றுமுற்றும் பார்த்து விட்டுப் பவானி திகிலோடு அறைக்கதவின் மீது கையை வைத்து மெல்லத் தள்ளினாள்.

அங்குலம் அங்குலமாக அந்தக் கதவு மெதுவாகத் திறந்தது...

உள்ளிருந்து வீசும் தீபவொளி கொஞ்சங் கொஞ்சமாக அவள் முகத்திலே விழுந்தது. முத்து முத்தாக அவள் முகத்தில் அரும்பியிருந்த வியர்வைத் துளிகள் மீது அந்த விளக்கொளி பட்டு பளபளவென மின்னியது. எல்லை கடந்த திகிலோடு பவானி தன் கண்களை அகல விரித்து உள்ளே ஊடுருவிப் பார்த்தாள்.

அறையின் உள்ளே ஒரு மூலையில் மேஜையொன்று போடப் பட்டிருந்தது. அந்த மேஜைமீது இரண்டு அடி உயரமுள்ள ஒரு வெண்கலப் பாவைவிளக்கு எரிந்து கொண்டிருந்தது.

மேஜை அருகே ஒரு சிறு நாற்காலி கிடந்தது. கதவுப்பக்கம் முதுகைத் திருப்பியபடி அந்த நாற்காலியிலே ஒரு பெண் உருவம் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தது. விரித்துப் போடப்பட்டிருந்த அதன் சுருண்ட கூந்தல் தரையைத் தொட்டுக் கொண்டு தொங்கியது. பளபளவென்று மின்னும் பட்டை ஜரிகைக் கரை போடப்பட்ட ஒரு கறுப்புச்சேலையை அந்தப் பெண் உருவம் அணிந்து கொண்டிருந்தது.

திடீரென்று கலகலவென ஒரு மனோகரச் சிரிப்புச் சிரித்தது அந்த உருவம்!

மூச்சு வாங்க அந்த உருவத்தையே பார்த்துக் கொண்டு இருந்த பவானி அந்தச் சிரிப்பொலியைக் கேட்டதும் எல்லை கடந்த பீதியோடு நெஞ்சை அமுத்திப் பிடித்தபடி, "காமாட்சி! நீயா?" என்று அலறினாள்.

மறுவினாடி துள்ளியெழுந்தது அந்தப் பெண் உருவம். அது எழுந்த வேகத்திலே அதன் மடியிலிருந்து ஒரு நீண்ட கொலைக் கத்தி ரத்தப்பூச்சுடன் கூடிய ஒரு கத்தி தடாலெனக் கீழே விழுந்தது. அரை இருளிலே எழுந்து நின்ற அந்தப்பெண் உருவத்தின் முகம் பவானிக்குத் தெரியவில்லை. ஆனால் அதன் கைகள் மட்டும் விளக்கொளியில் நன்றாகத் தெரிந்தன. என்ன பயங்கரம்?

அந்தக் கைகள் மனிதக் கைகளாகவே இல்லை! அவை பேயின் கைகள்! நீண்டு வளைந்த கொக்கிபோன்ற பயங்கர நகங்கள் அந்தக் கைகளிலே நீட்டிக் கொண்டிருந்தன. அடுத்தவினாடியே ரத்தம் உறைந்து

போகும்படி அமானுஷ்யமான சத்தம் ஒன்றை எழுப்பியபடி முன்னோக்கிப் பாய்ந்தது அந்தப் பேய் உருவம்.

**பவானி வீரிட்டு அலறியபடி அந்த இடத்திலிருந்து திரும்பி ஓடலானாள். காற்றினும் கடுகிய வேகத்திலே மாடிப்படிக்கட்டை நெருங்கிய பவானி "தடதட" வெனக் கீழே இறங்கி ஓடினாள். ஹாலை அடைந்தபிறகும் அவள் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. வீதிக்கதவை நெருங்கி அயுத வேகமாகத் திறந்துகொண்டு வெளி** யே வந்த பவானி, மீண்டும் அந்தக் கதவை இழுத்துப் படீரெனச் சாத்திவிட்டு இருண்டு கிடந்த மாந்தோப்பிலே நிலைதடுமாறியபடி ஓடினாள்.

வழியிலே ஏராளமாக முட்புதர்கள் மண்டிக் கிடந்தன. அவற்றில் உராய்ந்து அவள் கால்களில் சிராய்ப்புக் காயங்கள் ஏற்பட்டன. இரண்டொரு இடங்களில் அவள் புடவைத் தலைப்பு சிக்கி டார்-டார் என்று கிழிந்தது. அவையொன்றையும் லட்சியம் செய்யாமல் தனது வீட்டை நோக்கி கண்மண் தெரியாத வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தாள் பவானி.

## 2

தலை தெரிக்கும் வேகத்திலே மாந்தோப்பு பங்களாவில் இருந்து பறந்து வந்த பவானி அவசரஅவசரமாகத் தன்வீட்டு வாசற் கதவைத் திறந்து கொண்டு உள்ளே ஓடினாள்.

**ஹாலில் மாட்டப்பட்டிருந்த தன் கணவர் கஜபதியின் புகைப் படத்திற்கு முன்னால் அவள் போய் நின்று பதட்டத்தோடு, "பதினேழு வருஷங்களாக என் மனதில் வேரூன்றியிருந்த நம்பிக்கைக்கு இன்று சோதனை ஏற்பட்டு விட்டதே! ஐயோ கடவுளே! உங்களை அந்தப் பாழும் பங்களாவில் தான் எங்கோ செங்கல்வராயன் மறைத்து வைத்து இருக்கிறான் என்று நான் இத்தனை ஆண்டுகளாக அதை முற்றுகையிட்டு வந்தேன். என்றாவது ஒருநாள் உங்களை நேருக்கு நேர் சந்திக்கத்தான் போகிறேனென்று திடமாக நம்பியிருந்தேன் - ஆனால்**

**நீங்கள் எனக்குக் காட்சி கொடுக்க வில்லை. அதற்கு மாறாக அங்கே ஒரு பெண் பேய்தான் எனக்குக் காட்சி கொடுத்திருக்கிறது. என் உயிரே, நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? உங்களை என்றுதான் நான் காணப்போகிறேன்? சொல்லுங்கள் சொல்லுங்கள்!" என்று பலவாறாகப் புலம்பியவளாய்த் தனது முகத்தை இரு கரங்களி**லும் புதைத்துக் கொண்டு தேம்பியபடி அருகே கிடந்த ஒரு ஆசனத்தில் "தொப்" பென்று விழுந்தாள்.

**கட்டு மீறிய வேதனையாலும் சற்றுமுன் ஏற்பட்ட பயங்கர அதிர்ச்சியாலும் அவள் வெகுவாக ஆடிப் போயிருந்தாள். நெஞ்சில்** அழுத்திக் கொண்டிருந்த பாரம் தீருமட்டும் அழவேண்டும் போன்ற தவிப்பு அவளுக்கு ஏற்பட்டது. முகத்தை மூடியபடி விம்மிவிம்மி அழுது கொண்டே இருந்தாள். தொலை தூரத்திலே "வேல்! வேல்!" சத்தம் இலேசாகக் கேட்டுக் கொண்டே இருந்தது.

எவ்வளவு நேரம் பவானி அந்த நிலையில் இருந்தாளென்று அவளுக்கே தெரியாது. யாரோ தனது தோள் மீது கை வைப்பதை உணர்ந்ததும் மெதுவாகத் தலை நிமிர்ந்து பார்த்தாள்.

"என்ன அத்தை இது? ஏன் அழுது கொண்டு இருக்கிறீர்கள்?" என்று பரபரப்போடு கேட்டாள் எதிரே நின்று கொண்டிருந்த பரிமளா.

சொல்லப்போனால் அத்தை முறை கொண்டாடிய பரிமளா பவானியின் உறவுக்காரியல்ல. ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தவிர அவர்களிடையே எந்தவித நெருக்கமான உறவு முறையும் கிடையாது. இருந்தபோதிலும் பரிமளாவின் தந்தை வேதாசலம் நீண்டகாலமாக கஜபதியின் குடும்பத்திற்கு நிரம்பவும் வேண்டியவராக இருந்து வந்தார். கஜபதி இருந்த காலத்திலே அவரிடம் ஏராளமாக உதவி பெற்றவர் வேதாசலம். அந்தக் காரணத்தால் அந்த இரண்டு குடும்பத்தினர் இடையேயும் அளவு கடந்த ஒட்டுறவு ஏற்பட்டிருந்தது.

**பழைய நன்றியை மறக்காமல் பரிமளாவின் தந்தை வேதாசலம் பவானிக்கு அவ்வப்போது வேண்டிய உதவிகளைச் செய்து கொண்டு வந்தார். தாயில்லாப் பெண்ணான பரிமளாவிடம் பவானிக்கும்**

**எல்லையற்ற அன்பு இருந்தது. சொல்லப்போனால் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் தனது மகன் சேகர் படிப்பு முடிந்து வந்ததும் பரிமளாவை அவனுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டுமென்று பவானி திட்டமிட்டிருந்தாள். ஏனென்றால் பரிமளா சேகரை மனதிற்குள் காதலிக்கிறாள் என்று பவானிக்குத் தெரியும். அதனால்தான் தன்னை அத்தைஅத்தையென்று பரிமளா கூப்பிடுகிறாளோ என்று கூட பவானி புன்முறுவல் பூப்பாள். தன் மகன் சேகரும் உள்ளூரப் பரிமளாவைக் காதலிக்கவே செய்வான்! பரிமளா அவ்வளவாகச் சிகப்பு நிறம் படைத்தவள் இல்லை என்றாலும் அவளுடைய இளமை மினுமினுப்பிலும் படிப்பின் களை சொட்டும் முகத்திலும் கவிதை பேசும் கண்களிலும் குறும்புத் தனமான சிரிப்புகளிலும் பாசப்பரிவான பேச்சுகளி** லும் அளவில்லாத கவர்ச்சி குடி கொண்டிருக்கும்.

பவானி தன் கண்களைத் துடைத்தவளாய், "உட்கார் பரிமளா இந்த நேரத்தில் எங்கே வந்தாய்?" என்று ஆதரவாக விசாரித்தாள்.

"தெருக்கோடியில் இருப்பவளுக்கு எந்த நேரமாக இருந்தால் என்ன அத்தை?" என்று சிரித்தபடி கூறிய பரிமளா "அதிருக்கட்டும் அத்தை! நீங்கள் ஏன் அழுது கொண்டு இருந்தீர்கள் அதைச் சொல்லுங்கள்!" என்று பாசத்தோடு பவானியின் கைகளைப் பற்றியபடி கேட்டாள்.

"ஒன்றுமில்லையம்மா!" என்று சிரித்து மழுப்ப முயன்றாள் பவானி.

"மழுப்பாதீர்கள்? ஏன் அழுதீர்கள்?"

"எதையோ நினைத்து அழுதேன்-அது கிடக்கிறது போ! நீ சாப்பிட்டு விட்டாயா?" என்று பேச்சைத் திருப்ப முயன்றாள் பவானி.

ஆனால் பரிமளா விடுவதாக இல்லை. திரும்பத் திரும்ப தன் கேள்வியை அதிக வற்புறுத்தலோடு கேட்டுக்கொண்டே இருந்தாள்.

ஆனால் தனது வாழ்வின் இரகசியத்தை யாரிடமும் வெளியிட பவானி விரும்பவில்லை. தன்புதல்வனிடமே மூடிமறைத்து வைத்திருக்கும் அந்தப் பயங்கர இரகசியத்தை இந்த இளம் பெண்ணிடம் கூறுவதற்கு அவள் தயாராக இல்லை. இருந்த போதிலும் ஏதாவது பொருத்தமான

காரணம் கூறினாலொழிய பரிமளா விடமாட்டாளென்று பவானிக்குத் தெரியும். எனவே அந்தச் சமயத்தில் அவள் மனதில் தோன்றிய ஒரு காரணத்தைப் புளுகினாள்.

"ஒன்றுமில்லை, பரிமளா! சேகர் பரீட்சைக்குக் கட்டப் பணம் அனுப்பச் சொல்லி எழுதியிருந்தான். என்னிடம் இப்பொழுது அவ்வளவு பணம் இல்லை..."

"இதற்காகவா கவலைப்பட்டுக் கொண்டிருந்தீர்கள்?" என்று அவசரமாக இடைமறித்த பரிமளா "அப்பாவிடம் ஒரு வார்த்தை சொன்னால் போதுமே! எவ்வளவு ரூபாய்?" என்று பரபரப்போடு கேட்டாள்.

**"முந்நூறு ரூபாய்தான் - ஆனால் உன் அப்பாவிடம் கேட்காதே நாளைய தினம் நான் எப்படியும் ஏற்பாடு செய்து விடுவேன்! உன் அப்பாவிடம் இதுவரை எவ்வளவோ ரூபாய் வாங்கி விட்டேன் இதற்கு மேலும்..." "அட** விடுங்கள், அத்தை! என்னவோ பிரமாதமாக வாங்கி விட்டீர்களாக்கும்! அத்தானுக்கு இல்லாத பணம் எதற்கு இருக்கிறது! இருங்கள் வருகிறேன்!" என்று பரிமளா கூறியபடி பவானி தடுத்ததையும் லட்சியம் செய்யாமல் தன் வீட்டை நோக்கி குடுகுடுவென்று ஓடினாள்.

**தன் வீட்டைப் பரிமளா அடைந்தபொழுது அவளது தந்தை வேதாசலம் தமது சாப்பாட்டை முடித்து விட்டு "விக்கிக்" கொண்டு உட்கார்ந்திருந்தார் - சாப்பாடு போட்ட பரிமளா அவருக்குத் தண்ணீர் வைக்க மறந்து விட்டாள். அதைத் தானாக முகர்ந்து குடிப்பதற்கு** வேதாசலத்திற்குச் சோம்பலாக இருந்தது. அதனால் விக்கல் எடுத்துக்கொண்டே உட்கார்ந்து இருந்தார்.

"அப்பா! அப்பா!" என்று ஆவலாக அழைத்தபடி வேதாசலத்திடம் ஓடினாள் பரிமளா.

"விக்!விக்!" என்று விக்கல் அவதாரத்தில் பதில் வந்தது!

"அடடா! தண்ணீர் வைக்க மறந்து விட்டேனே!" எனத் தவிப்போடு கூறியபடி உள்ளே ஓடிய பரிமளா, ஒரு டம்பளரில் தண்ணீர்

கொண்டுவந்து வேதாசலத்திடம் நீட்டினாள்.

தண்ணீரை வாங்கிப் பருகிய வேதாசலம் "எங்கே போனாய் பரிமளா? உன்னை எவ்வளவு நேரமாகக் கூப்பிட்டுக் கொண்டு இருந்தேன் தெரியுமா?" என்று செல்லமாகக் கேட்டார்.

"அத்தை வீட்டுக்குப் போயிருந்தேன்!... சேகருக்குப் பரீட்சையாம்..." என்று இழுத்தாள் பரிமளா.

"முதல் வகுப்பில் தேறிவிடுவான்!" என்று உற்சாகத்தோடு கூறினார் வேதாசலம்.

"எழுதினால் தானே, தேறுவதற்கு!" என்று புதிர் போட்டாள் பரிமளா.

"ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?" என்று புரியாமல் கேட்டார் வேதாசலம்.

"பரீட்சை எழுத வேண்டுமென்றால், பணம் கட்டவேண்டும்! அதற்கு அத்தையிடம் பணம் இல்லை! அழுது கொண்டு இருக்கிறார்கள்!"

**"பைத்தியம் பிடித்து விட்டதா, பவானிக்கு!" என்று ஆத்திரமாகத் துள்ளியெழுந்த வேதாசலம், "எனக்குச் சொல்லி அனுப்புவதற்கென்ன? நான் எதற்கு இருக்கிறேன்? நம் குடும்பம் எதற்கு இருக்கிறது? எல்லாம் அவளது கணவன் கஜபதி கொடுத்த பிச்சைதானே! - சுத்த பைத்தியக்காரப் பெண் அந்த பவானி!-" என்று சலி** த்துக்கொண்டவராய் அறைப்பக்கம் நடக்க ஆரம்பித்தவர் சட்டென்று திரும்பி, "எவ்வளவு ரூபாய் என்று கேட்டாயா?" என்று கேட்டார்.

"முந்நூறு ரூபாய்!"

**அறைக்குள் சென்ற வேதாசலம் ஒரு பீரோவைத் திறந்து அதிலி** ருந்து முந்நூறு ரூபாய் பணத்தை எடுத்தார். அதைக் கொண்டு வந்து பரிமளாவிடம் கொடுத்தபடி, "உன் அத்தை ஏன் எனக்கு தகவல் அனுப்பவில்லையாம்?" என்று கேட்டார்.

"அடிக்கடி உங்களுக்குத் தொந்தரவு கொடுக்க அத்தைக்கு விருப்பமில்லையாம்!"

"தொந்தரவா?- எது தொந்தரவு? இப்படிப்பட்ட சந்தர்ப்பம் ஏற்பட்டு எனது நன்றியைக் காட்ட வாய்ப்புக் கிடைக்கிறதே என்று நான் பூரிப்பல்லவா, அடைகிறேன்!" என்று கூறிய வேதாசலம் ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்து வெட்டவெளியை வெறிக்கப் பார்த்தபடி, "உனக்குத் தெரியாது பரிமளா! இந்த மில்லுக்கு நான் வேலைக்கு வருவதற்கு முன்னால், ஒரு கடையிலே காஷிராக வேலை பார்த்தேன். அப்பொழுது எனக்குச் குறைவான சம்பளம்தான். அந்தச் சமயத்தில் நீ உன் தாயின் வயிற்றில் இருந்தாய். ஒரு நாள் குளிக்கும் அறையில் உன் தாய் வழுக்கி விழுந்து விட்டாள். கர்ப்பிணியான அவள் நிலைமை ரொம்ப அபாயகரமாக மாறி விட்டது. என்ன செலவானாலும் அவள் உயிரைக் காப்பாற்றுவது என்ற முடிவுக்கு வந்தேன். என்னிடம் அப்பொழுது செப்பாலடித்த பணம் கொஞ்சம்கூடக் கிடையாது. எனக்கிருந்த பதைப்பிலே கடை பணத்தையே கையாடல் செய்து, ஒரு சிறந்த டாக்டரிடம் உன் அம்மாவுக்குச் சிகிச்சையளித்து வந்தேன். கிட்டத்தட்ட இரண்டு மாதம் அவளுக்கு சிகிச்சை நடந்து வந்தது. செலவும் ஐயாயிர ரூபாய்க்கு மேல் ஓடி விட்டது அதன் பிறகு நீ பிறந்தாய் உன்னைப் பெற்றெடுத்த நலி வினால் உன் அம்மாவின் உடல் நிலை இன்னும் மோசமாகி விட்டது. அதன் பிறகு அதிக நாள் அவள் உயிர் வாழவில்லை..." என்று கூறும் பொழுதே அவர் குரல் கம்மியது. சில வினாடிகள் மௌனமாக இருந்து விட்டுத் தொடர்ந்து பேசினார் வேதாசலம்.

"கடையில் நான் வேலை பார்த்த சமயத்தில், நமது மில் முதலாளி செங்கல்வராயன் சார்பில் கஜபதி அடிக்கடி அங்கு வருவார். அவருக்கும் எனக்கும் நட்புறவு ஏற்பட்டது. அந்த நட்பு நாளடையவில் வளர்ந்தோங்கி வந்தது. உன் தாயார் காலமானதை அறிந்து கஜபதி ரொம்ப வருத்தப்பட்டார். தாயில்லாப் பசலையான உன்னை வைத்து நான் எப்படிப் பாதுகாக்க முடியும் என்று பரிதவித்தார். கொஞ்ச காலம்வரையில் பவானியின் பராமரிப்பில் வைத்துக் காப்பாற்றுவதாக முன் வந்து உன்னைத் தன் வீட்டிற்கே கொண்டு போய் விட்டார். உனக்கு ஒன்றரை வயது நிறையும் வரை பவானிதான் உன்னை

வளர்த்து வந்தாள். இந்த நிலையில் கடையில் வருடாந்தர கணக்குப் பரிசோதனை வந்தது - இந்தக் காலம் என்றால் அவ்வளவு பெரிய கையாடலை அவ்வளவு நாட்கள் மறைத்து வைத்திருக்க முடியாது. ஆனால் அந்தக் காலத்தில் அவ்வளவு கடுமையான கண்காணிப்பு கிடையாது. மனிதனின் நற்குணங்களில் நம்பிக்கை வைத்து, வருடம் இருமுறை தான் கணக்குப் பரிசோதனை நடத்துவார்கள். அந்த நேரம் வந்ததும் எனது நிலைமை ரொம்ப பயங்கரமாகி விட்டது. தவறு நடந்திருப்பது வெளிப்பட்டால் என்னைப் போலிஸில் ஒப்படைத்து விடுவார்கள். அதன் பிறகு எனக்குப் பல ஆண்டு சிறைவாசம் கிடைக்கும்... என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லை. அவமானத்திற்கு ஆளாகி உயிர் வாழ்வதைவிட தற்கொலை செய்து கொள்வதே மேல் என்ற முடிவுக்கு வந்தேன். உன்னை அதுவரை சொந்தக்குழந்தை போல வளர்த்து வந்த கஜபதி குடும்பத்தினரிடமே ஒப்படைத்து விட்டு உயிர் போக்கிக் கொள்ளத் திட்டமிட்டேன். அப்பொழுது கஜபதிக்கு ஒரே ஒரு ஆண் குழந்தை - நமது சேகர் மட்டும் தான் இருந்ததால் பெண் குழந்தையான உன்னிடம் பவானிக்கு அளவுக் கடந்த பாசம் இருந்தது எனக்கு தெரியும். மறைமுகமாக கஜபதியிடம் பேச்சுக்கொடுத்து உன்னை ஏற்றுக் கொள்ளும் எண்ணம் அவருக்கு இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள முயன்றேன். மாகபுத்தி சாலியான கஜபதி இதில் ஏதோ சிக்கல் இருக்கிறதென்று புரிந்து கொண்டார். அவர் விடாமல் வற்புறுத்திக் கேட்டதால் உண்மையைக் கூறிவிட்டேன். கஜபதி என்னிடம் ரொம்பக் கோபித்துக் கொண்டார். பாங்கில் நான் கையாடல் செய்திருந்த பணத்தை எனக்கு ஏற்பாடு செய்து கொடுத்தார். அந்தப் பணத்தைக் கொண்டுபோய் நான் ஈடு செய்வதற்குள் எனது கையாடல் கண்டு பிடிக்கப்பட்டு விட்டது. இருந்தபோதிலும் நான் பணத்தைக் கட்டி விட்டதால் என்மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் என்னை ராஜினாமா செய்துவிட்டுப் போகும்படி முதலாளி வற்புறுத்தினார். வேலையை ராஜினாமா செய்வதைத் தவிர வேறு வழியில்லாததால் அதன்படியே செய்து விட்டு வெளியே வந்தேன். எனக்கு வேலை போய் விட்டதை அறிந்த கஜபதி,

**செங்கல்வராயன் மில்லி** லே இந்த வேலையை வாங்கிக் கொடுத்தார். இப்படி நமது குடும்பத்தையே நிலை நிறுத்திய புண்ணியவான் அந்த கஜபதி! அவர் குடும்பத்துக்கு இல்லாத பணம் நம்மிடம் எதற்கு இருக்க வேண்டும்?" என்று உணர்ச்சி பொங்கக் கூறினார்.

"செங்கல்வராயன் மில்லிலே சேகரின் அப்பாவுக்குப் பெரிய உத்தியோகமா?"

"இல்லை - செங்கல்வராயனின் வலது கையாக இருந்தார் கஜபதி. அவர் போட்டுக் கொடுக்கும் திட்டங்களை நிறைவேற்றித் தான் செங்கல்வராயன் இவ்வளவு பொருள் சேர்த்தார் என்று கேள்வி!" என்றார் வேதாசலம்.

"கஜபதி எங்கே அப்பா போனார்?"

"இறைவனுக்குத்தான் தெரியும்! திடீரென ஒரு நாள் மாயமாய் மறைந்து விட்டார்! அவர் மறைந்து பல தினங்கள் வரை செங்கல்வராயன் பேய் பிடித்தவர் போல வேதனையோடு நடமாடிக் கொண்டிருந்தார். இந்த உலகத்தில் கஜபதியின் மறைவு மற்ற எல்லோரையும் விட செங்கல்வராயனைத் தான் அதிகம் பாதித்திருக்க வேண்டும்! அவர் மறைந்தபிறகு செங்கல் வராயனுக்குக் கொள்ளை கொள்ளையகா பொருள் தேடும் திட்டங்களைச் சொல்லிக் கொடுக்க யார் இருக்கிறார்கள்?" என்று பெரு மூச்சோடு கூறினார் வேதாசலம்.

கொஞ்ச நேரம் வரையில் ஒன்றும் பேசாமல் தந்தையும் மகளும் தத்தம் சிந்தனையில் ஆழ்ந்து இருந்தார்கள்.

பரிமளா தனது சிந்தனையில் இருந்து மெதுவாக விடுபட்டவளாய் எழுந்தாள்.

"இதை அத்தையிடம் கொண்டுபோய் கொடுத்து விட்டு வந்து விடுகிறேன் அப்பா!"

"சரி" என்ற பாவனையில் தலையாட்டினார் வேதாசலம்.

பரிமளா அளவு கடந்த மன உற்சாகத்தோடு பவானியின் வீட்டை நோக்கி விரைந்தாள்.

அந்த அகால நேரத்திலே பணத்தோடு வந்திருக்கும் பரிமளாவைப் பார்த்ததும், பவானியின் கண்களிலே கண்ணீர் அரும்பியது.

"ஏன் பரிமளா இந்த இருட்டிலே ஓடி வந்தாய்?" என்று பவானி செல்லமாகக் கடிந்து கொண்டாள்.

"நாளைக் காலையிலே அவருக்கு தந்திமணியார்டரில் அனுப்பி விடுங்கள் அத்தை!" என்று உவகை பொங்கக் கூறிய பரிமளா "நான் நாளைய தினம் வருகிறேன்!" என்று கூறிவிட்டு தன் வீட்டுக்கு விரைந்தாள்.

பரிமளா கிளம்பிச்சென்று வெகுநேரம்வரை பவானி சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

பிறகு அவள் மெதுவாக தனது கணவர் கஜபதியின், புகைப் படத்தின் எதிரே போய் நின்றாள். சில வினாடிகள் வரை அந்தப் புகைப்படத்தையே வேதனையோடு பார்த்துக் கொண்டிருந்த பவானி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

பிறகு அவளது பார்வை சிறிது தூரத்தில் மாட்டப்பட்டிருந்த மற்றொரு புகைப்படத்தின் மீது சென்றது. அந்தப்புகைப்படத்தில் கஜபதியும் செங்கல்வராயனும் காட்சியளித்தனர்.

மில் முதலாளி செங்கல்வராயனின் படத்தைப் பார்த்ததும் பவானிக்கு ஆவேசம் தன்னை மீறிக் கிளம்பியது.

"பாவி கடைசியாக என்னைப் பிச்சைக்காரியும் ஆக்கி விட்டாயே!" என்று குமுறினாள்.

## 3

**பிரபல மில் முதலாளியான செங்கல்வராயனுக்கு கணக்கிட முடியாத அளவுக்கு சொத்து இருப்பதாக எல்லோரும் பேசிக்கொண்டார்கள். மொத்தம் பனிரெண்டு பஞ்சு ஆலைகளுக்கு அவர் அதிபராக இருந்து வந்தார். சம்பாதிக்கத் தொடங்கிய காலத்தில்**

**செங்கல்வராயனுக்கு தந்தை வழிச் சொத்தாக ஒரு பஞ்சாலை இருந்தது. அந்த ஆலையின் மீது அவரது தந்தை ஏராளமாகக் கடன் வாங்கி வைத்து விட்டுப் போயிருந்தார் ஆலையின் மதிப்பைப்போல பதினைந்துமடங்கு அதன்மீது கடன் சுமை ஏறி இருந்ததால் கடன் கொடுத்தவர்கள் எல்லாம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப் பயந்து, செங்கல்வராயனை தாஜா செய்தே தங்கள் பாக்கியை வசூலி** க்க முனைந்தார்கள்.

அந்த பஞ்சாலை நிர்வாகத்தை செங்கல்வராயன் ஏற்ற பொழுது அவரது பால்ய நண்பரான கஜபதிதான் அவருக்கு ஆலோசகராக இருந்து வந்தார். கிட்டத்தட்ட ஐந்து வருட காலத்திற்குள் செங்கல்வராயன் தனது "தந்தை வழி"க் கடனையெல்லாம் அடைத்து விட்டார். அடுத்த ஓராண்டுக்குள் இன்னொரு புதிய மில்லையும் விலைக்கு வாங்கி விட்டார். இதே போலப் பிரமிக்கத்தக்க முறையில் பொருள் ஈட்டி இப்பொழுது பனிரெண்டு ஆலைகளுக்கு அவர் அதிபராகி விட்டார்.

சொத்து சேரச்சேர, மேலும்மேலும் பொருள் சேர்க்க வேண்டுமென்ற ஆசை செங்கல்வராயனை வலுவாகப் பிடித்துக் கொண்டது. அதன் விளைவாக அவரது தாராள மனப்பான்மையெல்லாம் கொஞ்சங் கொஞ்சமாக மறைந்து, அவரிடம் கஞ்சத் தனம் குடிகொள்ள ஆரம்பித்து விட்டது. எல்லை கடந்து அவரிடம் பொருள் சேர்ந்து விட்ட போதிலும் அவருக்கிருந்த பெயர் அவ்வளவு விரும்ப தக்கதாக இல்லை. பண ஆசை பிடித்தவரென்றும் கிராதக மனம் படைத்தவரென்றும் அவரை எல்லோரும் கூறிவந்த போதிலும், அவரிடமிருந்த பணத்திற்கு அஞ்சி, அவரிடம் வெளிப்படையாக மரியாதை காட்டித்தான் வந்தார்கள்.

**செங்கல்வராயனின் மனைவி காமாட்சி இறந்து பல ஆண்டுகளாகி விட்டது. அவருக்கு மார்த்தாண்டன் என்ற மகனும் வசந்தா என்ற மகளும் இருந்தார்கள். தலைப்பிள்ளையான மார்த்தாண்டன் ஒரு அரைக் கிறுக்காக இருந்தான். அவனுக்கு வயது இருபத்தெட்டு இருக்கலாம் இருந்த போதிலும் பள்ளி** ப் படிப்பு கொஞ்சங்கூட இல்லாமல்

வீட்டிலேயே பைத்தியக்கார விளையாட்டுக்கள் விளையாடிக் கொண்டு பொழுதைக் கடத்தி வந்தான். அவனது தங்கை வசந்தா அவனுக்கு நேர் எதிரிடையானவள். படிப்புலே கலைமகளென்று ஆசிரியர்களால் புகழப்பட்ட வசந்தா கல்லூரியில் பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு இருபத்தோராவது வயது நடந்து கொண்டிருந்தது.

**செங்கல்வராயனுக்கு தனது அசட்டு மகன் மார்த்தாண்டன் மீது உயிர் என்றே சொல்ல வேண்டும். அவன் விஷயத்தில் தாய்க்குத்தாயாகவும், தந்தைக்குத் தந்தையாகவும் இருந்து வந்த செங்கல்வராயன், தனது மகன் எதைக் கேட்டாலும் தவறாது நிறைவேற்றி வைப்பார். சில சமயங்களில் அரைக்கிறுக்கனான மார்த்தாண்டன் திடீரென குதிரைச் சவாரியை நினைத்துக் கொண்டு தன் அப்பாவின் மீதே சவாரி செய்யக் கூப்பிடுவான்! அதற்கு உடனே செங்கல்வராயன் சம்மதிக்கா விட்டாலோ குதிரை சண்டித்தனம் செய்கிறதென்று மார்த்தாண்டன் கூச்சலி**ட்டு குதிரை சவுக்கை எடுத்து வந்து தன் அப்பாவையே அடித்து நொறுக்கி விடுவான்!

அன்றைய தினம் செங்கல்வராயன் மில்லிலே டைரக்டர்கள் மீட்டிங் நடந்து கொண்டிருந்தது. அங்கு குழுமியிருந்த டைரக்டர்களெல்லாம் செங்கல்வராயன் நிர்வகித்து வந்த பன்னிரண்டு மில்களிலும் டைரக்டர் பதவி வகித்து வந்தார்கள். ஒவ்வொருமில்லிலும் முக்கால் வாசிக்குமேல் பங்குகள். செங்கல்வராயன் வசம்தான் இருந்தபோதிலும். ஒப்புக்காக வெளி ஆட்கள் சிலரையும் சேர்த்து எல்லா மில்களையும் லிமிடெட் கம்பெனிக்காக அவர் பதிவு செய்து வைத்து இருந்ததற்குக் காரணம் வருமான வரியில் சலுகை பெறுவதற்காகத் தான். பொதுவாக இம்மாதிரி மீட்டிங்குகளில் செங்கல்வராயன் தனது திட்டங்கள் இன்னின்ன என்று வெளியிடுவார். அங்கு குழுமியுள்ளவர்கள் எல்லோரும் அதற்கு எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்காமல் மௌனமாக ஆமோதித்து விட்டுச் செல்லுவார்கள்.

**ஆனால் இந்த தடவை செங்கல்வராயன் வெளியிட்ட திட்டம் மிகவும் புரட்சிகரமாக இருந்தது. மௌனமாக ஆமாம் போடுபவர்கள் கூட சிறிது சந்தேகமும் திகிலும் கலந்த குரலில் தங்கள் எதிர்ப்பை வெளி** ப்படுத்த ஆரம்பித்தனர்.

இப்பொழுது இருக்கும் பன்னிரெண்டு பஞ்சாலைகளோடு, பதின்மூன்றாவதாக புதிய ஆலையொன்றை ஏற்று நடத்த வேண்டுமென்று, தான் தீர்மானித்திருப்பதாக செங்கல்வராயன் கூறியது தான் அந்தக் கூட்டத்தில் சிறிது சலசலப்பை ஏற்படுத்தியது.

"ரேணுகாமில் நிர்வாகிகள் தங்களால் மில்லை நிர்வாகம் செய்ய முடியவில்லையென்று தான் நம்மிடம் ஒப்புவிக்கிறார்கள். பார்க்கப் போனால் அங்கு உற்பத்தியாகும் நூலின் தரம் ரொம்பவும் உயர்ந்தது: நமது நிர்வாகத்தைப் போல அங்கு திறமையான நிர்வாகம் ஏற்பட்டால் அந்த மில்லின் மூலம் நமக்கு ஏராளமான லாபம் கிடைக்கும்" என்று தன்னம்பிக்கையோடு பேசினார் செங்கல்வராயன்.

"இருந்தாலும் அங்கு தொழிலாளர் தகராறு இருக்கிறதே!" என்று தன் ஆட்சேபனையை வெளியிட்டார் டைரக்டர்களில் ஒருவரான முத்தண்ணா.

"நம்மிடம் என்ன செய்துவிட முடியும்? ரொம்ப மீறினார்களானால், அந்த மில்லை ஆறு மாதத்திற்குப் பூட்டிப் போட்டு விட்டுப் போகிறோம்" என்று சர்வ அலட்சியமாகக் கூறினார் செங்கல்வராயன்.

"வீண் வம்பை விலை கொடுத்து வாங்கப் போகிறோம்!" என்று முணு முணுத்தார் தொண்டமான்.

"விலை கொடுத்து வாங்குவதானாலும் பணம் வேண்டுமே!" என்று சிரித்தார் தோத்தாத்ரி"

பணத்தைப் பற்றிய கவலையை எனக்கு விட்டு விடுங்கள்!" என்று தீர்க்கமாகக் கூறிய செங்கல்வராயன், "நாம் அந்த மில்லை வாங்கத்தான் போகிறோம்!" என்று ஒரே வரியில் கூறி முடித்தார்.

செங்கல்வராயனின் குரலில் காணப்பட்ட தீர்க்கம் மற்ற டைரக்டர்களெல்லோரையும் விழிப்படையச் செய்தது. தூக்கத்தில் பிதற்றுவதைப் போல, வழக்கத்திற்கு விரோதமாக ஏதோ எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டிருந்து விட்டோமே என்று உணர்வு பெற்றவர்கள் போல, சுறுசுறுப்பாக நிமிர்ந்து உட்கார்ந்து "ஆமாம்! ஆமாம்! வாங்கிவிட வேண்டியதுதான்!" என்று ஏக குரலில் முழங்கினார்கள்.

"காரியதரிசி" என்று குரல் கொடுத்தார் செங்கல்வராயன். மறு வினாடியே வேதாசலம் அவர் முன்னால் வந்து நின்றார்.

"கானு மில்ஸ் நிர்வாகிகளுக்கு ஐந்துலட்சம் ரூபாய்க்கு "ஒரு செக்" போட்டு அனுப்பி விடுங்கள். நமது வக்கீலிடம்சொல்லி விற்பனை பத்திரம் முதலியவைகளை உடனே தயார் செய்யச்சொல்லுங்கள்!" என்று உத்தரவிட்டார் செங்கல்வராயன்.

"ஆகட்டும் ஸார்!"

வேதாசலம் சென்ற பிறகு செங்கல்வராயன் தமது கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டார்.

"அடடா; மணி ஒன்றேகால் ஆகப்போகிறது! எனது பையன் சாப்பிடாமல் எனக்காகக் காத்துக் கொண்டிருப்பான்! நான் புறப்படுகிறேன்!" என்று செங்கல்வராயன் துள்ளியெழுந்தார்.

"புறப்படுங்கள், புறப்படுங்கள்! குழந்தையைக் காக்கவிடக் கூடாது!" என்று துடித்தார் தோத்தாத்ரி.

குறவனாகப் பிறக்காவிட்டாலும், காக்கா பிடிப்பதில் பிறவிப் பாண்டித்தியம் பெற்றிருந்த தோத்தாத்ரியை, தமது ஓரக் கண்ணால் ஒரு தினுசாகப் பார்த்தார் தொண்டைமான்.

அந்தக் குழுவினரிலேயே தொண்டைமான் ஒருவர் தான் செங்கல்வராயனிடம் எதையும் தைரியமாகப் பேசுவார். அவரது பார்வை மெதுவாக செங்கல்வராயன் பக்கம் திரும்பியது.

"செங்கல்வராயன்! உங்கள் பையன் மார்த்தாண்டனுக்கு இருபத்தெட்டு வயதாகிறது. அவனை இன்னமும் நீங்கள் ஒரு குழந்தை

போல வளர்த்து வருவது சரியல்ல; இந்த உலகத்தில் தனியே தானாக அவன் வாழ்க்கை நடத்துவதற்கு நீங்கள் தயார் செய்ய வேண்டும்."

செங்கல்வராயன் முகத்திலே ஒரு வேதனைப் புன்னகை படர்ந்தது. "நீங்கள் கூறுவதை ஒப்புக் கொள்ளுகிறேன் ஆனால் மார்த்தாண்டன் விஷயமே வேறு! அவனது குழந்தைப் பிராயத்தில் அவன் தனது தாயாரிடம் ரொம்பவும் ஒட்டிக் கொண்டிருந்தான் தாயாரின் திடீர் மரணம் அவனை ரொம்பவும் அதிர்ச்சியடையச் செய்துவிட்டது. அதனால் அவனது புத்தியே மாறாட்டம் அடையும் நிலைமைகூட ஏற்பட்டுவிட்டது. அந்த வேதனையை அவன் உணராமல் வளர்த்து வரவேண்டும் என்றுதான், இன்னும் அவனைச் சிறு குழந்தை போலச் சீராட்டி வளர்த்து வருகிறேன். இப்படி அவனை வளர்த்து வருவதால், வாழ்க்கையில் அவனால் தனித்து இயங்க முடியாமல் போய் விடக்கூடிய அபாயமும் இருக்கிறது. இருந்த போதிலும் என்னிடம் இருக்கும் ஏராளமான சொத்தை வைத்துக்கொண்டு அவன் ஆயுட்காலம் முழுவதையும் நிம்மதியாகக் கடத்திவிட முடியுமாதலால், அவன் எப்படியாவது உயிரோடு இருந்தால் போதுமென்று தான் நான் நினைக்கிறேன் என்றார்.

இதுவரை மௌனமாக இருந்த சிவகுருநாதபடையாச்சி என்ற ஒரு டைரக்டர். "உங்கள் மனைவி எப்படி இறந்தாள்?" என்று ஆதரவாகக் கேட்டார்.

"அந்த வேதனையைக் கேட்க வேண்டாம்!" என்று கூறியபடி விர்ரென்று வெளியே நடந்தார் செங்கல்வராயன்.

அவர் நகர்ந்து சென்றதும் தோத்தாத்ரி சிவ குருநாத படையாச்சி பக்கம் திரும்பி அவரைக் கடிந்துகொள்ளும் தோரணையில் "வேதனையை எல்லாம் ஏன் ஐயா கிளப்புகிறீர்? என்று கடுமையாகக் கேட்டார்.

"கா-கா-கா" என்று கரைந்தார் தொண்டைமான்.

◆ ◆ ◆

செங்கல்வராயன் தமது மாளிகையை அடைந்தபோது சாப்பாட்டுக் கூடத்தில் அவரது வருகைக்காகக் காத்திருந்தான் மார்த்தாண்டன்.

சாப்பாட்டுக் கூடத்திலே ஒரு நீளமான மேஜை போடப்பட்டிருந்தது. அதன் அருகில் போடப்பட்டிருந்த நாற்காலிஒன்றில் மார்த்தாண்டன் உட்கார்ந்திருந்தான். மற்றொரு நாற்காலியில் அவனது வளர்ப்பு நாயான ஜோகர் உட்கார்ந்து இருந்தது. ஜோகர் ஒரு அல்சேஷியன் நாய் கிட்டத்தட்ட ஒரு கன்றுக்குட்டி உயரம் வளர்ந்திருந்த அந்த நாய் மீது மார்த்தாண்டன் தன் உயிரையே வைத்திருந்தான். அதனால் செங்கல்வராயனோடு உட்கார்ந்து சமபந்தி போஜனம் செய்யும் அதிர்ஷ்டம் அந்த நாய்க்குக் கிடைத்திருந்தது.

"ஏன் அப்பா இவ்வளவு நேரம்?" என்று சிணுங்கினான் மார்த்தாண்டன்.

**"இன்று ஒரு முக்கியமான மீட்டிங் நடந்தது மார்த்தாண்டா, அதனால் தான் நேரமாகிவிட்டது!" என்று கெஞ்சுங்குரலி** ல் கூறிய செங்கல்வராயன், உனக்கு ரொம்பம் பசியாக இருக்கிறதா? என்று ஆதரவோடு கேட்டார்.

"இல்லை" என்று தலையாட்டினான் மார்த்தாண்டன்.

"ஏன்?" என்று வியப்புடன் கேட்டார் செங்கல்வராயன்.

"வந்த பசி போய் விட்டது"

"அடடா பாவம்" என்று கழிவிரக்கங் கொண்ட செங்கல் வராயன், தமது பணியாள் பக்கம் திரும்பி, "சீக்கிரம் பரிமாறு" என்று உத்தரவிட்டார்.

பணியாள் படபடப்போடு பரிமாற ஆரம்பித்தான்.

"ஏதாவது தபால் வந்ததா?" என்று கேட்டார் செங்கல்வராயன்.

"வந்திருக்கிறது இதோ கொண்டு வருகிறேன்" என்று தனது பரிமாறும் வேலையை முடித்துக் கொண்டு ஹால் பக்கம் சென்ற பணியாள் ஒரு கவருடன் திரும்பி வந்தான்.

செங்கல்வராயன் அந்தக் கவரின் மேலுள்ள விலாசத்தைப் பார்த்தார். "உன் தங்கை வஸந்தா எழுதியிருக்கிறாள்" என்று அவர் மார்த்தாண்டனை நோக்கிக் கூறியபடி அந்தக் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தார்.

மார்த்தாண்டன் தன் நாய்க்குச் சாதத்தைப் பிசைந்து வைத்து விட்டு, தந்தையின் பக்கம் திரும்பி ஆவலாக "என்னப்பா வஸந்தா எழுதியிருக்கிறாள்?" என்று கேட்டான்.

**"இரண்டு நாட்களில் பரீட்சை ஆரம்பிக்கப் போகிறதாம் அவசரமாக பணம் அனுப்பச் சொல்லியிருக்கிறாள்" என்று கூறிய செங்கல்வராயன் தமது பணியாள் பக்கம் திரும்பி "உடனே ஆபீஸக்கு டெலி** போன் செய்து வசந்தாவுக்கு ஆயிரம் ரூபாய் தந்தி மணியாடர் செய்யச் சொல்லு என்றார்.

அந்தப் பணியாளும் வேகமாகக் கூடத்தை நோக்கி நடந்தான்.

மார்த்தாண்டன் தனது சாப்பாட்டைவிட, நாயின் சாப்பாட்டு விஷயத்தில் தான் அதிக அக்கறை கட்டினான் செங்கல்வராயன் அவனை அடிப்படி செல்லமாகக் கடிந்து கொண்டு சாப்பிடச் செய்தார்.

சொல்லப் போனால் மார்த்தாண்டனின் சொந்த விஷயங்கள் ஒவ்வொன்றிலும் யாராவது ஒருவர் தூண்டு கோலாக இருந்து அவனைச் செய்ய வைக்க வேண்டியிருந்தது. அந்தத் தூண்டு கோல் செங்கல்வராயனாகத் தான் இருந்து, அவரது மூர்க்க சுபாவத்திற்கும், அவருக்கிருந்த ஏராளமான வேலைகளுக்கும், அவர் அவ்வளவு பொறுமையாக மார்த்தாண்டனிடம் நடந்து கொள்வதைப் பார்ப்பவர்கள் பிரமித்துப் போய்விடுவார்கள். இருந்தபோதிலும் அவரது வாழ்க்கையிலே அவரிடமிருந்த ஒரே பலவீனம் புத்திர வாஞ்சை ஒன்றுதான். அந்தநாள் தசரதனையும் மிஞ்சும் அளவுக்கு அந்தபாசம் அவரிடம் குடிகொண்டிருந்தது.

"தங்கச்சி வசந்தா எப்பொழுது அப்பா வருவாள்?"

**"பத்துப் பதினைந்து நாட்களி** ல் வந்து விடுவாள்."

"மறுபடி எப்பொழுது திரும்பிப் போவாள்?"

"இனி அவள் போகமாட்டாள். இப்பொழுது எம்.ஏ. பரிட்சை எழுதிவிட்டு வருவாள். அதோடு அவள் படிப்பு முடிந்து விடுகிறது" என்று கூறியபடி சாப்பாட்டில் முனைந்தார் செங்கல்வராயன்.

ஜோகர் நாய் தன்னுடைய சாப்பாட்டை முடித்துக் கொண்டு விட்டதால், மார்த்தாண்டனின் கவனமும் சாப்பாட்டில் திரும்பியது.

## 4

**தபால்காரரின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு தன் அறையிலே உட்கார்ந்திருந்த சேகருக்கு, அவரது வருகை ஏமாற்றத்தைத் தான் அளி** த்தது. தன் தாயார் எப்படியும் அன்றையத் தினம் தனக்குப் பரீட்சைக்கும் பணங்கட்ட மணியார்டர் அனுப்பியிருப்பாளென்ற திட நம்பிக்கையோடு காத்திருந்தான் சேகர். ஆனால் அந்தத் தபால்காரர் ஒரு அறிமுகப் புன்னகையோடு தன் அறையைக் கடந்து சென்றதைப் பார்த்ததும் அவன் மனம் மிகவும் சோர்வடைந்தது.

**தன் அம்மா, தனக்குப் பணம் அனுப்ப எவ்வளவு சிரமப்படுகிறாள் என்பதை சேகர் அறிந்துதான் இருந்தான். இருந்தபோதிலும் இந்த ஒரு தடவை மட்டும், எம்.ஏ. பரீட்சைக்குப் பணம் கட்டுவதற்கு மட்டும்** - அவள் பணம் அனுப்பி விட்டாளானால், அதன் பிறகு அவளை தன் வாழ்நாள் முழுவதும் தொந்தரவு செய்ய மாட்டான். அது மட்டுமல்லாமல் இதுவரை தன்னைக் கஷ்டப்பட்டுப் படிக்க வைத்த தனது அன்னையை, தன் வாழ்நாள் முழுவதும் போக பாக்கியத்தில் வைத்திருக்க அவன் திட்டம் போட்டு இருந்தான். பொருளாதாரத்தில் எம்.ஏ. பட்டம் வாங்கி விட்டால், தனக்கு மிகச் சுலபத்தில் வேலை கிடைக்குமென்று சேகருக்குத் தெரியும். இருந்த போதிலும் அந்தப் பரீட்சைக்குப் பணங்கட்டவே அவனது பொருளாதார நிலை இப்பொழுது சரியாக இல்லை.

**தந்தையின் திடீர் மறைவுக்குப் பிறகு தன் தாய் எவ்வளவு சங்கடங்களுக்கு இடையே தனக்குபணம் ஏற்பாடு செய்து** அனுப்புகிறாள்

என்பதை சேகர் அறிந்திருந்த போதிலும், இந்த ஒரு தடவையும் அவள் எப்படியாவது பணத்தைத் தோது செய்து அனுப்பிவிட வேண்டுமென்ற தவிப்பு அவனுக்கு ஏற்பட்டிருந்தது. ஆனால் அந்தப் பணம் இன்னும் வரவில்லை... பரீட்சைக்குப் பணங்கட்ட இன்னும் ஒரே ஒருநாள் தான் தவணை இருந்தது.

**அளவு கடந்த சஞ்சலத்தோடு தன் அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான் சேகர். அந்த இடத்தை ஒரு அறை என்று அழைப்பதைவிட ஒரு "பொந்து" என்று அழைப்பதே பொருத்தமாக இருக்கும். எட்டடி நீளமும் ஆறடி அகலமுமுள்ள அந்த அறைக்கே அவன் மாதம் ஏழு ரூபாய் வாடகை கொடுக்க வேண்டியிருந்தது. ஹாஸ்டலில் சேர்ந்து படிக்கப் பணவசதியில்லாததால் அவன் அந்த அறைக்குள் அடைபட்டுக் கிடக்க வேண்டியிருந்தது. சாப்பாட்டுச் செலவையும் மிகச் சிக்கனமாக முடித்துக் கொள்வதற்காக ஒரு வீட்டிலே நானூறு ரூபாய் கொடுத்து மூன்று வேளையும் சாப்பிட்டுச் சமாளி**த்து வந்தான். எல்லாம் இன்னும் சில தினங்களுக்குத்தான் - இந்த ஒரு எண்ணம்தான் அவனை மனத்தென்புடன் இருந்து வரச் செய்தது. இருந்த போதிலும் பரீட்சைக்குப் பணம் கட்ட இன்னும் மணியார்டர் வரவில்லை...

இப்படி என்னென்னவோ சிந்தனைகளில் சிக்கி மனதை அலைபாய விட்டுக் கொண்டிருந்த சேகர், வெளியே ஒரு கார் நிற்கும் சத்தம் கேட்டு, சட்டென்று ஜன்னல் வழியாக வீதிப்புறம் கவனித்தான். வசந்தா தான் - செங்கல்வராயனின் மகள் வசந்தாதான் - ஒரு வாடகைக் காரிலிருந்து கீழே இறங்கிக் கொண்டிருந்தாள்.

இருவரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்களென்பதை விட, சேகருக்கும் வசந்தாவுக்கும் இடையில் ஆழ்ந்த பாசமும் இடம் பெற்றிருந்தது. பொருளாதாரத் துறையில் தங்கள் இருவருக்கும் இடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகளை, அவர்கள் தனித்திருக்கும் பொழுது சிந்தித்ததே இல்லை. அதற்கு மாறாக, தங்கள் வருங்கால வாழ்க்கையையே ஒன்றாகப் பிணைத்துக் கொள்ளும் எண்ணம் இருவருக்கும் இருந்தது.

**பல மில்களுக்கு அதிபரான செங்கல்வராயனின் மகள் வசந்த எந்த நேரத்திலும் குதூகலத்துடன் தான் காட்சி அளி** த்தாள். அவள் மனச்சோர்வு அடைய வேண்டிய நிலையை அவளது வாழ்க்கையில் இதுவரை ஏற்பட்டதே இல்லை என்று கூறிவிடலாம். அதுவும் அன்றையத்தினம் அவள் அளவுகடந்த குதூகலத்துடன் காணப்பட்டாள்.

சேகர் தன் சோர்வையெல்லாம் மிகச் சிரமப்பட்டு மறைத்துக் கொண்டு வசந்தாவைப் புன்னகையுடன் வரவேற்றான்.

**"புறப்படுங்கள்! எங்காவது வெளி** யே போய்விட்டு வரலாம்! ஓய்வு ஒழிவில்லாமல் புத்தகங்களையே கட்டி அழுதால் மூளை மறத்துப் போய்விடும்!" என்றாள் வசந்தா அழகான ஒரு புன்முறுவலுடன்.

"இப்போது எங்கும் கிளம்பும் நிலையில் என்மனநிலை இல்லை" என்று எங்கோ பார்த்தபடி கூறினான் சேகர்.

"பரீட்சைக்குப் பணம்கட்டி விட்டால் அந்த மனநிலை வருமா" என்று இடக்காகக் கேட்டாள் வசந்தா.

"........."

**"கவலைப் படாதீர்கள்!" என்று உற்சாகத்துடன் தொடர்ந்து கூறிய வசந்தா, தன் கைப் பையைத் திறந்து ஒரு ரசீதை எடுத்து அவனிடம் நீட்டியவளாய், "இந்தாருங்கள்" நானே உங்களுக்காகப் பணங்கட்டி ரசீது வாங்கி வந்து விட்டேன்! கோபப்படாதீர்கள்! உங்களிடம் பணம் வந்ததும் எனக்குக் கொடுங்கள்" என்று கூறி விட்டு, கைக் கடிகாரத்தைப் பார்த்தவளாய் அவசரமாக, "சரி சரி! புறப்படுங்கள்! நேரமாகிறது! பிரகாசம் ஹோட்டலில் மத்தியான சாப்பாட்டை முடித்துக் கொண்டு தேவி தியேட்டருக்குப் போகலாம். காதலர்களி** ன் ஆசை என்ற நல்ல ஆங்கிலப் படம் நடக்கிறது!" என்று துரிதப் படுத்தினாள்.

"என்னைக் கேட்காமல் என் பரீட்சைக்கு நீ ஏன் பணம் கட்டினாய்?" என்று மனத்தாங்கலோடு கேட்டான் சேகர்.

"கேட்டால் மறுப்பீர்கள். அதனால்தான் கேட்காமலே கட்டினேன்!" என்று சிரித்தபடி கூறிய வசந்தா, "நீங்கள் ஒரு விசித்திரமான மனிதர்!

நமக்குள் ஏன் ஜம்ப உணர்ச்சிகள் எல்லாம் தலைதூக்க வேண்டும்!" என்று செல்லமாகக் கடிந்து கொண்டாள்.

**சேகரால் எதுவும் பேச முடியவில்லை. என்னதான் தன் உள்ளங்கவர்ந்த காதலியென்றாலும் அவளி** டம் பண உதவி பெறுவது அவனுக்குக் குறையாகவே தோன்றியது.

இருந்தபோதிலும் அதற்குமேல் அதைப்பற்றித் தர்க்கம் செய்ய அவனுக்குத் துணிவில்லை. "மறு வார்த்தை பேசாமல் ஆடைகளை மாற்றிக் கொண்டு வசந்தாவுடன் புறப்பட்டான்."

## *5*

ரேணுகா மில்ஸ் நிர்வாகம் செங்கல்வராயனைவிட வேதாசலத்தைத்தான் அதிக அவஸ்தைப்படுத்தியது என்று கூற வேண்டும்.

செங்கல்வராயனின் காரியதரிசியான வேதாசலம் தான் புது மில்லின் நிர்வாகத்தையும் கவனித்துச் சீர் செய்ய வேண்டியிருந்தது.

அன்று காலை வழக்கம் போல வேதாசலம் தன் ஆசனத்தில் வந்து உட்கார்ந்ததும் டெலிபோன் மணி கணகணவென்று அடித்தது.

**நெருக்கடியான கட்டத்தை ரேணுகா மில்ஸ் கடந்து கொண்டிருந்ததால் அந்த டெலிபோனில் எப்படிப்பட்ட செய்தி வருமென்று வேதாசலத்திற்கு நன்றாகத் தெரியும். இருந்த போதிலும் உரலுக்குள் தலையை விட்டுவிட்டு உலக்கை இடிக்குப் பயப்படுவதில் அர்த்தமில்லையாதலால் தயங்கியபடியே டெலி** போன் கருவியைக் கையில் எடுத்து, "இது ரேணுகா மில்ஸ்!" என்று மெதுவாகக் கூறினார்.

**"வேறு என்னவாக இருக்க முடியும்?" என்று டெலிபோனின் மற்றொரு முனையிலி** ருந்து முழங்கியது ஒரு காண்டாமிருகக் குரல்.

"யார் சார், அவ்வளவு கோபமாகப் பேசுவது," என்று பணிவன்புடன் கேட்டார் வேதாசலம்.

"என்னைத் தவிர வேறு எந்த மடையன் பேசுவான்?" என்று மீண்டும் கர்ஜித்தது அந்தக் காண்டாமிருகம்!

"எத்தனையோ பேர் இருக்கிறார்கள்... என்று இழுத்தார் வேதாசலம்.

**"அத்தனை மடையவர்களில் நானும் ஒருவன்!" என்று கர்ண கடூரமாகக் கர்ஜித்த அந்த காண்டாமிருகக் குரல். "நான் தான் பாங்க் மேனேஜர் பேசுகிறேன்! உங்கள் கையில் நான் "செக்" புத்தகம் கொடுத்ததும் போதும்; உங்கள் கடன் காரர்களுக்கு எல்லாம் நான் ஜவாப் சொல்லி சாவதும் போதும்! கொடுத்த கடனைக் கேட்டு** உங்களை "மரியாதை செய்ய" கடன் காரர்கள் வந்தால் பாங்கில் பணமில்லாதபோதே, "செக்"கின் மேல் "செக்"காக எழுதிக்கொடுத்து அவர்களை எங்கள் மேல் ஏவி விட்டு விடுகிறீர்களே! அதுவும் எங்கள் பாங்க் செகரட்டரி நேற்று "இன்ஸ்பெசஷ"னுக்காக வந்திருந்த போது உங்கள் வெத்துத் "தோட்டா"க்களாக ஏழெட்டு வந்து விழுந்தன! நான் வாடிக்கைக்காரர்கள் பிடித்து வைத்திருக்கும் லட்சணத்தைப் பார்த்து எங்கள் செகரட்டரி காரித் துப்பிவிட்டுப் போனார் - அதுவும் சும்மா அல்ல; வெற்றிலைபாக்குப் போட்டுக் காரித்துப்புவதுபோல சிகப்பு மசியால் ராமாயணமாக எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறார்!" என்று கர்ஜித்தார்.

"கோபித்துக் கொள்ளாதீர்கள்! எதிர்பாராதவிதமாக பணம் இல்லாமல் போய்விட்டது..." என்று திக்கினார் வேதாசலம்.

"பணம் இல்லாமல் போய் விட்டால் எங்கள் பச்சை நிற "செக்" காகிதத்தில் எழுதி அனுப்பக்கூடாது - அதற்காக சர்க்காரே செலவழித்து மஞ்சள் நிறக் கடுதாசி அடித்து வைத்து இருக்கிறார்கள். அதில் எழுதி கையெழுத்துப் போட்டு அனுப்ப வேண்டிய இடத்திற்கு அனுப்பினால் கடன்காரர் நெற்றியில் நிரந்தரமாக - பட்டை பட்டையாக- ரங்கனாதரைக் குழைத்துச் சாத்திவிடலாம்!" என்று சீறிய மூவேந்தர் பாங்க் ஏஜண்ட், "உடனே எங்கள் "செக்" புத்தகத்தைத் திருப்பி அனுப்பி உங்கள்

கணக்கிற்கு இறுதி ஈமச்சடங்கு செய்து கொள்ளுங்கள்!" என்று கத்தினார்.

**வேதாசலம் ஒன்றும் பேசாமல் டெலிபோனை டக்கென்று வைத்துவிட்டார். அளவு கடந்த சஞ்சலத்தால் அவர் முகம் மாறியது இந்தப் புது மில்லை வாங்கியதில் இருந்து செங்கல் வராயனின் ஸ்தாபனங்கள் எல்லாம் மிகவும் ஆட்டங்கண்டு போயிருப்பது அவருக்குத் தெரியும். எக்காரணத்தாலோ திடீரென ஒரு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு பல இடங்களி**ல் செங்கல்வராயனை நாணயங் கெடச் செய்திருந்தது. இதே நிலையில் இன்னும் சில நாட்கள் விவகாரங்கள் நடந்து வந்தால், எல்லா ஸ்தாபனங்களுமே பயங்கரமான ஆட்டங்கண்டு கவிழ்ந்து விடக்கூடும் என்று வேதாசலத்திற்குத் தோன்றியது.

பாங்கிற்கு அனுப்பப்பட்ட "செக்"குகள் பணமம் இல்லாமல் திருப்பப்பட்டு விட்டதை அறிந்ததும் வேதாசலம் மிகவும் சங்கடத்திற்கு ஆளாகிவிட்டார். எப்பாடுபட்டாவது குறிப்பிட்ட நேரத்திற்குள் பாங்கிற்குப் பணம் அனுப்புவதாகக் கூறிச் சென்றிருந்த செங்கல்வராயன் எக்காரணத்தாலோ தவறி விட்டார். இதற்கு முன்னால் இப்படிப்பட்ட நெருக்கடிகள் செங்கல்வராயனுக்கு ஏற்பட்டிருந்த போதிலும் எப்படியும் கடைசி நேரத்தில் பாங்கில் பணத்தைக் கட்டிவிடுவார். இந்த தடவை அவர் தவறி விட்டார் - எதனால்? வேதாசலத்திற்கு அதன் காரணம் என்னவென்று புரியா விட்டாலும் அம்மாதிரி தவறியதால் ஏற்படக் கூடிய விளைவுகள் எவ்வளவு அபாயகரமானவை என்று நன்றாகத் தெரியும்.

**எந்த வினாடியும் எந்த இடத்திலிருந்தும் தாக்குதல் வரக் கூடுமென எதிர்பார்த்த வேதாசலம் கடவுளி**ன் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு அன்றையத் தபால்களைப் புரட்ட ஆரம்பித்தார்.

மீண்டும் டெலிபோன் மணி "கணகண" வென்று அடித்தது.

திகிலோடு டெலிபோனைக் கையிலெடுத்தார் வேதாசலம்.

"நான்தான் ஹரே ராம் கோவிந்தராம் பேசுகிறேன்!" என்று கரகரத்தது டெலிபோன் கருவி.

"ஹரே ராம்! ஹரே ராம்!" என்று மனதிற்குள் ஈஸ்வர பஜனை செய்து கொண்டார் வேதாசலம்.

"வட்டிப் பணத்திற்கு நீங்கள் கொடுத்த "செக்"கே திரும்பி விட்டது! என் அசல் பணம் என்ன ஆவது? "ஸ்வாஹா" தானா?"

"ராம்! ராம்! அபச்சாரம், அபச்சாரம்!" என்று பதறினார் வேதாசலம்.

"எது ஐயா அபச்சாரம்? நீர் "வெத்து" செக் கொடுத்தது அபச்சாரமா அதை நான் கேட்பது அபச்சாரமா?" என்று குமுறினார் ஹரேராம் கோவிந்தராம்.

"உங்களுக்கு எதுதான் அபச்சாரம்? கைநீட்டி வாங்கிய, அசல் பணத்தைத்தான் வாயில் போட்டுக் கொள்ளப் பார்த்தாலும் வட்டியையும் அதற்கு "சட்னி"யாக தொட்டுக் கொண்டு விழுங்கப் பார்க்கிறீர்களே! பலே "குல்மால்" பேர்வழிகளாக இருக்கிறீர்களே! எண்ணி இருபத்து நான்கு மணிநேரத்தில் என் கணக்கைத் தீர்த்துக் கொள்ளுங்கள்! இல்லாவிட்டால் ரொம்பச் சங்கடப்படுவீர்கள்!" என்று இறுதி எச்சரிக்கை விட்ட ஹரேராம் கோவிந்தராம் டெலிபோன் கருவியை "டக்" கென்று வைத்து விட்டார்.

முகத்தில் வழியும் வியர்வையைத் துடைத்து விட்டுக் கொண்ட வேதாசலம், எதிரே மேஜைமீதிருந்த டெலிபோன் கருவியைப் பரிதாபமாகப் பார்த்தார். சில சமயங்களில் தோன்றாத் துணைவனாக இருக்கும் டெலிபோன் கருவி, இம்மாதிரி சமயங்களில் யமனாக அல்லவாமாறி விடுகிறது!....

மனதை ஒருவாறு தேற்றிக்கொண்ட வேதாசலம் மீண்டும் கடிதங்களைப் புரட்டலானார். மறுபடியும் டெலிபோன் மணி "கணகண" வென்று அடித்தது.

இந்தத் தடவை தொலை தூர அழைப்பு (டிரங்கால்) வந்திருந்தது. ஆந்திராவிலுள்ள "தம்படபட்டா" என்ற இடத்தில் இருந்து "தம்புண்டா" என்ற பஞ்சு வியாபாரி பேசினார்!

**"உங்கள் செக்" திரும்பிவிட்டதாக எங்கள் சென்னை ஏஜண்ட் டெலி** போன் செய்தார். உங்களுக்கு அனுப்ப ஒப்பந்தம் செய்த பஞ்சு நிறுத்தப்பட்டுவிட்டது!" என்று எடுத்த எடுப்பில் கச்சிதமாகக் கூறினார் தம்படபட்டா தம்புண்டா!

"வேண்டாம் வேண்டாம்! பஞ்சை நிறுத்தாதீர்கள்! எங்கள் மில்கள் வேலை இல்லாமல் சங்கடப்பட்டுப் போய்விடும்!" என்று கெஞ்சினார் வேதாசலம்.

"பரவாயில்லை!" என்று ஆறுதல் கூறினார் தம்படப்பட்டா தம்புண்டா!

"எது பரவாயில்லை?- தம்புண்டா காரு! பஞ்சு இல்லாமல் நாங்கள் மில்களை வைத்துக்கொண்டு என்ன செய்வது? என்று தவித்தார் வேதாசலம்.

"மூடி விடுங்கள்!" என்று யோசனை கூறினார் தம்படபட்டா தம்புண்டா!

"அப்படிச் சொல்லாதீர்கள், தம்புண்டாகாரு! நாளைய தினமே "டிராப்ட்" எடுத்து குறியரில் அனுப்புகிறோம். இன்று சரக்கை அனுப்பிவிடுங்கள்!" என்று பரம தாழ்மையான குரலில் கெஞ்சினார் வேதாசலம்.

**"பணம் வந்தால் பஞ்சு வரும்! பணம் வல்லே, பஞ்சு இல்லே!" என்று கறாராகப் பேசிய தம்புண்டாகாரு டெலி** போனை வைத்துவிட்டார்.

நிலைமை மிகவும் மோசமாக மாறிவிட்டதை உணர்ந்த வேதாசலம், அடுத்தபடியாக என்ன செய்வது என்று புரியாமல் கற்சிலை போல் உட்கார்ந்திருந்தார்.

அந்தச் சமயத்தில் செங்கல்வராயன் உள்ளே நுழைந்தார்.

அவரிடம் நடந்த விபரங்களையெல்லாம் எடுத்துக் கூறினார் வேதாசலம். செங்கல்வராயன் மௌனமாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தார். அவரது முகம் விகாரமாக மாறியது.

"நாம் ரொம்பவும் அகலக் கால் வைத்துவிட்டோம்!" என்று படபடப்புடன் கூறிய வேதாசலம், "சிறுகக் கட்டிப் பெருக வாழ்வதற்குப் பதிலாக, பெருகக்கட்டி பெரிய அவஸ்தையில் மாட்டிக் கொண்டிருக்கிறோம்!" என்றார்.

"நான்சென்ஸ்!" என்று எரிச்சலாகக் கூறிய செங்கல்வராயன், "குடி ஒன்றும் முழுகப் போகவில்லை! பணத்திற்கு ஆள் அனுப்பிவிட்டேன். அவன் விரைவில் கொண்டுவந்து விடுவான். பிறகு எல்லாம் சரியாகிவிடும்!" என்று அவசரமாகக் கூறிவிட்டு, "தபால்களெல்லாம் எங்கே? எடுத்து வாருங்கள்!" என்று கட்டளையிட்டார்

## *6*

**நிம்மதியில்லாமல் தன் அறையிலே குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார் செங்கல்வராயன். அவருடைய மூர்க்கத்தனமெல்லாம் உள்ளடங்கி அடிக்கடி அவரது பார்வை கைக் கடிகாரத்தின் மீது சென்றது. வினாடிக்கொரு தடவை வாயிற்படிப் பக்கம் ஆவலாகப் பார்த்தபடியிருந்தார். யாருடைய வரவையோ எதிர்நோக்கி அவர் பொறுமையிழந்து தவிப்பது தெளி**வாகத் தெரிந்தது.

அந்தச் சமயத்தில் பரபரப்போடு அவர் இருந்த அறையில் நுழைந்தான் சம்பந்தம். அவன் தான் செங்கல்வராயனின் வலது கை! நன்றியுள்ள வேட்டை நாய்க்குச் சமமானவன்.

"எவ்வளவு நேரம் உனக்காகக் காத்துக் கொண்டிருப்பது?" என்று சீறினார் செங்கல்வராயன்.

"அவனுக்கு ரொம்ப திமிர் பிடித்திருக்கிறது!" என்று முனகினான் சம்பந்தம்.

"அவனிடம் ஏதாவது முரட்டுத்தனமாக நடந்து கொண்டு விட்டாயா?" என்று அவசரமாகக் கேட்டார் செங்கல்வராயன்.

"இல்லை, இல்லை!" என்று தவித்தான் சம்பந்தம்.

"அவனிடம் நம்முடைய ஆத்திரத்தைக் காட்டுவதற்கு இது நேரமல்ல, அவனுடைய தயவு இப்பொழுது நமக்கு நிரம்பத் தேவைப்படுகிறது போகட்டும்; எவ்வளவு பணம் கொண்டு வந்திருக்கின்றாய்?"

"பத்து லட்ச ரூபாய்!" என்று கூறியபடி நூறு நோட்டு கட்டுகளை செங்கல்வராயனிடம் கொடுத்தான் சம்பந்தம்.

செங்கல்வராயன் ஒரு அலமாரியைத் திறந்து உள்ளே இருந்த பூதக்கண்ணாடி ஒன்றை எடுத்தார். ஒவ்வொரு கட்டாகப் பிரித்து ஒவ்வொரு நோட்டாக எடுத்து பூதக்கண்ணாடியால் ஆராய்ச்சி செய்து பார்த்தார். அந்த வேலை முழுவதையும் செய்து முடிக்க அவருக்கு மூன்றரை மணிநேரம் பிடித்தது.

**கடைசியாகத் திருப்தியடைந்தவராய் செங்கல்வராயன் அந்த நோட்டுக் கட்டுக்களையெல்லாம் ஒரு பெரிய இரும்புப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டினார். அவர் முகத்திலே நிம்மதி படர்ந்தது. அவரை எதிர் நோக்கியிருந்த பல அபாயகரமான கடன்களை இந்தப்பணத்தைக் கொண்டு அவரால் சமாளி** த்து விடமுடியும்.

இந்த மனத் திருப்தியோடு செங்கல்வராயன் தம் மேஜைமீது கிடந்த தோல்பை ஒன்றை எடுத்தார். அந்தப் பைக்குள் ஏழெட்டு நூறுரூபாய் நோட்டுக்கள் இருந்தன. அவற்றிறை எடுத்து சம்பந்தத்திடம் நீட்டினார் செங்கல்வராயன் அவற்றை ஆவலோடு வாங்கிக் கொண்டான் சம்பந்தம்.

இருவரும் அந்த அறையை விட்டு வெளியேறி ஒரு சிறு வராந்தாவை அடைந்தனர். அப்பொழுது செங்கல்வராயனின் பணியாள் ஒருவன் வேகமாக அங்கே வந்தான்.

"ஸப் இன்ஸ்பெக்டர் ராமசேஷன் உங்களைப் பார்ப்பதற்கு வந்திருக்கிறார்."

ஸப் இன்ஸ்பெக்டர் ராமசேஷனின் பெயரைக் கேட்டதும் செங்கல்வராயனுக்கு வியர்த்துக் கொட்டியது. அந்த வட்டாரத்திலேயே

மிகவும் கண்டிப்பான போலீஸ் அதிகாரி என்ற பட்டப் பெயர் ராமசேஷனுக்குக் கிடைத்திருந்தது. அதோடு உயர்தரமான கல்விப் பயிற்சியும், இலக்கியரசனையும் படைத்திருந்த ராமசேஷன் பரம்பரையாகக் கண்யம் மிகுந்த குடும்பத்தில் பிறந்தவராதலால் அவரிடம் உயரிய பண்புகளும், நேர்மை உணர்ச்சியும், எதற்கும் அஞ்சாத குணமும் குடிகொண்டிருந்தன. "கொடுக்க வேண்டியதைக் கொடுத்து, பெற வேண்டியதை பெறுவது" போன்ற லௌதீக தத்துவங்களெல்லாம், ராமசேஷனின் முன்னால் தவிடு பொடியாகி விடுமாதலால் குற்றம் புரிவோரெல்லாம் அவர் பெயரைக் கேட்டாலே நடுநடுங்கி வந்தார்கள்.

அப்படிப்பட்ட ராமசேஷன் எதற்காகத் தன்னைத் தேடி வந்திருக்கிறார்? ஒருவேளை சம்பந்தத்தின் அஜாக்ரதையால் அவனைப் பின்பற்றி வந்திருப்பாரோ? அல்லது...? அல்லது...? ஏன் அவர் வந்திருக்கிறார்?" - இவ்வாறு செங்கல்வராயன் மனம் அலைபாய்ந்தது.

கதிகலங்கிப்போய் செங்கல்வராயன் தவித்துக் கொண்டிருந்த போது கீழ்த்தளத்திலிருந்து ராமசேஷனின் குரல் கணீரென ஒலித்தது.

"மன்னிக்க வேண்டும், மிஸ்டர் செங்கல்வராயன்! தங்களைத் தொந்தரவு படுத்தி விட்டேனா? - இரண்டே நிமிஷங்கள் தான், நான் போய் விடுகிறேன்! - ஒரு சொந்த விஷயம்!"

"சொந்த விஷயம்" என்று ராமசேஷன் கூறியதும்தான் செங்கல்வராயனுக்கு உயிர் வந்தது.

**"இதோ வந்து விட்டேன், ஸார்!" என்று குதூகலத்துடன் கூறிய செங்கல்வராயன். சம்பந்தத்தின் பக்கம் திரும்பி இரகசியமான குரலி** ல், "நீ பின் பக்கம் வழியாகப் போய் விடு, என்று கூறி விட்டு வேகமாகப் படிக்கட்டை நோக்கி நடந்தார்.

சப் இன்ஸ்பெக்டர் ராமசேஷன் கீழ்த்தளத்திலுள்ள ஹாலில் ஒரு சோபாவில் அமர்ந்து அன்றைய தினசரிப் பத்திரிகையைப் புரட்டிக்கொண்டிருந்தார். செங்கல்வராயன் ஒரு பரந்த புன்னகையோடு அவர் இருக்கும் இடத்திற்கு வந்தார்.

"மன்னிக்க வேண்டும்; காத்திருக்கச் என்று உபசாரமாகக் கூறியபடி ராமசேஷனின் எதிரே கிடந்த மற்றொரு சோபாவில் அமர்ந்தார்.

**"பரவாயில்லை, பரவாயில்லை" என்று அடக்கமாகக் கூறிய ராமசேஷன், "ஒரு முக்கியமான வேலையாக, தலைமைத் துப்பறியும் நிலையத்திலிருந்து உதவி சூப்ரன்டென்டென்ட் பிரபாகர் இங்கு சில மாதங்கள் முகாம்போட வருகிறார். அவருக்கு ஒரு தனி பங்களாவை வாடகைக்கு எடுத்துக் கொடுக்கும்படி மேலிடத்தில் இருந்து உத்தரவு வந்திருக்கிறது. உங்களுடைய மாந்தோப்பு பங்களா நீண்ட காலமாகக் காலி** யாக இருப்பதால் அதை வாடகைக்கு விட முடியுமா என்று கேட்டுப் போகவே வந்தேன்" என்றார்.

"என்ன விசேஷமாக அவர் இங்குவந்து முகாம் போடுகிறார்?" என்று அஸ்தியில் சுரத்தோடு கேட்டார் செங்கல்வராயன்.

"எனக்குத் தெரியாது" என்று சுருக்கமாகக் கூறினார் ராமசேஷன்.

"தெரிந்தாலும் நீங்கள் சொல்ல மாட்டீர்கள். அதை நான் கேட்கவும் கூடாது!" என்று சிரித்தபடி கூறிய செங்கல்வராயன் "மிஸ்டர் ராமசேஷன்! மாந்தோப்பு பங்களாவை நான் வாடகைக்கு விடமுடியாது அந்தப் பங்களா காலி இல்லை!" என்றார்.

"காலி இல்லையா?" என்று வியப்போடு ராமசேஷன் "அங்கே யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டார்.

"பேய் குடியிருக்கிறது!" என்று நிதானமாகக் கூறினார் செங்கல்வராயன். அவரது குரலில் வேதனை தோய்ந்திருந்தது.

வேறு சமயமாக இருந்தால் ஸப் இன்ஸ்பெக்டர் ராமசேஷன் அந்தப் பதிலைக் கேட்டதும் விழுந்துவிழுந்து சிரித்திருப்பார் ஆனால்

செங்கல்வராயனின் குரலில் காணப்பட்ட வேதனை பாவம் ராமசேஷனை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

"பேய் என்றால் மோகினிப் பேயா?" என்று ராமசேஷன் கேட்டார்.

**"இல்லை; மோகினிப் பேயா இருந்தால் அழகாக இருக்கும். கருத்தை மயக்கிக் கவர்ந்திழுத்து உல்லாசமூட்டியே உயிரை நளி** னமாக உறிஞ்சிக் குடித்துவிடும் - ஆனால் என் மாந்தோப்புப் பங்களாவில் குடியிருப்பது செத்துப்போன ஒரு பெண்ணின் ஆவி. அது தன் பிசாசுத்தனமான கோர ரூபத்தால் பயமுறுத்தியே இருதயத்தைக் கிழித்துவிடுமாம்!" என்றார் செங்கல்வராயன் ஓர் ஆழ்ந்த துயரத்தோடு.

"செத்துப் போன ஒரு பெண்ணின் ஆவியா?" என்று ராமசேஷன் திகைப்புடன் கேட்டார்.

**"ஆமாம்!" என்று தொடர்ந்து பேசினார் செங்கல்வராயன். "பல ஆண்டுகளுக்கு முன்னால் என மனைவி காமாட்சி வைசூரி கண்டு அந்தப் பங்களாவிலே இறந்துவிட்டாள்,. சாவதற்கு முன்னால் அவளுக்குச் சித்தபேதம் ஏற்பட்டது. தன்னைப் பத்திரகாளி யென்று நினைத்துக்கொண்டு பயங்கரமான ஒரு கொலைக்கத்தியைக் காட்டி பயமுறுத்துவாள். அவள் இளமையிலே செத்து விட்ட காரணத்தால் காமாட்சியின் ஆவி அங்கு நடமாடிக் கொண்டிருக்கிறது என்ற நம்பிக்கை எங்கள் எல்லோருக்கும் இருக்கிறது அந்த ஆவித் தோற்றத்தை தங்கள் கண்ணால் கண்டதாகப் பலர் கூறுகிறார்கள். அது திடீரென்று அந்தப் பங்களாவில் தோன்றுமாம்! தலைவிரி கோலமாக அதிபயங்கரத் தோற்றத்துடன் உட்கார்ந்து இருக்குமாம்! அதை நான் நேரில் பார்த்ததில்லை யென்றாலும் பலர் கூறக் கேட்டிருக்கிறேன். என் மனைவி காமாட்சி இறந்ததும் அந்தப் பங்களாவைக் காலி செய்து கொண்டு இங்கே வந்து விட்டோம். அது முதல் அங்கு நாங்களும் குடிபோக வில்லை - வாடகைக்குக் கேட்டவர்களுக்கும் மறுதளி** த்து விட்டோம்."

"அதுதானா விஷயம்?" என்று ஆறுதலாகக் கேட்டார் ராமசேஷன்.

"ஆமாம் - நாங்கள் நினைப்பது ஒரு மூட நம்பிக்கையாக இருக்கலாம். இருந்தபோதிலும் இறந்தவர் விஷயத்தில் எல்லா மூட

நம்பிக்கைகளையும் நாம் ஏற்று நிறைவேற்ற வேண்டி இருக்கிறது அதுவும் இறந்து போனவர் நம் உயிருக்குயிரான நபராக இருந்தால், எந்த மூட நம்பிக்கையையும் தலைவணங்கி ஏற்றுக் கொள்வதில்தான், நம் மனதிற்குச் சாந்தி கிடைக்கிறது!" என்று வேதனையோடு கூறினார் செங்கல்வராயன்.

**"உண்மைதான்!" என்று ஒப்புக்கொண்ட ராமசேஷன் "அப்படி ஆ**னால் நான் வேறு ஏதாவது பங்களா பார்க்கிறேன்!" என்று கூறிவிட்டு, புறப்பட ஆயத்தமானார்.

அந்தச் சமயத்தில் செங்கல்வராயனின் அருமை மகன் மார்த்தாண்டன், தன் நாய் ஜோகருடன் உள்ளே வந்தான்.

"இவன்தான் என் மகன் மார்த்தாண்டன்!" என்று அறிமுகம் செய்து வைத்த செங்கல்வராயன். "மார்த்தாண்டா! இவர் தான் நமது வட்டாரப் போலீஸ் அதிகாரி" என்றார்.

மார்த்தாண்டன் ஒரு பெண்ணைப் போல நாணிக்கோணிப் புன்முறுவல் பூத்தபடி நின்றான்.

"உட்கார் தம்பி!" என்று ஆதரவாகக் கூறினார் ராமசேஷன்.

மார்த்தாண்டன் இன்னும் அதிகமாக நாணியவனாய், செங்கல்வராயன் அருகே சோபாவில் அமர்ந்தான்.

"ரொம்ப வெட்கப்படுகிறானே!" என்று புன்னகையுடன் கூறினார் ராமசேஷன்.

"அதற்கும் காரணம் இருக்கிறது" என்று கூறியபடி செங்கல்வராயன் தம் இருக்கையை விட்டு மெல்ல எழுந்து ஒரு பீரோ அருகில் சென்று அதைத் திறந்தார்.

அந்தப் பீரோவில் ஒரு பெரிய போட்டோ ஆல்பம் இருந்தது. அந்தப் புத்தகத்தில் செங்கல்வராயன் குடும்பத்தினரின் புகைப்படங்கள் எல்லாம் வரிசையாக ஒட்டி வைக்கப்பட்டிருந்தன. அந்தப் ஆல்பத்தை கையில் எடுத்துக் கொண்டு தம் ஆசனத்தில் வந்து அமர்ந்த செங்கல்வராயன்

அதைப் புரட்டி ஒரு குறிப்பிட்ட பக்கத்தைத் திறந்தார். அந்தப் பக்கத்தில் ஏழெட்டு புகைப்படங்கள் ஒட்டப்பட்டிருந்தன.

அவையெல்லாம் மார்த்தாண்டனின் குழந்தைப் பருவ புகைப்படங்கள் அவை எல்லாவற்றிலும் மார்த்தாண்டனுக்கு பெண் வேடம் போட்டிருந்தது.

**பெண் குழந்தைபோல ஜடை பின்னியும், கவுன் அணிவித்து பூ முடித்தும் மற்றும் பல்வேறு விதங்களி** லும் மார்த்தாண்டனைப் பெண்ணைப்போல அலங்காரம் செய்து படம் எடுத்திருந்தார்கள்.

அந்தப் படங்களைப் பார்த்ததும் ராமசேஷனுக்கு வேடிக்கையாக இருந்தது.

செங்கல்வராயன் விளக்கங்கூற ஆரம்பித்தார். "இவையெல்லாம் என் மனைவி காமாட்சியின் ஆசையை நிறைவேற்ற எடுக்கப்பட்ட படங்கள், அவளுக்கு பெண் குழந்தையென்றால் அளவு கடந்த ஆசை, மார்த்தாண்டன் பிறந்து பத்து ஆண்டுகள் வரையில் எங்களுக்கு வேறு குழந்தைகளே கிடையாது. தனக்கு இனிமேல் குழந்தைகளே பிறக்கப் போவதில்லையென்ற அவசர முடிவுக்கு வந்த என் மனைவி மார்த்தாண்டனுக்கு பத்து வயது நிரம்பும் வரை அவனைப் பெண்பிள்ளை போலவே ஆடை அலங்காரம் செய்து ஒரு பெண்ணாகவே வளர்த்து விட்டாள். அதோடு மார்த்தாண்டன் குறை மாதத்தில் பிறந்த குழந்தையாதலால் அவனுக்கு "மனமுதிர்ச்சி" போதிய அளவு ஏற்படவில்லை. எடுப்பார் கைப் பிள்ளையாகவும், சுயமாக இயங்கும் சக்தியற்றவனாகவும் இருந்து வந்ததால் என் மனைவி அவனை ஒரு கைக்குழந்தை போலவே பத்து வயதுவரை வளர்த்து வந்தாள். அவனுக்கும் தாயார்மேல் உயிர் என்று சொல்ல வேண்டும். இப்படி வளர்ந்து விட்ட காரணத்தால், ஒரு ஆணுக்கு இருக்க வேண்டிய குணங்களெல்லாம் மறைந்து," ஒரு பெண்ணைப் போலவே மார்த்தாண்டன் மாறிவிட்டான்" என்று நிறுத்தினார்.

"உண்மைதான்" என்று ஒப்புக் கொண்ட ராமசேஷன், "இந்தக் காரணங்களால் தான் இக்காலத்து மனநல மருத்துவர்கள் ஆண்

குழந்தைகளுக்கு பெண் உடைகள் அணிவிக்கக் கூடாதென்றும் வற்புறுத்துகிறார்கள்" என்றார்.

அதைச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ராமசேஷன் பார்வை மார்த்தாண்டன் பக்கம் சென்றது.

மார்த்தாண்டன் தோற்றத்திலே திடீரென ஒரு மாறுதல் ஏற்பட்டது. அவன் நெற்றி நரம்புகள் புடைத்துக் கிளம்பின. முகம் முழுவதும் முத்துமுத்தாக வியர்வைத் துளிகள் அரும்பி நின்றன. அவன் கண்கள் வெட்ட வெளியை நிலை குத்தாகப் பார்த்தபடி நின்றன. சட்டென்று தன் ஆசனத்தை விட்டு துள்ளியெழுந்த மார்த்தாண்டன், விருட்டென அங்கிருந்து ஓட ஆரம்பித்தான்.

திக்கிட்டு உணர்வு பெற்ற ராமசேஷன் அவனது கையைப் பிடிக்க முயன்றார்.

**"வேண்டாம், விட்டுவிடுங்கள்" என்று பதறிய செங்கல்வராயன், "இப்பொழுது அவனைத் தடுத்து நிறுத்தினால் அவனுக்குப் பயங்கரமான வலிப்பு ஒன்று வந்துவிடும்! அந்த வலி** ப்பு அவனுக்கு வந்து விட்டால் மகா பயங்கரமாக அவன் சித்ரவதைப் பட்டுத் துடிப்பான்" என்று மூச்சு வாங்கக் கூறினார்.

"எதனால் அவனுக்கு இப்படி நேருகிறது?"

**"அவனது தாயாரைப் பற்றிய பேச்சு எடுத்தால் அவன் இப்படி மாறிவிடுகிறான்! அவன் தாய் இறந்தது முதல் அவன் ஒரு பைத்தயம்போலத்தான் நடமாடி வருகிறான். தாயாரை நினைத்துக் கொண்டால் அவன் குமுறிக்குமுறி அழுவான்! தாயார் பட்ட வேதனைகளை நினைத்துக் கொண்டாலோ அவன் சில சமயங்களில்** சீறி எழுவான்! கையில் அகப்பட்ட கண்ணாடி டம்ளர்கள் பாத்திரம் பண்டங்களையெல்லாம் படாரென்று போட்டுடைப்பான். அப்போது அவனுக்குச் சுயநினைவே இராது. வெறிபிடித்தவன் போல் ஆகி விடுவான். அது படுபயங்கரமாக இருக்கும். செத்துப்போன தாயாரின் ஆவிதான் அவனைப் பிடித்துக்கொண்டு ஆட்டி வருகிறதென்றுகூட

மந்திரவாதிகள் சொன்னார்கள்" என்று செங்கல்வராயன் ஒரு பெரு மூச்சோடு கூறினார்.

"இதற்கு ஏதாவது வைத்தியம் செய்யக்கூடாதா?" என்று கேட்டார் ராமசேஷன்.

"இதற்கு ஒரே வைத்தியம் ஷாக்டிரீட்மெண்ட் என்று அழைக்கப்படும் மின்சார அதிர்ச்சி வைத்தியம்தான். ஆனால் மார்த்தாண்டனின் இருதயம் ரொம்ப பலவீனமாய் இருப்பதால் அதை செய்யக் கூடாதென்று விட்டு விட்டேன்" என்று மனங்கலங்கிய படி கூறிய செங்கல்வராயன் "பார்த்தீர்களா?" எனக்கு எவ்வளவு செல்வம் செல்வாக்கு இருந்தும் என்ன பயன்" என் ஒரே மகன் இப்படி ஆகி விட்டான். இதைத்தான் விதி கர்மவினை என்றெல்லாம் சொல்வார்கள்" என்று விம்மினார்.

"பாவம்!" என்று அனுதாபத்தோடு கூறி ஸப்இன்ஸ்பெக்டர் ராமசேஷன் புறப்படுவதற்காக எழுந்தார்.

## 8

மாவிலை தோரணம் கட்டி, பூரணகும்பம் வைப்பதைத் தவிர மற்ற எல்லா வரவேற்பு ஏற்பாடுகளையும் தன் மகனுக்காகச் செய்து வைத்து, அவனுடைய வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் பவானி.

பரிமளாவும் அங்கு வருவதைக் கண்டதும் பவானிக்கு அளவு கடந்த மகிழ்ச்சி ஏற்பட்டது.

"சாப்பாடெல்லாம் தயார் ஆகிவிட்டதா, அத்தை?" என்று ஆவலாக விசாரித்தாள் பரிமளா.

"சேகருக்குப் பிடித்தமான முருங்கைக்காய் சாம்பார்" வைத்து, உருளைக்கிழங்கு வறுவல் செய்திருக்கிறேன் கொஞ்சம் வாழைக்காய் பொரியலும், தயிர்ப்பச்சடியும் செய்திருக்கிறேன்! போதாதா?"

"வடை பாயசம் செய்யவில்லையா, அத்தை?"

"அதெல்லாம் அவன் உன் வீட்டுக்கு வரும்பொழுது நீங்கள் செய்யவேண்டியது" என்று சிரித்தாள் பவானி.

"சேகரின் அறையைச் சுத்தம் செய்து வைத்து இருக்கிறீர்களா?"

"வழக்கம்போல காலையில் கூட்டிச் சுத்தம் செய்தேன்..."

"போங்கள் அத்தை! இன்னொருதரம் அதைக் கூட்டவேண்டாமா? சரி; நான் போய் அந்த வேலையைப் பார்க்கிறேன்!" என்று மாடிப் படிக்கட்டில் ஏறி ஓடினாள் பரிமளா.

"நல்ல பெண்ணம்மா, நீ!" என்று சிரித்தாள் பவானி.

**சேகரின் மாடியறை சுத்தமாகத்தான் இருந்தது. இருந்த போதிலும் பரிமளா அதை மீண்டும் ஒரு முறை கூட்டிப் பெருக்கினாள். மேஜை விரிப்பு. ஜன்னல் திரைச்சீலைகள் முதலி** யவற்றை எல்லாம் எடுத்து நன்றாக உதறிப்போட்டாள். தன் கற்பனைக்கு எட்டியவிதத்தில் அந்த அறையை அலங்காரமாக வைப்பதில் முழு மூச்சுடன் ஈடுபட்டாள்.

அந்தச் சமயத்தில் தெருவில் வண்டி வந்து நிற்கும் சத்தம் கேட்டது. ஆவலோடு ஜன்னல் அருகே ஓடி எட்டிப் பார்த்தாள் பரிமளா. சேகர் வண்டியைவிட்டு இறங்கிக்கொண்டிருந்தான். எப்பொழுதும் போல அவன் முகத்திலே ஒரு பரந்த புன்னகை ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தது. வாயிற்படியில் நின்று கொண்டிருந்த பவானி அவனை உள்ளம்பொங்க வரவேற்றாள். சேகர் நல்ல பூரிப்போடுதான் இருந்தான் என்றாலும் அவன் கொஞ்சம் இளைத்துப் போயிருப்பதாக பரிமளாவுக்குத் தோன்றியது. பரீட்சைக்குக் கஷ்டப்பட்டுப் படித்ததால் இளைத்துப் போயிருப்பான் என்று நினைத்துக் கொண்டாள் பரிமளா. வீட்டுக்குள் நுழைந்ததும் தாயும் மகனும் கொஞ்ச நேரம் அளவளாவிக் கொண்டிருந்தார்கள்.

கடைசியில் ""என் அறை சுத்தமாக இருக்கிறதா, அம்மா?" என்று கேட்டான் சேகர்.

"நான் காலையிலேயே சுத்தம் செய்துவிட்டேன். அது போதாது என்று இப்பொழுது சுத்தம் செய்ய பரிமளா அங்கு போயிருக்கிறாள்"

என்றாள் பவானி.

"பரிமளா வந்திருக்கிறாளா, அம்மா?" என்று கேட்டான் சேகர்.

"ஆமாம். நீ இன்றிரவு வரப்போகிறாய் என்பதை அறிந்ததும் வீட்டில் இருப்பு கொள்ளாமல் ஓடி வந்திருக்கிறாள்"

அதைக் கேட்டதும் சேகரின் முகம் நன்றியால் மலர்ந்தது.

"இந்த உலகத்தில் என்னைப்பற்றிக் கவலைப்பட உன்னைத் தவிர இன்னொரு ஆன்மாவும் இருக்கிறது. என்பதை நினைக்கும் பொழுது எனக்கு உண்மையிலேயே பெருமையாக இருக்கிறது அம்மா!"

"பரிமளா தங்கமான பெண்ணப்பா!" என்று மன நிறைவோடு கூறினாள் பவானி.

சேகர் நேராக மாடி அறைக்குச் சென்றான்.

அவனது வருகையால் எல்லையற்ற மகிழ்ச்சியும், வெட்கமும் ஒருங்கே பீடித்துக் கொண்டதால், பரிமளா தத்தளித்துப் போய் விட்டாள். "வாருங்கள்" என்று அழைப்பதற்குள் திக்கு முக்கலாடிப் போய் விட்டாள்.

"அடேயப்பா ரொம்பப் பெரிய மனுஷியாகி விட்டாயே! என்ன வெட்கம்." என்று சிரித்தான் சேகர்.

பரிமளாவினால் எதுவும் பேசமுடியவில்லை. தலைகுனிந்தபடி புன்னகையோடு நின்று கொண்டிருந்தாள்.

"வரவேற்புக் கமிட்டி தலைவி நீ தான் போலிருக்கிறது. என்று சிரித்தான் சேகர்.

**"மாலை வாங்குவதற்குத்** தான் மறந்து போய்விட்டது" என்று தலைகுனிந்தபடியே பதிலுக்குக் கிண்டல் செய்தாள் பரிமளா.

"நிச்சயம் என்னை நீ மாலைபோட்டு வரவேற்கும் காலம் வரத்தான் போகிறது" என்று ஜம்பமாகக் கூறினான் சேகர்.

சொல்லப்போனால் அந்தக் காலம் எப்பொழுது வரப் போகிறது. என்றுதான் பரிமளா தவித்துக் கொண்டிருந்தாள்.

ஆனால், சேகர் குறிப்பிட்ட மாலையும் பரிமளா கனவுக்கண்ட மாலையும் வெவ்வேறு உலகங்களைச் சோந்தவை தன் உணர்ச்சி வேகத்தில் பரிமளா அதைப் புரிந்து கொள்ளவில்லை என்றாலும் தொடர்ந்து சேகர் பேசிய பேச்சுக்கள் அதைத் தெளிவு படுத்தின.

**"நிச்சயம் எம்.ஏ.யில் முதல் வகுப்பில் தேறிவிடுவேன்! இரண்டொரு ஆண்டுகளி** லேயே நாடேபுகழும் ஒரு பெரிய பொருளாதார நிபுணனாக மாறி விடுவேன்! அப்பொழுது என்னை அரசாங்கத்தால் வருந்தி அழைத்து மந்திரியாக நியமிக்க மாட்டார்களா என்ன? நான் மந்திரியான இங்கு விஜயம் செய்தால் நீ மாலை போட்டுத்தானே என்னை வரவேற்பாய்" என்று சிரித்தான் சேகர்.

"மன்னர் அந்தஸ்தில் இப்பொழுது வந்திருக்கும் பொழுதே மாலை போடாதவள் மந்திரி அந்தஸ்தில் வரும்பொழுத மாலை போட்டு விடுவேன்" என்று மடக்கினாள் பரிமளா.

"உன்னோடு பேசி என்னால் ஜெயிக்க முடியுமா? என்னதான் வசந்தாவை நான் வாயாடி அடித்து ஜெயித்தாலும், உன்னிடம் என் ஜம்பம் சாயாது!" என்று மீண்டும் சிரித்தான் சேகர்.

பரிமளா திகைத்தாள். "யார் அந்த வசந்தா?" என்று அவள் மெல்லக் கேட்டாள்.

"செங்கல்வராயனின் மகள்! என் கல்லூரி சக மாணவி!"

"ஓ!" என்று உஷாராகத் தன் உணர்ச்சியை மறைத்தபடி கூறினாள் பரிமளா.

"என்னதான் நான் அவளை மட்டந் தட்டிப் பேசினாலும் அவளுக்கு என்னிடம் ரொம்ப அன்பு!" என்று சுவாரஸ்யமாகக் கூறினான் சேகர்.

சாதாரணமாக முதற்காதலில் சிக்கி உணர்ச்சி வசப்பட்டு இருப்பவர்களுக்கு தங்கள் மனோகர அனுபவங்களை யாரிடமாவது சொல்லி அனுபவிக்க வேண்டுமென்ற தவிப்பு ஏற்படுவது இயற்கை. அதே ரீதியில் தான் சேகர் பேசிக் கொண்டே போனான்.

வசந்தாவைப்பற்றி சேகர் வாயாரப் புகழ்வதையும், அவளை வானத்தில் உயர்த்தி வைத்துப் பேசுவதையும் வெகு நேரம் பரிமளாவால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை என்றாலும், தன் உணர்ச்சித் கொந்தளிப்பை வெகுதூரம் கட்டுப்படுத்தி அதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அந்தச் சமயத்தில் கீழ்த்தளத்திலிருந்து பவானியின் குரல் ஒலித்தது.

"பரிமளா! சேகரைச் சாப்பிட அழைத்து வா! சாப்பிட்டுக் கொண்டே எல்லாம் பேசலாம்!"

சேகர் அவசர அவசரமாக உடை மாற்றிக் கொண்டு பரிமளாவுடன் கீழ்த்தளத்திற்குச் சென்றான்.

பரிமளாவையும் அங்கேயே சாப்பிடச் சொல்லிக் கட்டாயப் படுத்தினாள் பவானி! சேகரோடு சேர்ந்து சாப்பிடும் வாய்ப்பை பரிமளா இழக்க விரும்பாததால் பவானியின் கோரிக்கையை அவள் மறுக்கவில்லை.

சாப்பிட்டும்பொழுது சேகர் தன் கல்லூரியில் நடந்த சுவாரஸ்யமான அனுபவங்களை எல்லாம் கூறிக்கொண்டே சாப்பிட்டான். ஆனால் தாயார் முன்னிலையில் வசந்தாவின் பேச்சை அவன் எடுக்க வில்லை அவன் கூறிய விவரங்கள் எல்லாம் உண்மையிலே யோசனையுள்ளதாக இருந்தன. இருந்தபோதிலும் பரிமளாவின் உள்ளம் வேறு திசையில் மிகத் தீவிரமாக வேலை செய்து கொண்டிருந்தது.

**தனக்கும் சேகருக்குமிடையில் வசந்தா முளைத்திருக்கிறாள் அந்த வசந்தாவோ தன் பெண்மையின் கவர்ச்சிகளை யெல்லாம் நன்கு உணர்ந்தவள். தன் உடல் வாளிப்பும் இளமையும் கண்ணைப் பறிக்கும்படி தான் ஆடை அலங்காரங்கள் செய்து கொள்பவள். அவளுடைய கடைக்கண் பார்வைகளிலும், குறும்புச் சிரிப்புகளிலும், உதடுகளின் நெளிவு அசைவுகளிலும் அலாதியான கவர்ச்சி மட்டுமல்லாமல் அதிநுட்பமான அறிவின் களையும் சொட்டும். அதிலும் பரிமளாவைவிட வசந்தா இன்னும் சிகப்பு. பெரிய பணக்காரி, கோடீஸ்வரரின் புதல்வி அத்தகையவளி**டம் சேகருக்கு ஏற்பட்டிருக்கும்

கவர்ச்சி இயற்கையானதுதான் என்றாலும் அதை மாற்றி, அவன் அன்பைத் தனது பக்கம் திருப்ப வேண்டிய பெரிய வேலையொன்று அவளை எதிர் நோக்கிக் காத்திருக்கிறது. அதில் வெற்றி பெற்றால் தான் தன் வாழ்வு மலரும். இல்லாவிட்டால்... அதை நினைத்துப் பார்க்கக்கூட அவள் இதயம் அஞ்சியது.

"என்ன பரிமளா! ரொம்ப யோசனையில் ஆழ்ந்திருக்கிறாய்? என்று கேட்டாள் பவானி.

திடுக்கிட்டு உணர்வடைந்த பரிமளா, "ம்! ஒன்றுமில்லை அப்பாவுக்குச் சாப்பாடு எடுத்து வைத்தேன். உப்பு எடுத்து வைக்க மறந்து விட்டேன்! அதைத்தான் நினைத்துக் கொண்டேன்" என்று புளுகினாள்.

"ஒருநாள் உப்பில்லாமல்தான் சாப்பிடட்டுமே!" என்று சிரித்தான் சேகர்.

**"உன்னை நம்பித்தான் வேதாசலம் அண்ணா இருக்கிறாரோ? அவரே உப்பை எடுத்துப் போட்டுக் கொள்ளுவார். நீ கவலைப்படாமல் ஒழுங்காகச் சாப்பிடு!" என்று கேலி** செய்தாள் பவானி.

அதன் பிறகு பரிமளா கொஞ்சம் கலகலப்பாக இருந்தாள். தன் வாழ்க்கை லட்சியத்தில் வெற்றிபெற - சேகரைத் தனது கணவனாக அடைய பவானியத்தையின் உதவி தனக்கு பரிபூரணமாகக் கிடைக்குமென்று பரிமளாவுக்கு தெரியும் இருந்த போதிலும் சேகரும் தன்னை மனப்பூர்வமாக நேசித்தால்தான் தன் வாழ்க்கை வளமுள்ளதாக இருக்கும் என்பதை அவள் அறிவாள்.

அந்த நேசத்தை அவள் எப்பாடு பட்டாகிலும் பெற வேண்டும். தனது தன்னலமற்ற தன்மையாலும், விடாமுயற்சியாலும் அவள் அதைப் பெற்றாக வேண்டும். கட்டாயம் பெற்றே தீருவதென்று தீர்மானம் செய்து கொண்டாள் பரிமளா.

◆ ◆ ◆

**மதிமயக்கும் அந்தி மாலைப் பொழுது. ஊருக்கு வெளி** யே ஒதுக்குப்புறமாயுள்ள அந்த தென்னஞ்சோலையின் அமைதியான சூழ்நிலையில் வசந்தாவிற்காக காத்துக் கொண்டிருந்தான் சேகர்.

**அந்த சமயத்தில் எதிர்புறமிருந்த திருப்பத்திலி** ருந்து ஒரு கார் ஹாரன் சத்தம் கேட்டது. அடுத்த வினாடியே வசந்தாவின் கார் வேகமாக அந்த திருப்பத்தில் திரும்பியது. காரை ஓட்டிக் கொண்டு வந்த வசந்தா, சேகர் அருகே காரை நிறுத்தினாள். காரை விட்டு இறங்கிய வசந்தா ஆவலுடன் சேகரை நோக்கி நடந்து வந்தாள்.

சந்திரவொளியிலே வசந்தாவின் முகம் ரொம்ப அழகாகக் காட்சியளித்தது ஆவல் வெள்ளம் கரை புரண்டோடும் அவள் கண்களும், உணர்ச்சி வேகத்திலே துடிதுடிக்கும் அவள் அதரங்களும் சேகரின் நெஞ்சை வாரிக்கொண்டு சென்றன. கட்டு மீறிய காதல் உணர்ச்சியோடு அவள் முகத்தைநோக்கி சேகர் மெல்ல மெல்லக் குனிந்தான். அவளது கதகதப்பான மூச்சு அவன் கன்னத்திலே பட்டு அவனது உள்ளக் கிளர்ச்சியை ஜுவாலை விட்டெரியச் செய்தது...

எவ்வளவு நேரம் அவர்களிருவரும் அமர உலகத்திலே பயணம் சென்று கொண்டிருந்தார்களென்று அவர்கள் இருவருக்குமே தெரியாது.

வசந்தா மெல்லிய குரலில், "நேரமாகிவிட்டது, சேகர்!" என்று முனகினாள்.

சேகர் தனது கைக் கடிகாரத்தைப் பார்த்தான். மணி ஏழரை ஆகி இருந்தது.

இருவரும் தென்னஞ்சோலையை விட்டு வெளியே நடந்து காரை நெருங்கினார்கள்.

"உங்களை வீட்டில் இறக்கி விட்டு விட்டு நான் போகிறேன்" என்றாள் வசந்தா.

இருவரும் காரில் ஏறிக்கொள்ள காரும் புறப்பட்டது.

ஜோகர் நாய் தன் சாப்பாடு முடிந்து தன்னுடைய கட்டிலில் உட்காந்தபடி உற்சாகமாக வாலை ஆட்டிக்கொண்டிருந்தது. அதன் எதிரே மார்த்தாண்டன் உட்கார்ந்து உற்சாகத்தோடு பாடிக் கொண்டிருந்தான்.

**"நான் பேசும் பேச்சையெல்லாம்**
**நீ பேச வேண்டும்**
**நீ பேச வேண்டும்"**

பேச்சுத் திறனை பிரம்மதேவன் "ஜோக"ருக்குக் கொடுக்கா விட்டாலும், ராகத்தைக் கிரகிக்கும் திறமையையும், அதே அளவில் சத்தம் எழுப்பும் சாகஸத்தையும் அளித்திருந்ததால், அதே ராகத்தில் "ஜோகர்" சத்தம் எழுப்பியது.

**"ளொள் ளொள் ளொள்**
**"ளொள் ளொள் ளொள்**

அந்தச் சத்தத்தைக் கேட்டதும், மார்த்தாண்டனுக்கு அளவு கடந்த குதூகலம் பொங்கிக் கிளம்பியது. இந்திமொழி தெரியாதவன் இந்திப்பாட்டைக் கேட்டு ரசிப்பதுபோல் பரவசத்தோடு தலையை ஆட்டி ஆட்டி ரசித்தான்.

கொஞ்சம் நேரம் கச்சேரி நடத்தியதும் "ஜோகர்" களைத்து விட்டது மெதுவாக தனது முன் காலை நீட்டி அதில் தனது தலையைச் சாய்த்துக் கண்களை மூடியது. சில வினாடிகளில் அயர்ந்து நித்திரை போய்விட்டது.

மார்த்தாண்டன் ஓசைப்படாமல் மெதுவாக எழுந்து ஒரு "பெட்ஷீட்"டை எடுத்து "ஜோகர்" மீது போர்த்திவிட்டு. அருகில் கிடந்த தனது கட்டிலில் போய் அமர்ந்தான்.

**அந்தச் சமயத்தில் கீழ்த்தளத்திலிருந்து "மார்த்தாண்டா! மார்த்தாண்டா!" என்று செங்கல்வராயனின் குரல் மேல்தளம் நோக்கிப் பாய்ந்து வந்தது. மார்த்தாண்டன் ஓசைப்படாமல் தன் அறையை விட்டு**

**வெளியேறி வேகமாக மாடிப்படிக்கட்டில் இறங்கி, கீழ்த்தளத்தை நோக்கி ஓடினான். செங்கல்வராயன் கவலையோடு ஒருசிகரடைப்பற்ற வைத்த படி ஹாலி** ல் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார்.

"என்ன அப்பா!" என்று ஆவலாகக் கேட்டான் மார்த்தாண்டன்.

"வசந்தா எங்கே போனாள்? இன்னும் சாப்பிட வரவில்லை... சாயங்கால டிபன் கூட அவள் சாப்பிட வரவில்லையாம்" என்றார் செங்கல்வராயன்.

"எங்கே போயிருக்கப் போகிறாள்? சேகர் வீட்டில்தான் இருப்பாள்!" என்று அலட்சியமாகக் கூறினான் மார்த்தாண்டன்.

செங்கல்வராயனின் புருவங்கள் சங்கடத்தால் நெரிந்தன. "அது சரி; இப்பொழுது மணி என்ன ஆகிறது? இவ்வளவு நேரமா, அங்கே இருப்பது?" என்று சலித்துக் கொண்டார்.

"நான் போய்க் கூப்பிட்டுக்கொண்டு வருகிறேன். அப்பா!" என்று செங்கல்வராயனின் மறு மொழியையும் எதிர்பாராமல் வெளியே கிளம்பினான் மார்த்தாண்டன்.

செங்கல்வராயன் தம் கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டார் அப்பொழுது மணிஎட்டு அடிக்க பத்து நிமிஷம் இருந்தது. அன்றிரவு எட்டுமணிக்கு ரேணுகா மில் கட்டிடத்தில் டைரக்டர்கள் மீட்டிங் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு இருந்ததால். அவர் அவசரமாக்க கிளம்பிச் செல்ல வேண்டியிருந்தது. ஹாலில் மாட்டப்பட்டிருந்த கண்ணாடியின் முன்னால் போய்நின்று தம் ஆடைகளைச் சீர்செய்து கொண்ட செங்கல்வராயன் வேகமாக வெளியே நடந்தார்.

◆ ◆ ◆

**சேகரை வீட்டில் கொண்டு போய் இறக்கி விட்ட வசந்தா எவ்வளவோ தூரம் மறுத்த போதிலும், பவானி அவளை வற்புறுத்தி தன் வீட்டில் சாப்பிட்டு விட்டுத்தான் போக வேண்டுமென்று பிடிவாதம்**

பிடித்தாள். சேகரும் வற்புறுத்திக் கூறவே வஸந்தா அங்கு சாப்பிட ஒப்புக்கொண்டு சாப்பாட்டில் அமர்ந்தாள்.

வீட்டை விட்டுப் போய் வெளியூரில் பல தினங்கள் தங்கியிருந்து விட்டுத திரும்பும் தன் மைந்தன் எவ்வளவு வயதானவனாக இருந்தாலும், அவன் திரும்பியவுடன் ஒரு குழந்தையைப் போல அவனைப் பாவித்து அக்கறை காட்டுவது ஒவ்வொரு தாய்மாருக்கும் இயல்பானது. பாவனியும் அதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை.

சாப்பாட்டில் அமர்ந்திருந்த சேகரின் அருகில் போய் உட்கார்ந்து பாவனி, "அதைச் சாப்பிடு!" "இதை அப்படியே வைத்து விட்டாயே! - "நிறைய நெய் சேர்க்காததால் தான் உன் உடம்பு இப்படி இளைத்து விட்டது!" - என்று இடைவிடாமல் உபசரித்துக் கொண்டிருந்தாள்.

அந்தச் சமயத்தில் தான் மார்த்தாண்டன், "சேகரின் வீட்டை நெருங்கினான். வாசற் கதவைத் தட்டுவதற்கு முன்னால் ஜன்னல் வழியாக உள்ளே ஹால் பக்கம் பார்த்தான்.

ஹாலில் தான் சாப்பாடு நடந்து கொண்டிருந்தது. சேகரின் அருகில் அமர்ந்து பவானி வினாடிக்கொரு உபசாரம் செய்து கொண்டிருந்தாள். மார்த்தாண்டன் அந்த வேடிக்கையைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அருகிலே வசந்தா அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது தன் தாயார் அவ்வளவு உபசாரம் செய்வது சேகருக்கு வெட்கமாக இருந்தது.

"சும்மா இரு அம்மா! குழந்தையை உபசரிப்பது போல தொல்லைப்படுத்தாதே!" என்று சலித்துக் கொண்டான் சேகர்.

"எவ்வளவு வயதானாலும், எனக்கு நீ குழந்தை தானே!" என்று சிறிது மனத்தாங்கலுடன் கூறிய பவானி "இவ்வளவு நாட்களும் நீ தாயில்லாப் பிள்ளை போல அனாதையாக வெளியூரில் கிடந்தாய்! அதை நினைக்க நினைக்க என் வேதனை எல்லை மீறிப் போகிறது என்று

கூறியபடி தன் கண்களை புடவைத் தலைப்பால் துடைத்து விட்டுக் கொண்டபடி எழுந்தாள்.

**அந்தக் காட்சியை வெளியே நின்று கொண்டிருந்த மார்த்தாண்டன் பார்த்ததும், அவன் மனதிலே தாயின் நினைவு அடக்க முடியாதபடி மிகுந்து கிளம்பியது. அவன் தோற்றத்திலே திடீரென ஒரு மாறுதல் ஏற்பட்டது. அவன் வெற்றி நரம்புகள் புடைத்துக் கிளம்பின. முகம் முழுவதும் முத்து முத்தாக வியர்வைத் துளிகள் அரும்பி நின்றன. அவன் கண்கள் வெட்ட வெளியே நிலைக்குத்தாகப் பார்த்தபடி நின்றன. அந்தப் பார்வையிலே நமது உள்ளத்தை அலறச் செய்யும் பயங்கர சாந்தி பரிமளி** த்து நின்றது சட்டென்று வேகமாகத் திரும்பிய மார்த்தாண்டன் ஒரே பாய்ச்சலாக இருளுக்குள் பாய்ந்து ஓட ஆரம்பித்தான்.

உள்ளே உணவருந்திக் கொண்டிருந்த வசந்தாவுக்கோ, சேகருக்கோ, மார்த்தாண்டன் வந்தது போனது தெரியாது!

பவானியின் அன்புத்தொல்லை ஒருவாறு நின்றதும் இருவரும் வேடிக்கையாகப் பேசியபடி தங்கள் சாப்பாட்டை முடித்தார்கள்.

சாப்பாடு முடிந்ததும் வசந்தா விடை பெற்றுக் கொண்டு அங்கிருந்து கிளம்பினாள்.

"ரொம்ப நேரமாகி விட்டது! அப்பா தேடிக் கொண்டிருப்பார் என்று தன் கைக் கடிகாரத்தைப் பார்த்தபடி கூறினாள் வசந்தா.

"ஆமாம் அம்மா! நீ புறப்படு!" என்று கூறிய பவானி "அடிக்கடி இங்கே வந்து போ அம்மா! இது உன் வீடுதான்?" என்று அன்பொழுகக் கூறினாள்.

**வசந்தாவும் மெள்ளப் புன்னகையோடு தலை அசைத்து விட்டு அங்கிருந்து கிளம்பினாள். வஸந்தாவிடம் பவானிக்கு அன்பு இருந்ததற்கு இரண்டு காரணங்கள் இருந்தன முதலாவது காரணம் வசந்தாவின் தாயாரிடம் பவானி கொண்டிருந்த மிகுந்த பாசம்; இரண்டாவது காரணம் தன் மகனுக்கு மிகவும் நெருக்கடியான சமயங்களி** ல் எல்லாம் வசந்தா

பண உதவி செய்து வந்ததையும் தன் மகன் மூலம் பவானி அறிந்து கொண்டிருந்தது.

## 10

நாய் ஜோகர் திடீரென்று விழித்துக்கொண்டது. தனது தலையைச் சட்டென்று தூக்கி மார்த்தாண்டனின் கட்டிலைப் பார்த்தது. மார்த்தாண்டனை அங்கு காணோம்!

**தன் கட்டிலை விட்டுக் கீழே குதித்த அந்த நாய், வாலை விறைத்துக் கொண்டு வினாடி நேரம் இருபுறமும் பார்த்தபடி நின்றது. பிறகு தரையை முகர்ந்தபடி வேகமாக அறையை விட்டு வெளி** யே ஓடியது.

வான வீதியிலே பௌர்ணமி சந்திரன் பவனிவந்து கொண்டிருந்தான் இரவின் முற்பகுதியிலே அங்கொன்றும் இங்கொன்றுமாக சிதறிக்கிடந்த மேகத் திட்டுகள் இப்பொழுது பரந்த அளவிலே வான முழுவதும் விரவிக் கிடந்தன. தொலை தூரத்தில் மழை பெய்ததால் ஏற்பட்ட குளுமையைத் தாங்கியபடி தென்றல் காற்றும் சாரல் காற்றாக மாறி வீசிக் கொண்டிருந்தது.

ஜோகர் எங்கெங்கோ அலைந்து விட்டுக் கடைசியாக மாந்தோப்புக்குள் நுழைந்தது.

மாந்தோப்பு பங்களா வழக்கம்போல இருளில் மூழ்கிக் கிடந்தது. மயான அமைதியைப் பரப்பிக் கொண்டிருந்த அந்த மாந்தோப்பிலே இடையிடையே ஆந்தைகளின் அலறல் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது தோப்பிலே விழுந்து கிடந்த சருகுகளின் மீது, கீரி, ஓணான், பாம்பு முதலிய ஊர்வன சரசரவென்ற சத்தத்தை எழுப்பியபடி ஓடிக் கொண்டிருந்தன.

பங்களாவின் மாடியறையிலே கண்ணாடி ஜன்னலுக்கு அப்பால் இருந்து மிக மங்கலான விளக்கொளி வெளியே தெரிந்து

கொண்டிருந்தது. மார்த்தாண்டனின் நாய் தன் தலையைத் தூக்கிப் பார்த்தபடி வினாடி நேரம் நின்றது.

திடீரென பங்களாவிலிருந்து மனோகரமான பாட்டுச் சத்தம் கிளம்பியது. உள்ளத்தை உலுப்பியெடுக்கும் உருக்கத்தோடு எழும்பிய அந்தப் பெண் குரல் அந்த வட்டாரம் முழுவதுமே வேதனையைப் பரப்பி நின்றது:

**"துன்பம் நேர்கையில்**
**யாழ் எடுத்து நீ**
**இன்பம் சேர்க்க மாட்டாயா? - கண்ணே...**
**இன்பம் சேர்க்க மாட்டாயா?"**

நின்று கொண்டிருந்த நாய் வேகமாக பங்களாவை நோக்கி ஓடியது. ஆன்மாவையே இன்ப வேதனையில் ஆழ்த்தும் பாவேந்தர் பாரதிதாசனாரின் அந்த அமரகீதம் ஒலித்துக் கொண்டே இருந்தது.

**பங்களாவின் முன் வாசல் வழியாக உள்ளே நுழைந்த நாய் இருண்டிருந்த ஹாலையடைந்ததும் சில வினாடிகள் நின்றது. கீத ஒலி மாடியறையிலிருந்து தொடர்ந்து ஒலி** த்துக் கொண்டே இருந்தது.

எதிரே காணப்பட்ட மாடிப்படிக்கட்டின் மீது ஜோகர் வேகமாகத் தாவி ஏறி மேல் தளத்தை அடைந்தது. எதிர்பக்கம் இருந்து ஒரு அறையிலிருந்து பாட்டொலி தெளிவாகக் கேட்டுக் கொண்டு இருந்தது. அந்த அறைக்குள் நுழைவதற்கு ஏதாவது வழி இருக்கிறதா என்று "ஜோகர்" இப்புறமும் அப்புறமும் ஓடிப் பார்த்தது. பக்கவாட்டிலே ஒரு கம்பியில்லா ஜன்னல் இருந்தது. திறந்திருந்த அந்த ஜன்னல் மீது தாவி ஏறிய ஜோகர் உள்ளே தலை நீட்டிப் பார்த்தது.

அறைக்குள்ளே போடப்பட்டிருந்த மேஜை மீது இரண்டடி உயரமுள்ள ஒரு வெண்கலப் பாவை விளக்கு எரிந்து கொண்டு இருந்தது. அதனருகே போடப்பட்டு இருந்த சிறு

நாற்காலியில் கதவுப் பக்கம் முதுகைத் திருப்பியபடி ஒரு பெண் உருவம் உட்கார்ந்திருந்தது. விரித்துப் போடப்பட்டிருந்த அதன் சுருண்ட

தலை முடிதரையைத் தொட்டுக்கொண்டு தொங்கியது. பளபளவென்று மின்னும் பட்டை ஜரிகைக்கரை போட்ட ஒரு கறுப்பு ச்சேலையை அந்தப் பெண் உருவம் அணிந்து கொண்டிருந்தது.

அந்தக் காட்சியைக் கண்டதும் நாய் ஜோகர் பயங்கரமாகக் குரைத்தபடி குபீரெனப் பாய்ந்து உள்ளே ஓடியது.

**துள்ளியெழுந்த அந்தத் தலை விரிகோலப் பெண்மணி அமானுஷ்யமான குரலில் இரத்தம் உறைந்து போகும்படி அலறியவாறு தன் பேய்க்கரங்களால் ஒரு கொலைக் கத்தியை வேகமாக எடுத்தாள். மறுவினாடியே பாய்ந்து வந்த அந்த நாயை வெறி கொண்டவள் போல் மாறிமாறிக் குத்தினாள். பரிதாபக் குரலில் ஓலமிடத் தொடங்கிய அந்தநாயின் கூச்சல் கொஞ்சங் கொஞ்சமாக அடங்கியது. சில வினாடிகளி**ல் உயிரற்ற அதன் உடலை அந்தப் பேய்ப் பெண்மணி வெறிக்கப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள்.

பிறகு ஏதோ முடிவு செய்தவளாய் அந்த நாயின் கால்களைப் பற்றி பரபரவென்று இழுத்து கம்பியில்லாத ஜன்னல் வழியாக அதை வெளியே தூக்கி வீசி எறிந்தாள்.

மரக்கிளைகளில் மோதிக் கொண்டு அந்தச்சடலம் தரையை நோக்கிச் சென்றபோது அங்கு ஒண்டியிருந்த ஆந்தைகளும் வௌவால்களும் பயங்கரமாகக் "கிரீச்"சிட்டபடி அலறிக் கொண்டு பறந்தன.

## 11

சூரியோதயம் ஆகி வெகுநேரமாகி விட்டது. மார்த்தாண்டன் இன்னும் படுக்கையை விட்டு எழுந்திருக்க இல்லை. வழக்கத்தைவிடச் சற்று அதிக நேரமாகியும் அவன் தூக்கங் கலைந்து எழுவதாகத் தெரியவில்லை.

மூன்றாவது தடவையாக காபியும் கையுமாக உள்ளே நுழைந்த சமையற்காரன் ஒருவாறு துணிந்து மார்த்தாண்டனை எழுப்பினான்.

மெதுவாகக் கண் விழித்த மார்த்தாண்டன், வெகு நேரமாகி விட்டதை உணர்ந்ததும் வாரிச் சுருட்டி எழுந்து உட்கார்ந்து காபியை வாங்கி அருந்தினான்.

அந்தச் சமயத்தில் படபடப்போடு வேலைக்காரன் அங்கு ஓடி வந்தான்.

**"நமது நாய் ஜோகர் கத்திக்குத்துப்பட்டு மாந்தோப்பில் செத்துக் கிடந்தது!" என்று பதறிய அந்த வேலையாள், "அதைத் தூக்கிவந்து ஹாலி** ல் போட்டிருக்கிறேன்"என்றான்.

அந்தச் செய்தியைக் கேட்டதும் மின்சாரம் தாக்குண்டவனைப் போலத் துடிதுடித்து எழுந்தான் மார்த்தாண்டன். அவன் கையில் இருந்த காபிக்கோப்பை தடாலெனக் கீழே விழுந்து சுக்கல் நூறாக நொறுங்கியது. கட்டுக்கடங்காத உணர்ச்சி வேகத்தோடு கீழ்த் தளத்தை நோக்கி ஓடிய மார்த்தாண்டன், ஹாலிலே ரத்தக் குளியலில் சுருண்டு கிடக்கும் "ஜோக"ரைப் பார்த்தான்.

"ஜோகர்! - என் அருமை ஜோகர்!" என்று கதறியவனாய், உயிரற்ற அந்த நாயின் உடல் மீது விழுந்து புலம்பித் துடித்தான்.

இதற்குள் வசந்தா அங்கு வந்துவிட்டாள். தனது சகோதரன்படும் வேதனை அவளைப் பரிதாபங்கொள்ளச் செய்தது. அந்த நாய் மீது மார்த்தாண்டன் தன் உயிரையே வைத்திருந்தான் என்று வசந்தாவுக்குத் தெரியும்.

ஆதரவோடு மார்த்தாண்டனை அப்பால் இழுத்து, "அழாதே அண்ணா! நம் ஜோகர் நம்மைவிட்டு எங்கும் போகாதபடி தோட்டத்திலேயே ஒரு சமாதி கட்டிவிடலாம்!" என்று தேற்ற முயன்றாள் வசந்தா.

என்னதான் தேறுதல் மொழிகளை யார்தான் கூறியபோதிலும் மார்த்தாண்டன் வெகுநேரம் வரை கதறிக் கொண்டிருந்தான். வெளியே சென்றிருந்த செங்கல்வராயன் திரும்பி வந்து வெகு நேரம்வரை அவனுக்கு ஆறுதல் கூறினார்.

**பிறகு அவர் தம் பணியாட்களி** டம் உத்தரவிட்டு, தங்கள் வீட்டுத் தோட்டத்திலேயே அந்த நாயைப் புதைத்து அதற்கு ஒரு சமாதி கட்டவும் செங்கல்வராயன் ஏற்பாடு செய்தார். அதன் படியே ஒரு அழகிய சமாதியும் அமைக்கப்பட்டது.

**நாயின் சாவு மார்த்தாண்டன் உள்ளத்திலே ஒரு பயங்கரமான வடுவை ஏற்படுத்திவிட்டது. வாழ்க்கையில் தனது ஒரே பற்றுக் கோடாக இருந்த "ஜோகர்" இப்படிப்பட்ட பரிதாப முடிவுக்கு ஆளானது, அவனை வெகுவாகக் கலக்கி விட்டது. "ஜோகரை, யார் கொன்றது? எதற்காக அந்த வாயில்லா ஜீவனைப் படுககொலை செய்ய வேண்டும்? எதற்காக ஜோகர் அந்த பேய் பங்களாப் பக்கம் சென்றது? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை விளங்காமல் மார்த்தாண்டனின் நெஞ்சம் தத்தளி** த்தது.

பெரிய மனிதர் வீட்டில் நடந்த சாவு என்ற முறையில், "ஜோகர்" இறந்த விஷயம் எங்கு பார்த்தாலும் பரவி விட்டது. அதோடு அந்த நாய் கொல்லப்பட்ட விதமும், ரொம்ப பயங்கரமாக இருந்ததைக் கேள்விப்பட்டதும், மீண்டும் மாந்தோப்பு பங்களாவைப்பற்றிய பேய்க் கதைகள் தீவிரமாக நடமாட ஆரம்பித்தன. அந்தப் பங்களாவில் அதிபயங்கரமான பேய் ஒன்று குடியிருந்து வருவது உண்மையாக இருக்கக் கூடுமென்றே பெரும்பாலோர் நம்பினார்கள். இருந்தபோதிலும் அங்கு பேய் இருக்கிறதா இல்லையா என்று சோதனை செய்ய பல இளைஞர்களுக்குத் தவிப்பு ஏற்பட்டது. பொது இடமாக இருந்தால் அவர்கள் சுலபமாக அந்தக் காரியத்தை நடத்தியிருக்க முடியும் ஆனால் அது தனிப்பட்ட ஒரு பணக்காரரின் பங்களா. அதுவும் பயங்கரப் பேர்வழி யான செங்கல்வராயனின் பங்களா! எனவே அனுமதியில்லாமல் துணிந்து அந்த மாந்தோப்பை நெருங்கக்கூட எல்லோரும் பயந்தார்கள்.

கடைசியில் தங்கள் ஆர்வத்தை அடக்க முடியாத சில இளைஞர்கள் செங்கல்வராயனை நெருங்கினார்கள். அந்தப் பங்களாவில் நடமாடும் பேயைப்பற்றிய உண்மையை நேரடியாகவே ஆராய்ந்து அறிய விரும்பும் தங்கள் வீரசாகச அவாவைத் தெரிவித்தார்கள். அதைக் கேட்டதும்

செங்கல்வராயனின் முகம் மாறியது. வேதனை ரேகைகள் அவர் வதனத்திலே படர்ந்தன.

**"பேய் உண்டா இல்லையா என்ற ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டியது ஒவ்வொரு பகுத்தறிவுவாதியின் கடமையென்று ஒப்புக்** கொள்ளுகிறேன். ஆனால் மாந்தோப்பு பங்களாவில் அந்த ஆராய்ச்சி நடத்த நான் உடன்பட மாட்டேன். அங்கே என் ஆரூயிர் மனைவி காமாட்சி அகால மரணமடைந்து விட்டாள். அவளை நான் எப்படி உயிருக்குயிராக நேசித்தேன் என்று உங்களுக்கெல்லாம் தெரியாது. அவள் இறந்தபின் அவளது ஆவி அங்கு நடமாடுவதாகப் பலருக்கு நம்பிக்கை இருக்கிறது. உண்மையில் அப்படி நடமாடாவிட்டாலுங்கூட அந்த ஆவி நடமாடிக் கொண்டிருக்கிறது என்று நம்பவேண்டும் மென்றுதான் என் பாச உள்ளம் தவிக்கிறது. அந்த நம்பிக்கைக்கு நாசம் ஏற்படுத்திக்கொள்ள நான் விரும்பவில்லை. எந்தக் காலத்திலும் அவள் பூத உடலோ, ஆவியுடலோ என் அருகிலேயே இருக்க வேண்டுமென்றுதான் நான் தவிக்கிறேன் அப்படி இருப்பதாகத்தான் நம்புகிறேன். அதனால் அந்தப் பங்களாவுக்கு நீங்கள் செல்லவோ, ஆராய்சிசி நடத்தவோ நான் அனுமதிப்பதற்கில்லை" என்று தீர்மானமாகக் கூறிவிட்டார். செங்கல்வராயன்.

## 12

**அன்று பொழுது புலர்ந்ததுமே வசந்தா அளவு கடந்த பரபரப்பு. உணர்ச்சிக்கு ஆளாகியிருந்தாள். பத்திரிக்கைக்காரன் எப்பொழுது பத்திரிகை கொண்டுவருவான் என்று தவியாய்த் தவித்தாள். ஏனென்றால் அன்றைய தினந்தான் பரீட்சை முடிவு பத்திரிகைகளில் வெளி வருகிறது. பரீட்சையில் தான் தேறுவதைப்பற்றியோ தகுதிவகுப்பு பெறுவதைப்பற்றியோ வசந்தா கொஞ்சங்கூட கவலைப்பட வில்லை. தனது வெற்றியில் அவளுக்குப் பரிபூரண நம்பிக்கை இருந்தது என்பதோடு தனது வெற்றி தோல்வியைப்பற்றி அவள் அக்கறையும் கொள்ள வில்லை. சேகர் முதல் வகுப்பில் முதல் இடம் வாங்கி வெற்றி பெற வேண்டுமென்ற தவிப்புதான் அவள் மனதில் ஆக்கம்**

**பெற்றிருந்தது. எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட தாமதங்களால் அவர்களுடைய காலை உணவு நேரத்தில்தான் பத்திரிகை வந்தது. வசந்தா பரபரப்போடு பத்திரிகையை பிரித்துப் பார்த்தாள். செங்கல்வராயனும் மார்த்தாண்டனும் தங்கள் சாப்பாட்டை நிறுத்திக்** கொண்டு அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

படபடப்போடு பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்த வஸந்தா திடீரெனத் துள்ளியெழுந்து, "நான் முதல் வகுப்பில் தேறி விட்டேன் அப்பா! சேகரும் முதல் வகுப்பில் தேறிவிட்டார்!" என்று குதூகலத்துடன் கூறினார்.

"சபாஷ்! கன்கிராஜுலேஷன்ஸ்!" என்று உவகை பொங்க பாராட்டினார் செங்கல்வராயன்.

"நீ முதல் வகுப்பில் தேறி விட்டாயா? என்று பிரமிப்புடன் கேட்ட மார்த்தாண்டன். "ஒருக்கால் அச்சுப்பிழையாக இருக்குமோ? என்று இடக்காகக் கேட்டான். செங்கல்வராயனும் வசந்தாவும் சேர்ந்து சிரித்தார்கள்.

**"ரொம்ப சந்தோஷம் வஸந்தா!" என்று மன நிறைவோடு கூறிய செங்கல்வராயன் "நான் எதிர்பார்த்ததற்கு அதிகமாகவே நீ எனக்குப் பெருமை தேடிக் கொடுத்துவிட்டாய்! இதற்காக நீ விரும்பும் பரிசு எதுவோ அதைக் கேள்** - வாங்கித் தருகிறேன்! என்று உற்சாகமாகக் கூறினார்.

"கட்டாயமாகக் கொடுப்பீர்களா?" என்று ஆவலாக கேட்டாள் வசந்தா.

"எத்தனை லட்சம் செலவானாலும் சரி தவறாமல் வாங்கி கொடுப்பேன்! என்று தீர்க்கமாகக் கூறினார் செங்கல்வராயன்.

"எனக்கு நீங்கள் கொடுக்கும் பரிசால் உங்களுக்கு லட்சக் கணக்கில் செலவு ஏற்படாது. அதற்குப்பதிலாகப் பல லட்சக் கணக்கில் வரவுதான் ஏற்படும்" என்று புதிர்போடுவது போல் பேசினாள் வசந்தா.

"அபத்தம்! அபத்தம்" என்று கெக்கலித்தான் மார்த்தாண்டன்.

செங்கல்வராயன் புன்னகை பூத்தபடி, "வரவோ செலவோ எதுவா இருந்தாலும் யோசிக்காமல் கேள், வசந்தா!" என்று ஆதரவாகக் கூறினார்.

"வேறொன்றுமில்லை அப்பா! நமது சேகர் பொருளாதாரத் துறையில் எம்.ஏ. வகுப்பில் முதலாவதாகத் தேறியிருக்கிறார். அவர் குடும்பம் இருக்கும் நிலையில் அவருக்கு உடனடியாக ஒரு வேலை கிடைத்தால் ரொம்ப உதவியாக இருக்கும்" என்று மெதுவாக ஆரம்பித்த வசந்தா "நீங்கள் இப்போது பதிமூன்று மில்களுக்கு அதிபதியாக இருந்து தனியே கஷ்டப்படுகிறீர்கள். அவருக்கு ஒரு வேலை கொடுத்து உங்களுக்கு ஒரு உதவியாளராக வைத்துக் கொண்டால் இருதரப்பாருக்கும் நல்லதல்லவா" என்று கெஞ்சும் பாவனையில் கூறினாள்.

இதுவரை செங்கல்வராயன் முகத்தில் தாண்டவமாடிக் கொண்டிருந்த புன்னகை மெள்ளமெள்ள மறைய ஆரம்பித்தது யோசனையோடு முகவாய்க் கட்டையைத் தடவியபடி முகட்டு வளையைச் சில வினாடிகள் பார்த்துக்கொண்டு உட்கார்ந்து இருந்தார். பிறகு திடுக்கிட்டு உணர்வு அடைந்தவராய் பலவந்தமாய் ஒரு புன்னகையை தருவித்துக் கொண்டு "யோசிக்கலாம் அம்மா! சாப்பிடு!" என்று காலை ஆகாரத்தைப் புசிக்கும் பணியில் இறங்கினார்.

"நான் சாப்பிட மாட்டேன் அப்பா!" என்று தீர்க்கமான

குரலில் கூறினான் மார்த்தாண்டன்.

"ஏன்?" என்று தவிப்போடு கேட்டார் செங்கல்வராயன்.

நானும் பார்க்கிறேன் - இதுவரையில் நான் எதைக் கேட்டாலும், ஒரு தடவைகூடத் தவறாமல், அதை ஏற்பாடு செய்து கொடுத்து வந்திருக்கிறீர்கள். இப்பொழுது முதல் தடவையாக வசந்தா ஆவலோடு உங்களை ஒரு விஷயம் கேட்டதற்கு மழுப்புகிறீர்களே! அதை நீங்கள் செய்து கொடுத்தால்தான் சாப்பிடுவேன். இல்லாவிட்டால் சாப்பிடவே மாட்டேன் - அதோ பாருங்கள், பரீட்சையில் முதல் வகுப்பு வாங்கித் தேறிய அவள் குதூகலத்தையே பாழ்படுத்தி விட்டீர்களே! அவள் முகம்

எவ்வளவு சோர்ந்துவிட்டது" என்று கழிவிரக்கத்தோடு கூறினான் மார்த்தாண்டன்.

**செங்கல்வராயனின் நிலைமை நிரம்பவும் தர்ம சங்கடமாகி விட்டது. "ஜோகர்" இறந்த பிறகு பல நாட்கள் சமாதி மேட்டிலேயே அழுதுகொண்டு கிடந்த மார்த்தாண்டன், இப்பொழுது தான் சிறிது தெளிவு பெற்று கலகலப்பாக" நடமாடி வருகிறான். இந்த நிலையில் அவனது மனதை நோகச் செய்ய அவர் விரும்பவில்லை. இருந்த போதிலும் சேகரை வேலையில் சேர்த்துக் கொள்ள அவர் விரும்பாததற்குப் பல முக்கிய காரணங்கள் இருந்தன. அந்தக் காரணங்களை அவரால் எந்தக் காலத்திலும் வாய்விட்டுக் கூறமுடியாது. இப்படி இருதலைக் கொள்ளியினுள் எறும்பாகச் சிக்கிக்கொண்ட செங்கல்வராயன், எப்படியாவது சமாளி**த்துக் கொள்ளலாம் என்ற துணிவில், சேகரை வேலைக்குச் சேர்த்துக் கொள்ளத் தீர்மானித்தார்.

இந்த முடிவை அவர் கூறியதும், வசந்தாவைவிட மார்த்தாண்டன் அதிக ஆனந்தம் அடைந்தான்.

13

பவானி அன்றையத்தினம் எல்லை கடந்த மகிழ்ச்சியில் மூழ்கியிருந்தாள். எதிர்காலத்தைப்பற்றி அவள் கொண்டிருந்த குழப்பங்களும், திகிலும் இனியும் அவள் மனதில் ஆதிக்கம் செலுத்த முடியாது. முதல் வகுப்பில் தேறியிருக்கும் தன் புதல்வன் சேகருக்கு நிச்சயம் ஒரு நல்லவேலை கிடைத்துவிடும். அதன் பிறகு அவர்கள் வாழ்க்கை சீரும் சிறப்புடன் செல்லும்....

எதிர்காலத்தைப் பற்றி சேகர் முழு நம்பிக்கை வைத்திருந்தான். பரீட்சை முடிவு தெரிந்ததும். தென்னாட்டில் வேலை கிடைக்கா விட்டாலும், பம்பாய், கலகத்தா, டெல்லி முதலிய இடங்களுக்காவது சென்று வேலை தேடிக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்திருந்தான்.

குடும்பத்தில் இதுநாள் வரை தனது அன்னை பட்டபாடும், தனது கல்வி தடைப்படாமல் வளர அவள் செய்த தியாகமும் சாதாரணமான

வையல்லவென்றும் சேகர் அறிவான். அதற்கு ஈடுசெய்ய உடனடியாக வேலையில் சேர்ந்து பவானியைச் சகலவிதமான சுகபோகங்களில் திளைக்கச் செய்ய வேண்டு என்றும் சேகர் தீர்மானித்திருந்தான்.

**எனவே பரீட்சை முடிவு அவனை அளவற்ற குதூகலத்தில் ஆழ்த்தியது. இதுவரை வெளி** வந்த பத்திரிகை விளம்பரங்கள் பலவற்றை சேகர் சேகரித்து வைத்திருந்தான். அவற்றை யெல்லாம் எடுத்து ஒவ்வொரு விளம்பரமாகப் படித்துப் பார்த்தான்.

பல விளம்பரங்களுக்கு, மனுப்போடும் தேதி காலாவதியாகி இருந்தது. அவற்றை நீக்கிவிட்டு மற்றவற்றைத் தனியே பிரித்தெடுத்தான்.

அந்த விளம்பரங்களையெல்லாம் ஒவ்வொன்றாகத் தாயிடம் படித்துக் காண்பித்த சேகர், ஒவ்வொரு வேலையின் தன்மையையும், ஒவ்வொன்றிலு முள்ள எதிர்கால அனுகூலங்களையும் ஊதிய வசதிகளையும் விளக்கிக்கூறி, எந்த வேலைக்கு முயற்சிக்கலாம் என்று அவளிடம் யோசனை கேட்டுக் கொண்டிருந்தான்.

பவானி ஒரு விஷயத்தை மட்டும் தெளிவாகக் கூறிவிட்டாள். அதாவது சேகர் எங்கு வேலைக்குச் சென்ற போதிலும், அவன் எப்படிப்பட்ட பெரிய அந்தஸ்தில் இருந்தபோதிலும், தன்னால் மட்டும் சொந்த ஊரிலிருந்து கிளம்ப முடியாதென்று திட்டவட்டமாகக் கூறிவிட்டாள், பவானி.

"இந்த ஊர் உனக்கு அப்படி என்ன சாதிக்கிறது அம்மா? உனக்கு ஏன் இந்தக் கர்நாடகப் பந்தம்?" என்று சிரித்தான் சேகர்.

**சேகர்தான் சிரித்தானே தவிர, பவானி புன்னகைகூட பூக்கவில்லை. எங்கோ வெட்ட வெளியை வெறிக்கப் பார்த்தபடி, "இந்த ஒரு விஷயத்தில் மட்டும் என் இஷ்டத்தில் குறுக்கிடாதே! என்று வறண்ட குரலி** ல் கூறினாள்.

சேகர் வியப்போடு அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு இருந்தான். அந்தச் சமயத்தில் யாரோ பரபரப்புடன் உள்ளே ஓடிவரும் சத்தம் கேட்டது. தாயும் மகனும் திரும்பிப் பார்த்தார்கள்.

வசந்தா அளவு கடந்த குதூகலத்தோடு உள்ளே நுழைந்தாள்.

"மாமி மாமி உங்களுக்கு ஒரு சந்தோஷ சமாச்சாரம்!" என்று பரபரப்போடு கூறினாள் வசந்தா.

"நீ வந்தாலே சந்தோஷம் வந்தது என்றுதான் அர்த்தம்! என்று பரிவோடு கூறினாள் பவானி.

"உங்கள் பிள்ளைக்கு ஒரு பெரிய உத்தியோகம் கிடைத்திருக்கிறது! இதோ பாருங்கள், உத்தியோக நியமனப் பத்திரம்!" என்று தனது கையிலிருந்த ஒரு கவரை பவானியிடம் நீட்டினாள்.

சேகர் வேகமாகக் குறுக்கிட்டு அதைப் பிடுங்கிப் பிரித்தான். அந்தக் கவருக்குள் செங்கல்வராயன் கையொப்பமிட்ட ஒரு நியமனச் சீட்டு இருந்தது. புதிதாகத்தான் வாங்கியிருக்கும் "ரேணுகா மில்'லுக்கு சேகரை மானேஜராக நியமித்து மாதச் சம்பளம் ஏழாயிரம் ரூபாய் நிர்ணயம் செய்திருந்தார் செங்கல்வராயன்.

அந்த நியமனப் பத்திரத்தை சேகர் மௌனமாகப் படித்துக் கொண்டிருக்கும் பொழுது, பவானி ஆவலாக அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் சேகரின் முகத்திலே ஆனந்தம் தலை தூக்குவதைப் பார்த்ததும். "என்ன சேகர்? அது என்ன உத்தியோகம்?" என்று ஆவலாகக் கேட்டாள்.

"இது வசந்தாவின் வேலைதான் அம்மா! அவளுடைய அப்பாடிவக்குச் சொந்தமான மில் ஒன்றில் எனக்கு மானேஜர் வேலை வாங்கிக் கொடுத்திருக்கிறாள்! மாதச் சம்பளம் ஏழாயிரம்!" என்று அளவுகடந்த உற்சாகத்தோடு கூறினான் சேகர்.

**அதைக் கேட்டதும் பவானியின் நெஞ்சில் சம்மட்டி கொண்டு அடித்ததைப் போலிருந்தது. அந்த உத்தியோகத்தை ஏற்கக் கூடாதென்று தன் மகனிடம் எச்சரிக்கை செய்ய வேண்டும் தவிப்பு அவளுக்கு ஏற்பட்டது. செங்கல்வராயனின் சம்பந்தம் எக்காரணங் கொண்டும் அந்த வீட்டுக்கு இனி ஏற்படக்கூடாதென்று தான் அவள் தவித்தாள். ஆனால் அதை வாய்திறந்து சொல்ல அவள் அஞ்சினாள். தனது மகளிடம்**

**அம்மாதிரி கூறினால் அதற்குக் காரணம் என்னவென்று கேட்பான். அப்பொழுது அவனிடம் எல்லா விவரங்களையும் மறைக்காமல் கூற நேரிடும். அப்படிக் கூறினால், இளைஞனான சேகர் செங்கல்வராயனைப் பழிவாங்கப் போகிறேனென்று துடித்துக் கிளம்புவான். அதன் விளைவு எப்படிப்பட்ட பயங்கரமாக மாறுமோ? அதனால் சேகரின் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டாலும் ஏற்படலாம்... அல்லது தன் கணவரைப் பறிகொடுத்தது போல, சேகரையும் உயிரோடு பறி கொடுக்க நேர்ந்தாலும் நேரலாம்....இப்படிப் பலவாறாகக் கலங்கித் தத்தளி** த்தது பவானியின் உள்ளம்.

தாயார் எந்தவிதப் பதிலும் சொல்லாமல் சிலைபோல ஸ்தம்பித்து நிற்பதைப் பார்த்த சேகர் விழுந்து விழுந்து சிரித்தவனாய் "என்ன அம்மா! மகிழ்ச்சியில் மூச்சுவிடக்கூட மறந்து விடுவாய் போலி இருக்கிறதே! உன் பிரியப்படியே உள்ளூரிலேயே எனக்கு வேலை கிடைத்துவிட்டது! உன்னைப் பிரிந்து நான் எங்கும்பபோக வேண்டிய அவசியமே இல்லை!என்றான்.

**"ஆமாம்...ஆமாம் என்று தன்னை ஒருவாறு சமாளித் தவளாய்க் கூறிய பவானியின் பார்வை ஹாலி** ல் மாட்டப்பட்டு இருந்த கஜபதியின் படத்தின் பக்கம் சென்றது! அவள் மனம் படபடவென்று அடித்துக் கொண்டது. மனதிற்குள்ளாகவே "நீங்கள் தான் தெய்வமாக இருந்து அவனைக் காப்பாற்ற வேண்டும்" என்று தவிதவிப்புடன் பிரார்த்தனை செய்து கொண்டாள் பவானி.

## 14

"பரிமளா! பரிமளா!"என்று அளவு கடந்த பரபரப்புடன் தம் செல்வியை அழைத்தபடி வீட்டிற்குள் நுழைந்தார் வேதாசலம்.

சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த பரிமளா ஆவலாக ஓடிவந்தாள் "என்ன அப்பா?" என்று அவர் முகத்தைப் பார்த்தபடி வியப்போடு

கேட்டாள்.

"சேரக்கு வேலை கிடைத்து விட்டது, அம்மா!"

"அதற்குள்ளாகவா? எங்கே அப்பா கிடைத்தது"

"நமது செங்கல்வராயன் மில் ஒன்றின் மானேஜராக நியமிக்கப்பட்டு விட்டான்.

"அப்படியா? சம்பளம் என்ன அப்பா? "ஏழாயிரம் ரூபாய்"

"மாதத்திற்கா அப்பா?"

"இல்லை - மாமாங்கத்திற்கு!"என்று சிரித்த வேதாசலம், "பைத்தியக்காரப்பெண்ணே! அவன் பொருளாதாரத்தில் எம்.ஏ. படித்திருக்கிறான்- முதல் வகுப்பில் தேறியிருக்கிறான்! அவனுக்கு தாராளமாய் ஏழாயிரம் ரூபாய் சம்பளம் கொடுக்கலாமே! என்று கூறிவிட்டு மனநிறைவோடு, "அப்பாடா! பவானியம்மாளைப் பிடித்த கஷ்டகாலம் தீர்ந்தது. இனி அவள் நிம்மதியாக தன் காலத்தைக் கடத்திக் கொண்டு போகலாம்" என்றார்!

"நீங்கள்தான் அந்த வேலையை வாங்கிக் கொடுத்தீர்களா அப்பா?" என்று ஆவலாகக் கேட்டாள் பரிமளா.

"நம் தயவு எல்லாம் சேகருக்கு எதற்கு?" என்று சிரித்தார் வேதாசலம்.

"ஏன் அப்பா அப்படிச் சொல்கிறீர்கள்?"

"அவனுக்குப் பெரிய இடத்துத் தயவெல்லாம் ஏராளமாக இருக்கிறது!"

"என்னப்பா மர்மமாய்ப் பேசுகிறீர்கள்?"

"மர்மம் ஒன்றுமில்லை, பரிமளா! உண்மையைச் சொன்னேன்"

"செங்கல்வராயனே வலுவில் சேகருக்கு வேலை கொடுத்தாரா?"

"ஊஹும்!"

"பிறகு?"

"அவரது மகள் வசந்தாவின் சிபார்சின் பேரில் இந்த வேலையைக் கொடுத்திருக்கிறார்"

**இதைக் கேட்டதும் பரிமளாவின் நெஞ்சில் சம்மட்டி அடி விழுந்ததைப் போலி** ருந்தது. வசந்தாவின் உதவியினால் சேகர் தனது வாழ்க்கைக்கு வழி வகுத்துக்கொள்வதை பரிமளா கொஞ்சமும் விரும்பவில்லை. ஏனென்றால் அதன்மூலம் சேகரிடம் வசந்தாவுக்கு அதிகச் செல்வாக்கு ஏற்பட்டுவிடும் என்றும், சேகரைத் தன்னிடமிருந்து அவள் பறித்துக் கொண்டு விடக்கூடுமென்றும் பரிமளா பயந்தாள். ஆனால் இதை வேதாசலத்திடம் அவள் கூறத் துணியவில்லை.

"இந்த வேலைக்கு ஏன் அப்பா, சேகர் ஒப்புக் கொண்டு விட்டார்?" என்று அடக்கமுடியாமல் கேட்டு விட்டாள் பரிமளா.

"ஏனா, நல்ல வேலை! நிறையச் சம்பளம்!"

"இது என்ன வேலை அப்பா?...அரசாங்க வேலைக்கு ஈடாகுமா" என்று மழுப்பினாள் பரிமளா.

"அரசாங்க வேலையில் அந்தஸ்தான் கிடைக்குமே தவிர" இவ்வளவு ஊதியம் கிடைக்குமா? நல்ல சம்பளம் வாங்குவதற்குள் சேகர் ரிடையராகி விட்டாலும் ஆகிவிடுவானே! என்று சிரித்தார் வேதாசலம்.

"என்னவோ! சேகர் இன்னும் நல்ல வேலைக்குப் போயிருக்கலாம்" என்று கூறியபடி மெதுவாக உள்ளே திரும்பினாள் பரிமளா.

அதற்குமேல் அங்கே நின்றால் தன் மனப் போராட்டத்தை தந்தை புரிந்து கொள்ளுவாரோ என்ற திகில் பரிமளாவுக்கு ஏற்பட்டது.

**இன்னொருபுறம் ஓவென்று அழவேண்டும் போலி** ருந்தது.

## 15

புதிதாகக் கிடைத்த உத்தியோகம் சேகருக்கு அளவு கடந்த உற்சாகத்தைக் கொடுத்ததுமல்லாமல், பரபரப்பு உணர்ச்சியையும் தோற்றுவித்தது. வேலைக்குச் சென்ற முதல் நாள் மில்லின் வரவு

செலவுக் கணக்குகளையெல்லாம் பார்வையிட்டுக் கொண்டிருந்தான் சேகர்.

**திடீரென்று அவன் புருவங்கள் நெறிந்தன. இனம் புரியாத குழப்பம் அவன் கண்களி**லே தாண்டவமாடியது. மில் விவகாரங்களைத் தனக்கு விவரிப்பதற்காகக் காத்துக் கொண்டு இருந்த காரியதரிசி வேதாசலத்தை நிமிர்ந்து பார்த்தான்.

"என்ன சேகர்?"என்று ஆவலாக விசாரித்தார் வேதாசலம்.

"கணக்கிலே திடீர்திடீர் என்று பெருந்தொகைகள் வரவு வைக்கப்பட்டு இருக்கின்றனவே அவையெல்லாம் எங்கிருந்து வந்தன?"

"முதலாளி செங்கல்வராயன் வரவு வைத்திருக்கிறார்" என்று சங்கடத்தோடு கூறினார் வேதாசலம்.

"அவருக்கு எப்படி திடீர் திடீரெனப் பணம் வந்தது?"

"இது என்ன கேள்வி சேகர்? அவர் குபேரனாயிற்றே!"

"நான் அதைக் கேட்கவில்லை - என்ன தான் குபேரனாக இருந்தாலும், பதிமூன்று மில்களை ஏககாலத்தில் நிர்வகிப்பவரிடம் சொந்தத்தில் இவ்வளவு பெரிய தொகைகள் இருக்காது. அதனால் தான் கேட்கிறேன்... ஒருக்கால் மற்ற மில்களின் பணத்தை இந்த மில்லுக்கு மாற்றிச் சமாளிக்கிறாரா?"

"...."

"அப்படி மாற்றினாரானால் அது சட்ட விரோதம்! இதே போலச் செய்துதான் கோல்மால் மியான் என்ற கோடீஸ்வரன் சிறையில் இருக்கிறான்! அம்மாதிரி எதுவும் நடக்கிறதா?"என்று கண்டிப்பான குரலில் கேட்டான் சேகர்.

வேதாசலம் சங்கட உணர்ச்சிக்கு ஆளானார்.

**"இதைப்பற்றியெல்லாம் நாம் எதுவும் பேசக்கூடாது சேகர்! இது முதலாளி**கள் விஷயம்!" என்று நாசூக்காகக் கூறினார்.

"உண்மை தான்!"என்று ஒப்புக்கொண்ட சேகர், "ஆனால் உலகநிலை புரியாமல் முதலாளிகள் நடந்து கொண்டால் நாம் அவர்களை எச்சரிக்கை செய்ய வேண்டும். அவர்கள் உப்பை உண்டு வாழும் நாம் செய்ய வேண்டிய முதற்கடமை அது! அந்தக் கடமை உணர்ச்சியில் தான் இப்படிப் பேசுகிறேன்" என்றான்.

வேதாசலம் இன்னும் அதிகமான சங்கட உணர்ச்சி அடைந்தவராய் "சேகர்! ஒரு பெரிய நிர்வாகமென்றால் எவ்வளவோ விஷயங்கள் இருக்கும். பலவற்றை நாம் கண்டுங் காணாதது போலப் போய்விட வேண்டும். தர்ம சங்கடமான கேள்விகளெல்லாம் கேட்கக் கூடாது" என்று கூறி விட்டு, தனது குரலைத் தாழ்த்தியவராய், "உனக்கு ஏன் வீண் வம்புகள் எல்லாம்? நல்ல சம்பளம் கிடைக்கிறது. நாசூக்காக சில வேலைகளைப் பார்த்து விட்டு, இம்மாதிரி விவகாரங்களில் கண்களை இறுக மூடிக்கொண்டு போய் விடுவதே நல்லது!" என்றார்.

அதற்கு என்னவோ பதில் சொல்ல சேகர் வாயெடுத்த பொழுது செங்கல்வராயன் வரும் சத்தம் கேட்டது. வேதாசலம் சட்டென அப்பால் சென்றுவிட்டார்.

பரந்த புன்னகையோடு சேகரின் அறையில் நுழைந்தார் செங்கல்வராயன்.

"என்ன சேகர்; வேலை பிடித்திருக்கிறதா?" என்று குஷாலாகக் கேட்டார்.

"வேலை பிடித்திருக்கிறது - சில விஷயங்கள் தான் பிடிக்க வில்லை!" என்றான் சேகர்.

**மறைவிடத்திலி** ருந்து அவர்கள் உரையாடலைக் கவனித்துக் கொண்டிருந்த வேதாசலம் "தலைவிதியே" எனத் தன் தலையில் அடித்துக் கொண்டார்.

சேகரின் பதில் செங்கல்வராயனைத் துணுக்குறச் செய்தது. "என்ன சேகர் சொல்லுகிறாய்?"

"சில இனங்கள் திடீர் திடீர்" என கணக்குப் புத்தகத்தில் நுழைந்து இருக்கின்றன! அம்மாதிரி திடீர்வரவுகள் வருவது நன்றாக இல்லை" என்றான் சேகர்.

செங்கல்வராயன் தம் உணர்ச்சியை அடக்கிக் கொள் அதற்காக உதட்டைக் கடித்துக் கொண்டார். பிறகு ஒருவாறு சமாளித்தவராய், "அதெல்லாம் ஒன்றுமில்லை எல்லாவற்றிற்கும் என் டயரியில் கணக்கு இருக்கிறது... அவசரத்தில் நான் விவரம் சொல்லாமல் விட்டிருப்பேன்... அவர்களும் கேட்காமல் கணக்கு எழுதிவைத்திருப்பார்கள்." என்று மழுப்பினார்.

"விவரமான கணக்குகளை நீங்கள் அனுப்பி வைத்தால் நல்லது."

"ஆகட்டும், ஆகட்டும்," என்று பலமாகத் தலையாட்டிய செங்கல்வராயன் அங்கிருந்து பரபரப்புடன் கிளம்பி அவராய்,"நாளை மறுதினம் அனுப்புகிறேன். நீ கணக்குகளை கச்சிதம் செய்துவிடு!" என்று கூறிவிட்டு வெளியே நடந்தார்.

அந்த அறையை விட்டு வெளியே வந்த செங்கல்வராயனின் இதயம் எரிமலை போலக் கொந்தளித்தது. மறைவிடத்தில் இருந்தபடி செங்கல்வராயனின் முகத்தோற்றத்தைக் கவனித்துக் கொண்டிருந்த வேதாசலம், "இது நல்லதற்கல்ல" என்று தன் மனதில் புள்ளி போட்டுக் கொண்டார்.

**பல வருஷ அனுபவத்தில் செங்கல்வராயனைப் பரிபூரணமாக அறிந்து வைத்திருந்தார் வேதாசலம். கேட்கத்தகாத சில கேள்விகள் என்று செங்கல்வராயன் அறுதியிட்டு வைத்து இருக்கும் கேள்விகளை அவரிடம் கேட்பது, தற்கொலைக்கு ஒப்பான செய்கையாகும் என்று அவருக்குத் தெரியும். அப்படிப்பட்ட கேள்விகளி** ல் ஒன்றைத்தான் சேகர் கேட்டு விட்டான்! - அதுவும் வேலை கிடைத்த அன்றையத்தினமே!

அதை நினைக்கநினைக்க வேதாசலத்திற்கு மிகவும் வேதனையாக இருந்தது. சேகருக்கு வேலை கிடைத்ததால் பவானி இனியாவது நிம்மதியாக இருப்பாவென்று அவர் நினைத்திருந்த சமயத்தில் அந்த

வேலைக்கே சேகர் உலை வைத்துக்கொள்ள முயலுவதை எண்ணி நிரம்பக் கஷ்டப்பட்டார்.

பவானியை நேரில் சந்தித்துப் பேசி சேகரைச் சற்று சாந்தமாக நடக்கத் தூண்டும்படி செய்ய வேண்டுமென்ற தவிப்பு வேதாசலத்துக்கு ஏற்பட்டது.

## 16

சாப்பாட்டு மேஜையருகே அமர்ந்திருந்த செங்கல்வராயன், சாப்பிடாமல் எழுந்து செல்வதைப் பார்த்ததும் வசந்தாவுக்கு மிகவும் சங்கடமாக இருந்தது எந்த விஷயத்தில் எப்படி இருந்தாலும், செங்கல்வராயன் சாப்பாட்டை மிக ரசித்துச் சாப்பிடுவார். அப்படிப்பட்டவர் சாப்பாட்டையே தீண்டாமல் எழுந்து சென்றது வசந்தாவுக்கு அளவு கடந்த மன வேதனையைக் கொடுத்தது.

வசந்தாவும் தன் சாப்பாட்டைத் தீண்டவில்லை. தந்தை சென்ற பக்கமாகத் தானும் சென்றாள்.

**ஹாலி** ல் கிடந்த சோபாவிலே செங்கல்வராயன் ஆயாசத்துடன் சாய்ந்து கொண்டிருந்தார். அவர் முகத்திலே அளவு கடந்த சஞ்சலம் குடி கொண்டிருந்தது. வசந்தாவும் அவர் அருகே போய் அமர்ந்தாள்.

"ஏன் அப்பா சாப்பிடவில்லை?"

"வேண்டாம் அம்மா!"

"ஏன் வேண்டாம்?"

"இப்பொழுதிருக்கும் மனநிலையில் என்னால் சாப்பிட முடியாது."

"அப்படி என்ன அப்பா வந்தது?"

"உன் அண்ணன் சாப்பாடே வேண்டாமென்று நாயின் சமாதியருகே உட்கார்ந்திருக்கிறானாம். அவன் இல்லாமல் நான் சாப்பிட்டதே இல்லை - அவன் பட்டினியாகக் கிடக்கும் பொழுது எனக்கு எதற்குச் சாப்பாடு?"

"அது உங்கள் தவறுதான் அப்பா?"

"என் தவறா?" என்று புருவத்தை நெறித்தபடி கேட்ட செங்கல்வராயன், எப்படி என் தவறு?" என்று கேட்டார்.

"நாயின் மேல் அண்ணா உயிரை வைத்திருந்தது என்று உங்களுக்குத் தெரியும். அந்த நாய் செத்த பிறகு அண்ணாவின் மனதைத் திருப்ப நீங்கள் என்ன செய்தீர்கள்?"

"எதைச் செய்திருந்தாலும் திருப்பியிருக்க முடியாது?" என்று தீர்க்கமாகக் கூறினார் செங்கல்வராயன்.

"நீங்கள் நினைப்பது சரி இல்லை அப்பா! மனதார மனைவியை நேசிக்கும் கணவன் கூட, மறுதாரம் வந்து விட்டால், மூத்தவள் இறந்த கவலையை மறந்துவிடுகிறான்...."

"அதுபோல?"

"அண்ணாவுக்கு வேறொரு புது நாய் வாங்கிக் கொடுத்துப் பார்த்தால், அவரது மனவேதனை மாறலாமல்லவா"

"அதைப்பற்றி நான் சிந்திக்கவே இல்லை!"

"இப்பொழுது அதைச் செய்யுங்களேன்! ஏற்காட்டிலுள்ள நாய்ப் பண்ணைக்கு அண்ணனை அனுப்பி அவருக்குப் பிடித்தமான ஒரு நாயை வாங்கிவரச் சொல்லுங்கள். துணைக்கு வேண்டுமானால் நமது புதிய மானேஜர் சேகரை அனுப்பலாம். சேகர் ரொம்ப அக்கறையாகக் கவனித்து அண்ணனைக் கூட்டிப் போய் வருவார்" என்றாள் வசந்தா.

செங்கல்வராயனின் முகத்திலே மகிழ்ச்சிகளை படர்ந்தது.

"நீ சொல்லுவது சரியான யோசனைதான். வசந்தா!" என்று உற்சாகமாகக் கூறினார்.

◆ ◆ ◆

**மறுநாள் காலை செங்கல்வராயனின் பங்களாவிலி** ருந்து புறப்பட ஒரு சொகுசு கார் தயாராக நின்றது.

மார்த்தாண்டன் பிரயாணத்திற்கேற்ற ஆடைகளை உடுத்திக் கொண்டு தயாராக நின்றான். சேகரும் வழிப் பயணத்திற்கு வேண்டிய ஏற்றபாடுகளோடு நின்று கொண்டிருந்தான்.

அவர்கள் இருவரையும் வழியனுப்பு அதற்காக செங்கல்வராயனும் வசந்தாவும் உள்ளேயிருந்து வந்தார்கள்.

செங்கல்வராயன் இரண்டு நூறு ரூபாய் கட்டுக்களை சேகரிடம் கொடுத்தபடி, "என்ன விலையாக இருந்தாலும் கொடுத்து வாங்கிவா! பணத்தைப் பற்றி யோசிக்க வேண்டாம்!" என்றார்.

**மார்த்தாண்டன் உற்சாகமாகக் காரில் ஏறி அமர்ந்தான். சேகர் முதலி** ல் செங்கல்வராயனிடம் விடைபெற்றுக் கொண்டான். பிறகு வசந்தா பக்கம் திரும்பிப் புன்முறுவலுடன் "போய்வருகிறேன்!" என்று தலையை ஆட்டினான்.

வசந்தா, தனது தந்தை இருப்பதையும் மறந்து, குறும்பாக நாக்கை நீட்டிப் பழிப்புக் காட்டினாள்.

இதை ஜாடையாகக் கவனித்துவிட்ட செங்கல்வராயனின் முகம் சிவந்தது. இருந்தாலும் மிகச் சிரமப்பட்டுத் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டார்.

கார் புறப்பட்டுச் சென்றது. வசந்தாவும் உள்ளே போய் விட்டாள். ஆனால் செங்கல்வராயன் மட்டும் வெகு நேரம் வரையில் அங்கிருந்து நகரவில்லை. அவரது சிந்தனைகள் பயங்கரமாக அலைபாய்ந்தன.

**தமது மகள் வசந்தா, சேகரிடம் அந்த அளவுக்கு லயித்துப் போயிருப்பது அவர் மனதிலே வேல் கம்பைப் பாய்ச்சியது போலி** ருந்தது. இதற்கு முன்பே சேகர் சம்பந்தமாகத்தான் போட்டிருந்த திட்டத்தைமிக விரைவில் நிறைவேற்றிவிட வேண்டுமென்ற பைசாச வெறி அவருக்கு ஏற்பட்டது.

◆ ◆ ◆

**சேலம் சேர்வராயமலைக் குன்றின் மீதுள்ள "ஏற்காடு" பல விஷயங்களுக்குப் பெயர் பெற்றது. நமது நாட்டிலேயே தலை சிறந்த கல்வி நிலையம் அங்கு தான் இருக்கிறது. நாட்டின் நாலா பக்கங்களிலிருந்தும், பிரபுக்கள் வீட்டுக் குழந்தைகள் அங்கு கல்வி பயில அனுப்பப்படுகின்றன. இயற்கை வளமும், சுகானுபவம் தரும் தட்பவெப்ப நிலையும் ஏற்காட்டின் சிறப்பை இன்னும் அதிகப்படுத்து**கின்றன. நமது நாட்டின் செல்வந்த வணிகர்களும், கலைஞர்களும் அங்கு பங்களா கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அங்கு மேல் நாட்டுப் பெண்மணி ஒருத்தி நடத்திவரும் நாய்ப் பண்ணை மிகவும் பெயர் பெற்றதாகும். அங்கு பல்வேறு விதமான உயர்ந்த ஜாதி நாய்கள் வளர்க்கப்படுகின்றன. அந்தப் பண்ணையில் மிகவும் விலை குறைவான நாய் வாங்க வேண்டுமென்றால் இரண்டாயிரம் ரூபாயாவது கொடுக்க வேண்டும்! அங்கு தான் மார்த்தாண்டனும் சேகரும் நாய் வாங்குவதற்குக் கிளம்பிச் சென்றிருந்தார்கள்.

**சேர்வராயமலையின் அடிவாரத்திலி**ருந்து ஏற்காடு மலைமீது காரில் செல்லும் பயணம் வெகுகுதூகலமானது. கொண்டை ஊசி போல மலையின் மீது இருபத்து இரண்டு; வளைவுகள் இருக்கின்றன. அவற்றில் வேகமாக மோட்டாரில் செல்லும் பொழுது நிரம்ப உற்சாகமாக இருக்கும்.

மார்த்தாண்டன் அந்தப் பயணத்தை மிகவும் ரசித்து அனுபவித்தான். இயற்கையிலேயே கலகலப்பான சுபாவமுள்ள சேகர் அந்த உல்லாசமான சூழ்நிலையில் மிகவும் குதூகலமாக இருந்தான். மார்த்தாண்டனிடம் அவனுக்கு எப்பொழுதுமே ஒரு பரிவு கலந்த அன்பு இருந்தது. அதனால் வழி நெடுகவும் அவனைச் சந்தோஷப்படுத்திக் கொண்டே வந்து கொண்டிருந்தான்.

நாய்ப் பண்ணையை அடைந்ததும்; அங்கிருந்த பல்வேறு விதமான நாய்களைப் பார்த்துப் புளகாங்கிதம் அடைந்தான் மார்த்தாண்டன். வெகு நேரம் தேர்ந்தெடுத்து கடைசியில் ஒரு பொமரேனியன் நாயை வாங்கிக்

கொள்ளத் தீர்மானித்தான் மார்த்தாண்டன். அந்த நாயின் விலை ஐயாயிரம் ரூபாய்தான்.

**சேகர் தன் பையிலி** ருந்து ஐம்பது நூறு ரூபாய்களை எடுத்து அந்த மேல் நாட்டுப் பெண்மணியிடம் நீட்டினான்.

அந்த நோட்டுகளைக் கையில் வாங்கிய அந்தப் பெண்மணி அவற்றை உயரே தூக்கிப் பார்த்துவிட்டு "வேறு நோட்டுகள் கொடு" என்றாள்.

சேகர் அந்த நோட்டுகளை வாங்கிக்கொண்டு வேறு ஐம்பது நோட்டுகளைக் கொடுத்தான்.

அந்த நோட்டுக்களை வாங்கிப் பார்த்ததும் அந்தப் பெண்மணியின் முகம் சிவந்தது.

"என்னமேன்! தமாஷ் பண்ணுகிறாய்!"

**சேகருக்கு என்னவோ போலாகிவிட்டது. அந்த நூறு ரூபாய் நோட்டுக்களை சட்டென்று திருப்பி வாங்கிக் கொண்டு, அவனிடம் இருந்த மற்றொரு கட்டிலிருந்து நூறு ரூபாய் நோட்டுக்களை எண்ணி அவளி** டம் கொடுத்தான். ஒவ்வொரு நோட்டுகளாக அத்தனை நோட்டுகளையும் மெதுவாக மேலே தூக்கித்தூக்கிப் பார்த்தாள் அந்தப் பெண்மணி. அவள் முகம் கடுரமாக மாறியது.

**அளவுகடந்த ஆத்திரத்தோடு அந்த நோட்டுக்களை சேகரின் முகத்தில் வீசி அடித்தபடி, "மோசக்காரா கள்ளநோட்டுக்களைக் கொடுத்து ஏமாற்றவா பார்க்கிறாய்? உடனே இங்கிருந்து ஓடிப்போ! இல்லாவிட்டால் போலீசுக்கு டெலி** போன் செய்வேன்!" என்று கர்ஜித்தாள்.

**அவசரஅவசரமாக அந்த நோட்டுக்களைப் பொறுக்கி எடுத்துக் கொண்ட சேகர் விவரிக்க இயலாத அவமானத் தோடும் கோபாவேசத்தோடும் மார்த்தாண்டனின் கரத்தைப் பற்றி இழுத்துக்கொண்டு வேகமாகத் தங்கள் கார் நின்ற இடத்திற்கு வந்தான். காருக்குள் மார்த்தாண்டனை தள்ளி** விட்டு டிரைவர் ஆசனத்தில் ஏறி

உட்கார்ந்த சேகர் கண்மண் தெரியாத வேகத்தில் அடிவாரத்தை நோக்கி காரைச் செலுத்தினான்.

ஒவ்வொரு கொண்டை ஊசி வளைவிலும் கார் "சர்ர்-சர்ர்" என்று திரும்பும் பொழுது மலைக்கு அப்பாலுள்ள கிடுகிடு பள்ளத்தாக்கில் எகிரிப்போய் விழுந்துவிடுமோ என்று திகில் ஏற்பட்டது.

**ஏற்காடு மலை ரோடு போடப்பட்டதிலி** ருந்து அன்று வரை அவ்வளவு கண்மூடித்தனமாக யாரும் அந்த வழியிலே கார் ஓட்டிச் சென்றதில்லை!

இரவு மணி இரண்டு ஆகியும் செங்கல்வராயனின் வீட்டிலே விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.

**அந்த நேரத்தில் சேகர் ஓட்டிவந்த கார், அசுர வேகத்திலே வந்து "கிரீச்" என்ற சத்தத்தோடு வெளி** யே பிரேக்போட்டு நின்றது. பரபரப்போடு காரை விட்டுக் கீழே குதித்த சேகர் எதிரில் வந்த ஒரு பணியாளை, "எங்கே செங்கல்வராயன்?" என்று ஏக வசனத்தில் விசாரித்தான்.

புதிய மானேஜருடைய தலைவிரிகோல நிலையும் முரட்டுப் பேச்சும் அந்த வேலைக்காரனை கொஞ்சநேரம் திக்குமுக்காடச் செய்துவிட்டது.

"மாடியில் இருக்கிறார்கள்!"என்று பவ்யமாகக் கூறினான் அந்தப் பணியாள்...

**"நான் கீழே ஆபீஸ் அறையில் இருப்பதாகச் சொல்லி** உடனே கூட்டி வா!" என்று கர்ஜித்தான் சேகர்.

"ஆகட்டும் சார்?" என்று வேகமாக மாடியை நோக்கிப் பறந்தான் அந்தப் பணியாள்.

**ஆபீஸ் அறைக்குள் நுழைந்த சேகர் நிம்மதியில்லாமல் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டு இருந்தான். வாழ்க்கையிலே இதைப் போன்ற அவமானகரமான அனுபவம் தனக்கு ஏற்படக்கூடும் என்று அவன் கனவிலும் நினைத்தது இல்லை. மோசக்காரனைப் போல ஒரு பெண்மணியிடம் தன் கைகளாலேயே கள்ள நோட்டுகளைக் கொடுத்து**

**பேரம் பேசி விட்டான்! என்ன பயங்கரம்!... இதை நினைக்கநினைக்க சேகரின் இரத்தம் கொதித்தது. தவறுதலாகக் கலந்து வந்திருந்தால் இரண்டு மூன்று நூறு ரூபாய் நோட்டுகள் கள்ள நோட்டுகளாக** இருக்கலாம். ஆனால் தன்னிடமிருந்த அனைத்து நோட்டுகளும் கலப்படமில்லாத கள்ள நோட்டுகளாக இருந்தனவென்றால் அது செங்கல்வராயன் தெரிந்தே துணிந்தே - செய்த காரியமாகத்தான் இருக்க வேண்டுமென்று சேகர் தீர்மானமாக நம்பினான்... அப்படியானால் செங்கல்வராயனிடம் அளவு கடந்து கள்ள நோட்டுகள் நடமாடுகின்றன! அவற்றை அவனே தயாரிக்கிறான் என்றுதான் தோன்றுகிறது.

**இப்படி பல்வேறு குழப்பங்களி** ல் மனதைச் சிக்கவிட்டு சேகர் குழம்பிக் கொண்டிருந்த சமயத்தில் செங்கல்வராயன் வேகமாக உள்ளே வந்தார். சேகர் இருந்த நிலையைப் பார்த்ததும் அவர் பிரமித்துப் போய் விட்டார் என்றுதான் தோன்றியது.

"என்ன சேகர்?...ஏன்?..." என்று தடுமாறினார்.

**"ஏன் திரும்பி வந்தேன் என்று கேட்கிறீர்களா?" என்று நிதானமான குரலி** ல் கேட்டான் சேகர்.

"என்ன உளறுகிறாய்?" என்று சீறினார் செங்கல்வராயன்.

"உளறவில்லை - ஒழுங்காகத்தான் பேசுகிறேன்! ஜெயிலுக்குள் நேராகப் போய் நுழையாமல் இங்கே எப்படி வந்து நுழைந்தேன் என்று கேட்கிறீர்களா, என்று தான் கேட்டேன்" என்று இன்னும் நிதானமாகக் கூறினான் சேகர்.

"ஜெயிலா? நீ என்ன பேசுகிறாய்?"

"ஆமாம்! ஜெயில்தான்! நீங்கள் கொடுத்த கள்ள நோட்டுகளை மாற்ற முயன்றதற்கு ஜெயில் தானே கிடைக்கும்!"

"கள்ள நோட்டுகளா?" என்று உண்மையிலேயே திகைத்துப் போய்க் கேட்டார் செங்கல்வராயன்.

"எதற்காக நாம் நடித்துக் கொள்ள வேண்டும்? - நீங்கள் என்னிடம் கொடுத்த எல்லா நூறு ரூபாய் நோட்டுகளும் கள்ள நோட்டுகள் தான்!

அவற்றை மாற்றுவதற்கு என்னையா நீங்கள் பலி கொடுக்க வேண்டும்?" என்று குமுறினான் சேகர்.

செங்கல்வராயன் படபடப்போடு, "நீ தவறாக நினைக்கிறாய் சேகர், தவறாக நினைக்கிறாய்!" என்றார்.

"நான் சரியாகவே நினைக்கிறேன், நண்பரே!" என்று வறண்ட குரலில் கூறிய சேகர், "உங்களிடம் பழகிய தோஷத்திற்காக ஒரு புத்திமதி சொல்லுகிறேன் - கள்ள நோட்டு நம்மிடையே நடமாடக் கூடாது; கணக்கிலும் திடீர் திடீர் என பணம் வந்து குதிக்கக்கூடாது!" என்று ஒரு தினுசாகக் கூறிவிட்டு அவரது பதிலுக்கும் எதிர்பாராமல் சரேலென நாகசர்ப்பத்தைப் போல அந்த இடத்தைவிட்டு வெளியேறினான்.

**செங்கல்வராயனால் கொஞ்ச நேரம் வரை அந்த இடத்தை விட்டு அசையக்கூட முடியவில்லை. அவருடைய சிந்தனைகள் பயங்கரமாக வேலை செய்தன. எதிர்பாராதவிதமாகத் தம்மைப் பற்றிய ஒரு அபாயகரமான இரகசியம் அந்த முரட்டு இளைஞனான சேகரிடம் சிக்கிக் கொண்டுவிட்டது. அவன் இப்பொழுது வெளி** யேறிய விதத்தைப் பார்த்தால் மீண்டும் அவர் முகத்தில் விழிப்பவனாகத் தெரியவில்லை... இந்த ஆபத்தான சூழ்நிலையில் இருந்து அவர் தப்பியாக வேண்டும்? - எப்படியும் தப்பியாக வேண்டும்...! எப்படித் தப்புவது?

**இப்படிபட்ட நேரங்களி** ல் தமக்கு அமைச்சனாகவும் தளபதியாகவும் இருந்துவரும் சம்பந்தத்தைக் கூப்பிட்டனுப்பினார் செங்கல்வராயன்.

இருவரும் வெகு நேரம் வரையில் தனியாக என்னவோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

## 17

**கொந்தளி** த்துக் கிளம்பிய உணர்ச்சி வேகம் கொஞ்சங் கூட அடங்காத நிலையில் சேகர், வேகமாகத் தன் வீட்டிற்குள் நுழைந்தான்.

அப்பொழுது கொலுக் கூடத்திலே பரிமளாவும் பவானியும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

சேகர் உள்ளே நுழைந்ததைக் கண்டதும் பவானி ஆச்சரியத்தோடு "இவ்வளவு சீக்கிரத்தில் திரும்பி விட்டாயே?" என்றாள்.

"ஆமாம்" என்று சுருக்கமாகக் கூறிய சேகர் வேகமாக மாடிப்படிக் கட்டில் ஏறி தன்னுடைய அறையை நோக்கி விரைந்தான்.

"அவருக்கு சாப்பாடு தயார் செய்யவேண்டுமா?" என்று கேட்டாள் பரிமளா.

"ஒருக்கால் அவன் திரும்பி வரக்கூடும் என்று எதிர்பார்த்தே சாப்பாடு தயார் செய்து வைத்தேன். நீ இங்கு வந்தபோதே ரொம்ப நேரமாகிவிட்டதால், சாதத்திற்கு ஜலம் விட்டு விடலாமென்று நினைத்தேன். உன்னோடு பேசிக் கொண்டே இருந்ததால் அதைச் செய்யவில்லை. அதுவும் நல்லதாகப் போயிற்று!" என்று சிரித்தாள் பவானி.

**தன் அறைக்குச் சென்ற சேகர் உடைமாற்றிக் கொண்டான். அவன் படபடப்பு இன்னும் அடங்கவில்லை. தன்னை எதிர்நோக்கியிருந்த மகாகேவல நிலையை நினைக்கநினைக்க அவன் இரத்தம் கொதித்தது. அந்த மேல் நாட்டுப் பெண்மணி தன்னைப் போலீஸார் வசம் ஒப்படைத்திருந்தால் தன் நிலைமை எவ்வளவு மோசமாகியிருக்கும்! அந்தக் கள்ள நோட்டுகள் தனது கையிலிருந்து தான் வெளி** யேறின என்று செங்கல்வராயன் ஒப்புக்கொள்ளவா போகிறான்? சிறைக்குச் செல்லும் நிலைமை ஏற்பட்டால் அந்தக் கிராதகன் சேகரைக் காட்டிக் கொடுத்துவிட்டு ஒதுங்கிவிட மாட்டானா!... இந்த எண்ணங்கள்தான் சேகரின் அறிவைச் சுற்றி ஆலவட்டம் போட்டன.

அலங்கோலமாகப் பறந்து கிடந்த தன் கிராப்பை "சரி" செய்து கொண்டு மீண்டும் கீழ்த்தளத்திற்கு இறங்கி வந்தான் சேகர்.

"நாய் வாங்கி விட்டாயா?" என்று ஆவலாகக் கேட்டாள் பவானி.

"செங்கல்வராயன் கொடுத்த பணத்திற்கு நாயா வாங்க முடியும்? - பேய்தான் வாங்க முடியும்!" என்று எரிச்சலாகக் கூறினான் சேகர்.

"ஏன்; பணம் போதவில்லையா?" என்று புரியாமல் கேட்டாள் பரிமளா.

**"பணம் போதாவிட்டால், கடன் சொல்லி** விட்டாவது வரலாமே?"

"பிறகு என்ன?" என்று பிரமித்துப் போய்க் கேட்டாள் பவானி.

**"செங்கல்வராயன் என்னிடம் இரண்டு நூறு ரூபாய் நோட்டுகட்டுகள் கொடுத்திருந்தார். அந்த இருநூறு நோட்டுகளும்** கள்ள நோட்டுகள் ஒன்று பாக்கியில்லாமல் எல்லாம் கள்ள நோட்டுகள்!" என்று இகழ்ச்சியாகக் கூறினான் சேகர்.

"கள்ள நோட்டுகள்" என்ற வார்த்தைகளைக் கேட்டதும் பவானியின் கண்களிலே மின் வெட்டைப் போல ஓர் ஒளி தோன்றியது.

"கள்ள நோட்டுகளா? கள்ள நோட்டுகளா?" என்று அளவு கடந்த குதூகலத்தோடும் அதே சமயம் அளவு கடந்த கலவரத்தோடும் கேட்டாள் பவானி.

தன் தாயிடம் ஏற்பட்ட மாறுதல் சேகரைத் தடுமாறிப் போகச் செய்தது.

"ஆமாம்..."

அதற்கு மேல் சேகரைப் பேசுவதற்கு பவானி விடவில்லை, திடீரென உணர்ச்சி மேலிட்டவளாய், "நீங்கள் சாகவில்லை! நீங்கள் சாகவில்லை!" என்று வாய்விட்டு அலறினாள். அடுத்த வினாடி தன் நினைவு இழந்தவளாய் மூர்ச்சித்துத் தரையில் சாய்ந்தாள்.

திகிலடைந்து போன பரிமளா ஓட்டமாக உள்ளே ஓடி ஒரு பாத்திரத்திலே ஜலம் கொண்டு வந்தாள். சேகர் தன் தாயின் தலையை மடியில் தூக்கி வைத்துக் கொண்டு அவள் முகத்தில் இலேசாக ஜலம் தெளித்தான்.

கொஞ்ச நேரம் சென்றதும் பவானி மெதுவாக கண் விழித்தாள். "அம்மா! அம்மா!" என்று தவிப்போடு அழைத்தான் சேகர். மெல்லமெல்லத் தன்னுணர்வு திரும்பப் பெற்ற பவானி எழுந்து உட்கார்ந்தாள்.

"என்னம்மா, ஏன் இப்படி மூர்ச்சையானீர்கள்;" என்று தவித்தான் சேகர்.

**"ஒன்றுமில்லை சேகர்!" என்று மெதுவாக எழுந்த பவானி நீ சாப்பிடவில்லையா?" என்று பேச்சை மாற்ற முயன்றாள். என்னதான் அவள் நிலைமையைச் சமாளிக்க முயன்ற போதிலும் அவளது உடல் நிலை கட்டுக்கடங்காமல் இருந்ததால் அவள் கால்கள் தள்ளாடின. சட்டென அருகிலி** ருந்த சோபாவில் தொப்பென்று சாய்ந்து உட்கார்ந்தாள்.

"என்னம்மா இது" என்று தவித்தான் சேகர்.

"என்னை ஒன்றுமே கேட்காதே, என்னை ஒன்றும் கேட்காதே" என்று கூறியபடி முகத்தை மூடிக் கொண்டு தேம்பித்தேம்பி அழுதாள் பவானி.

"என்னிடம் கூடவா மறைக்க வேண்டும். எனக்கு அதைச் சொல்லக் கூடாதா;" என்று கெஞ்சினான் சேகர்.

"என்னைத் தொந்தரவு செய்யாதே சேகர்! என் மனநிலை

சரியில்லை - என் உடல் நிலையும் சரியில்லை!" என்று ஆயாசத்தோடு கூறியபடி சோபாவில் சாய்ந்து தேம்பினாள் பவானி.

"அத்தையைத் தொந்தரவு செய்யாதீர்கள்" என்று

மெல்லிய குரலில் கூறிய பரிமளா, "நீங்கள் சாப்பிடுங்கள், பிறகு எல்லாம் பேசிக் கொள்ளலாம்"என்று தவித்தாள்.

"எனக்கு சாப்பாடு வேண்டாம். வழியிலேயே சிற்றுண்டி சாப்பிட்டு விட்டு வந்து விட்டேன்," என்று புளுகினான் சேகர்.

"அத்தை ரொம்ப பலவீனமாக இருக்கிறார்கள். நான் எங்கள் வீட்டிற்கு அத்தையைக் கூட்டிக்கொண்டு போகிறேன்" என்றாள் பரிமளா.

"நான் எங்கும் வரவில்லை"என்று கண்களை மூடியபடியே கூறினாள் பவானி. அவள் உடல் குலுங்கிக் கொண்டிருந்தது.

தன் அன்னையின் போக்கு சேகருக்கு மிக நன்றாகத் தெரியும். விவரிக்க இயலாத ஒரு சோகச் சுமையை உள்ளே வைத்து மனம் சோம்பிப் போய் தத்தளிக்கிறாள் அவள் என்று சேகர் புரிந்து கொண்டான். தன்னிடமும் அவள் ஒன்றும் வாய்விட்டுப் பேச மாட்டாளென்று சேகருக்குத் தெரியும். அந்த நிலையில் இரவு முழுவதும் தனித்திருக்க விடுவது சரியல்லவென்று அவனுக்குப் பட்டது.

எனவே ஆதரவான குரலில் சேகர், "பரிமளாவின் வீட்டில் போய் ஓய்வு எடுத்துக் கொள் அம்மா! உனக்கு உடல்நிலை சரியில்லை" என்று தவித்தான்.

பவானி கொஞ்சநேரம் வரை மௌனமாகத் தேம்பிக் கொண்டிருந்தாள். பரிமளா மீண்டும் அவளை வற்புறுத்தி அழைத்தாள். கடைசியில் ஒருவாறாகப் பரிமளாவோடு புறப்பட்டுச் செல்ல ஒப்புக் கொண்டாள் பவானி.

கொஞ்ச நேரம் கழிந்ததும் பவானிக்குச் சிறிது தெம்பு ஏற்பட்டது. பரிமளாவின் கரத்தைப் பற்றியபடி அவள் தோளில் சாய்ந்து கொண்டே பரிமளாவின் வீட்டை நோக்கி நடந்தாள் பவானி. அந்த வீடுவரை கூடச்சென்று வழியனுப்பிவிட்டு மீண்டும் தன் வீட்டிற்குத் திரும்பினான் சேகர்.

சேகரின் மூளை முன்னைவிட அதிகமாகக் குழம்பிப் போயிருந்தது. ஒரு அதிர்ச்சியால் தாக்குண்டு வீட்டில் நுழைந்தவனை மற்றொரு பேரதிர்ச்சி நிலை தடுமாறச் செய்து விட்டது.

**தன் தாய் பவானியின் வார்த்தைகளி** ல் பொதிந்திருந்த மர்மம் என்ன? கள்ளநோட்டுகள் என்று கேள்விப்பட்டதும் அவள் ஏன் அவ்வளவு குதூகலமும் பரபரப்பும் அடைந்தாள்? யாருடைய சாவை அந்தக் கள்ள நோட்டுகளோடு பிணைத்துப்புலம்பினாள்? தன்னிடம் ஏன் அந்த விவரங்களை மறைக்கிறாள்?

**இவற்றையெல்லாம் நினைக்கநினைக்க சேகருக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போலி** ருந்தது. சிகரெட்டின் மேல் சிகரெட்டாகப் புகைத்தபடி வீட்டிற்குள் உலாவிக் கொண்டிருந்தான். எந்த வழியில் சிந்தனையை ஓட்டிப் பார்த்தாலும் எந்தப் புதிருக்கும் அவனுக்கு விடை கிடைக்கவில்லை.

## *18*

"என்ன பயங்கரம்! என்ன பயங்கரம்!" என்று பதறிய வேதாசலம் "இதுவரையில் இந்த விவரங்களை நீ ஏன் என்னிடம் சொல்லவில்லை?"என்று துடித்தார்.

அந்த அறையில் ஒரு நாற்காலியில் கண்களைத் துடைத்தவாறு உட்கார்ந்திருந்தாள் பவானி. வேதாசலம் தம் கைகளைப் பின்னால் கட்டியவாறு அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக உலாவிக் கொண்டிருந்தார். அளவுகடந்த சிந்தனையால் அவர் நெற்றியிலே சுருக்கங்கள் விழுந்திருந்தன. பரிமளா அங்கு இல்லை. அவள் படுக்கைக்குச் சென்று வெகு நேரமாகிவிட்டது. அவள் உறங்கி விட்டாள் என்று அறிந்த பிறகு தான் பவானி எல்லா விவரங்களையும் வேதாசலத்திடம் பேச ஆரம்பித்தாள்.

"இதுவரையில் நீ ஏன் என்னிடம் சொல்ல வில்லை?" என்று மீண்டும் தவித்தார் வேதாசலம்.

**"சொல்லி** என்ன அண்ணா பயன்?"என்று தேம்பித்தேம்பி அழலானாள் பவானி.

**"இந்த விவரங்களை நீ சேகரிடம் சொல்லி** விட்டால் என்ன?" என்று கேட்டார் வேதாசலம்.

"கூடவேகூடாது?"என்று துடிதுடித்துப் போன பவானி, "ஒருக்காலும் கூடாது, அண்ணா! சேகர் இளங்கன்று. அவனுக்குப் பயமே தெரியாது. ஏதாவது முரட்டுத் தனமாகச் செய்துவிடுவான். ஆனால் அந்த நாசகாரக் கிராதகன் செங்கல்வராயனோ ஈவிரக்கம் இல்லாதவன் எதற்கும்

துணிந்தவன். சேகரையும் அவன் தடயமே இல்லாமல் செய்துவிடுவான்!" என்று பதறினாள்.

வேதாசலம் வினாடி நேரம் மௌனமாக நின்று யோசித்தார் பிறகு பவானி கூறியதை ஆமோதிக்கும் பாவனையில் தலையை ஆட்டினார்.

"நீ சொல்வதும் சரிதான், பவானி! அந்தக் கிராதகன் எதற்கும் துணிந்தவன்தான்! நாம் உஷாராகத்தான் இருக்க வேண்டும்"

கொஞ்சநேரம் வரையில் இருவரும் ஒன்றும் பேசவில்லை. பிறகு திடீரென எதையோ நினைத்துக் கொண்டவரைப் போல வேதாசலம் திரும்பி, "இவ்வளவு விஷயங்கள் நடந்திருக்கும் பொழுது நீ ஏன் சேகரை அந்தச் செங்கல்வராயனிடமே வேலைக்கு அமர அனுமதித்தாய்?" என்று கேட்டார்.

**"என்னால் அதைத் தடுக்க முடியவில்லை, அண்ணா! எந்தக் காரணத்தைச் சொல்லி** , நான் தடை செய்ய முடியும்? சரியான காரணம் சொல்லாவிட்டால் சேகர் ஒப்புக்கொள்ள மாட்டான்! அதனால் தான் மனதிலே திகில் தாண்டவமாட அவனை வேலையில் சேர அனுமதித்தேன்," என்று அழுதாள் பவானி.

"உண்மைதான்!" என்று நெடுமூச்சு விட்டார் வேதாசலம்.

தன்னிடம் கூறப்பட்ட சிக்கலான பிரச்சனைக்கு வேதாசலத்தினால் அப்பொழுது எந்தவித பரிகாரமும் கூற முடியவில்லை. சிறிது தவறி நடந்தாலும், முதலுக்கே மோசம் வந்து விடும் என்பதை அவர் உணர்ந்திருந்தார். அந்த நிலையில் எந்த விதத் திட்டத்தையும் அவசரப்பட்டுக் கூறி, பழிக்கு ஆளாகிவிடக் கூடாதென்ற பரதவிப்பு அவரிடம் குடிகொண்டிருந்தது.

"நீ இன்னும் இரண்டொரு நாட்கள் இங்கேயே தங்கியிரு பவானி! அதற்குள் ஏதாவது தக்க ஏற்பாடு செய்து விடுவோம்! சேகருக்கு இங்கிருந்து சாப்பாடு அனுப்பிவிடலாம். அவனை நீ பார்த்தாலும் எதுவும் சொல்ல நேரிட்டு விடலாம். நீ இங்கேயே இரு!" என்றார் வேதாசலம்.

"எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லையே, அண்ணா!" என்று தேம்பித்தேம்பி அழுதாள் பவானி.

மறுநாள் காலை வழக்கத்திற்கு விரோதமாக சீக்கிரமாகவே மில்லுக்குப் புறப்பட்டுச் சென்றார் செங்கல்வராயன். அவர் பயந்தது போலவே சேகர் வேலைக்கு வரவில்லை.

**சேகரின் சேவையை இழந்து விடுவதைப் பற்றி செங்கல்வராயன் சிறிது கூட லட்சியம் செய்யவில்லை. ஆனால் தன்னைப் பற்றி ஓர்** அபாயகரமான இரகசியத்தை அறிந்து கொண்ட சேகர், தன்னை விட்டு விரோத பாவத்தில் பிரிந்து செல்லுவதை அவர் விரும்பவில்லை. அம்மாதிரி பிரிந்து செல்ல விடுவது பேராபத்தாக முடியுமென்று அவர் அஞ்சினார்.

சேகரின் முரட்டுச் சுபாவத்தைப் புரிந்து கொண்டிருந்த செங்கல்வராயன், அவனை மீண்டும் தனது வழிக்குக் கொண்டு வருவது நடக்காத காரியம் என்பதை அறிவார். இருந்த போதிலும் எப்படியாவது நயவஞ்சகமாக அவனை மீண்டும் தம்மிடம் இழுத்து, அதன் பிறகு அவனால் அபாயம் ஏற்பட முடியாத ஓர் இடத்திற்கு அவனை அனுப்பி விடுவது தான் சரியானது என்ற முடிவுக்கு வந்தார். எந்த வழியில் சேகரைத் தம்மிடம் இழுத்து வருவது?...

**இதற்கு அவரது அமைச்சனும் தளபதியுமான சம்பந்தம் கூறியயோசனை வெகு புத்திசாலி** த்தனமாக அவருக்குத் தோன்றியது. அதன்படி தம் மகள் வசந்தாவையே ஏமாற்றி அந்த வசந்தாவிடம் எப்படிஎப்படி நடந்து, தம் திட்டத்தை வெற்றி பெறச் செய்யவேண்டும் என்றும் நிர்ணயித்துக் கொண்டார். இந்தக் கிராதக ஏற்பாடுகளுக்கு சம்பந்தத்தின் வக்கிரமூளை வெகுவாகப் பயன்பட்டது. எந்தவிதமான பந்த பாசமுமற்ற காட்டுமிருகமான சம்பந்தம் ஒருவன்தான், அந்தச் சூழ்நிலையில் அப்படிப்பட்ட திட்டங்களை மாசு மருவில்லாமல் போடமுடியும்!

வழக்கத்திற்கு விரோதமாகப் பிற்பகல் பதினோரு மணிக்கே தன் தந்தை வீடு திரும்பி விட்டதைப் பார்த்து வசந்தா வியப்படைந்தாள்.

**"என்ன அப்பா, இவ்வளவு சீக்கிரமாக வந்துவிட்டீர்கள்?" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள். "எல்லா மில்களையும் மூடிவிடப்** போகிறேன். அம்மா!" என்று எங்கோ பார்த்தபடிக் கூறினார் செங்கல்வராயன்.

திடுக்கிட்டுப் போன வசந்தா! "என்ன சொல்லுகிறீர்கள், அப்பா!" என்று புரியாமல் கேட்டாள்.

**"ஆமாம் வசந்தா! எனக்கு எல்லாம் வெறுத்துப் போய் விட்டது! எனக்கு யாருமே உதவி இல்லை! பெற்ற பிள்ளையும் இப்படி இருக்கிறான்! வேலைக்கு வருபவனும் இவனைவிட மோசமாக இருக்கிறார்கள்! நான் தனியே கிடந்து ஏன் சாக வேண்டும்; அதனால்தான் எல்லாவற்றையும் தொலைத்துத் தலைமுழுகிவிடத் தீர்மானித்து விட்டேன்!" என்று சலி** ப்புடன் கூறினார்.

"நம்மை நம்பியிருக்கும் ஆயிரக் கணக்கான தொழிலாளர்களின் கதி என்ன ஆவது?" என்று திகிலுடன் கேட்டாள் வசந்தா.

"எல்லோரும் சாகட்டும்!" என்று கடுகடுப்புடன் கூறிய செங்கல்வராயன், "அவர்கள் வாழ்வதற்காக நான் சாக வேண்டும் என்கிறாயா?" என்று சீறினார்.

"என்னப்பா இது ஆச்சரியமாக இருக்கிறது! - நமது சேகர் எப்படி இருக்கிறார்?"

"வேலையை விட்டு நின்று விட்டான்!"

"என்ன!" என்று பிரமை தட்டிப் போய்க் கேட்டாள் வசந்தா.

"ஆமாம்! நமது வரவு செலவில் எவ்வளவோ நூறு ரூபாய் நோட்டுகள் நம்மிடம் வருகின்றன. அவற்றில் சில கள்ள நோட்டுகள் கலந்து வந்திருக்கின்றன. அவற்றை நான் தான் அச்சடித்தேன் என்று சொல்லிவிட்டு சேகர் வேலையை விட்டு நின்று விட்டான்!"

"அபத்தம்!" என்று கொதித்தாள் வசந்தா.

"இதையெல்லாம் பார்த்துத்தான் எனக்கு எல்லாமே வெறுத்து விட்டது!"

"நான் சேகரிடம் பேசுகிறேன் அப்பா! அவரை நான் கேள்விகள் கேட்கிறேன்!" என்று துடித்தாள் வசந்தா.

"அந்த அல்பனிடம் நீ எதற்குப் போகிறாய்?"

**"எப்படி அப்பா, அவர் இப்படி அவசர முடிவுக்கு வரலாம்? அவருக்கு உண்மையைத் தெளி** யவைத்தால் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வேலைக்கு வருவார்!" என்று திட நம்பிக்கையோடு கூறினாள் வசந்தா.

**"வேண்டாம் வசந்தா! பதுமையா கோபுரத்தைத் தாங்குகிறது? இந்த சேகரைக் கண்டா, நான் இவ்வளவு பெரிய ஸ்தாபனத்தை வளர்த்தேன்? அவன் கிடக்கிறான். விட்டுத் தள்ளு!" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டுப் பிறகு எங்கோ பார்த்தவராய் தமக்குத் தானே பேசிக் கொள்பவரைப் போல, "அவன் திறமைசாலி** தான்! என்னைப் போலவே தனி ஒருவனாக நின்று பதின்மூன்று மில்களல்ல, முப்பது மில்களானாலும் கட்டி மேய்க்கக் கூடியவன்தான்! ஆனால் அவசரக்காரனாக இருக்கிறானே!" என்று முணுமுணுத்தார்.

"நீங்கள் பிடிவாதம் செய்யாதீர்கள். அப்பா! நான் அவரைச் சந்தித்து உடனே வேலைக்குப் போகச் செய்கிறேன். நீங்கள்போய் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்" என்றாள் வசந்தா.

"அவள் கூறியதைக் காதில் வாங்காதவர் போல செங்கல்வராயன், "டேய் முனியா!" என்று தம் வேலையாளை சத்தமிட்டு அழைத்தார். முனியன் வேகமாக ஓடி வந்தான்.

"மாடியில் எனக்குப் படுக்கைப் போடு!" என்று கூறிவிட்டு "விறு விறு" வென்று மாடிப்படிக்கட்டை நோக்கி நடந்தார்.

தன் தந்தை மேல் தளத்தை அடையும் வரையில் அங்கேயே நின்று கொண்டிருந்த வசந்தா, வேகமாக வெளிவாயிற்படியை நோக்கி விரைந்தாள்.

**தன் தந்தையின் தொழிலுக்கு துணையாக இல்லாமல் வேலையிலி** ருந்து நின்று விட்டால் தன் தந்தையின் அபிமானத்தை சேகர் இழக்க

நேரிடுமே. அதனால் தன் மனம் நிறைந்தவனை மணம் செய்து கொள்ள முடியாமல் போய் விடுமோ என்று வெகுவாக மனம் கலங்கிய வசந்தா எப்படியேனும் சேகரை கட்டாயப் படுத்தி மீண்டும் வேலைக்கு செல்ல வைத்து விடுவது என்ற தீர்மானத்துடன் சேகர் வீட்டை நோக்கி விரைந்தாள்.

**முதல்நாள் நிகழ்ச்சியை அவளி** டம் விவரித்த சேகர் அவளது தந்தையின் மீதுள்ள சந்தேகத்தையும் கூறினான். அதைக் கேட்டதும் அழ ஆரம்பித்து விட்டாள் வசந்தா.

"அப்படி நினைப்பது அநியாயம். அந்தக் கள்ள நோட்டுகள் எப்படியோ கலந்துபோய் அவர் கைக்கு வந்திருக்கின்றன. அதற்கு விபரீத பொருள் கற்பித்து பேசுவது அவசர புத்தியைத் தான் காட்டுகிறது" என்று பலவாறு தேம்பியபடி கூறினாள்.

அதற்குமேல் பேச புரியாமல் நின்ற சேகரை,"தன்னை உயிருக்கு உயிராக நேசிப்பது உண்மையானால், தன் தந்தைக்கு உதவி புரியும் வகையிலாவது உடனே வேலைக்கு போகத்தான் வேண்டும்" என்று குழந்தைபோல் பிடிவாதம் செய்தாள் வசந்தா.

அதைக் கேட்டதும் சேகரின் உள்ளம் துடித்தது. தன்னிடம் எல்லைமீறிப் பாசம் காட்டி தன்னையே முழுதும் நம்பியிருக்கும் வசந்தா தம் எதிர்கால வாழ்வை முன்னிட்டே தன்னை வேலைக்கு போக கட்டாயப் படுத்துகிறாள் என்று உணர்ந்த சேகர் மீண்டும் வேலைக்கு செல்ல சம்மதித்தான்.

தன் கண்களைத் துடைத்து முகத்தை சரி செய்து கொண்ட வசந்தா மகிழ்ச்சியுடன் அங்கிருந்து கிளம்பினாள்.

## *19*

**முக்கியமான சில கடிதங்களில் கையெழுத்து வாங்குவதற்காக, அவற்றை எடுத்துக் கொண்டு செங்கல்வராயனின் பிரத்தியேக அறையை நோக்கி நடந்தார் வேதாசலம். வழக்கத்திற்கு விரோதமாக அந்த**

**அறைக்கதவு சாத்தப்பட்டிருந்தது. சாதாரணமாக மில்லி** ல் உள்ள தன் அறைக்கதவைச் சாத்தி வைத்துவிட்டு செங்கல்வராயன் யாருடனும் உரையாடுவது கிடையாது.

எனவே வேதாசலம் தர்மசங்கடமான உணர்ச்சியோடு என்ன செய்வதென்று புரியாமல் மேலே நடந்தார். அவர் நடந்து சென்ற பக்கத்தில் செங்கல்வராயனின் அறை ஜன்னல் ஒன்று இருந்தது. அந்த ஜன்னல் கதவு சாத்தப்பட்டிருந்த போதிலும் அதன் வழியாக இலேசாகச் சத்தம் வந்து கொண்டிருந்தது.

தன்னையும் மீறி சில வினாடிகள் அங்கு நின்று அந்த சத்தத்தைக் கவனித்தார் வேதாசலம்.

செங்கல்வராயன் மிக மெதுவான குரலில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தார். பேச்சு முழுவதும் கேட்காவிட்டாலும் இரண்டொரு வார்த்தைகள் மட்டும் வேதாசலத்தின் காதில் விழுந்தன. அடிக்கடி "சேகர்" - "சேகர்" என்று செங்கல்வராயன் குறிப்பிட்டுக் கொண்டு இருந்தார்.

அவர் யாரிடம் சேகரைப் பற்றி அவ்வளவு ரகசியமாகப் பேசிக் கொண்டிருக்கிறார் என்று தெரிந்து கொள்ள வேதாசலம் தவித்தார்.

"அப்பொழுது அறைக்குள்ளேயிருந்து ஒரு கணீரென்ற குரல் "சரியான ஏற்பாடு!" என்று உற்சாகமாகக் கூறியது வேதாசலத்திற்குக் கேட்டது. அந்தக் குரலிலிருந்து அது சம்பந்தம் தான் என்று புரிந்து கொண்டார் வேதாசலம்.

**சம்பந்தத்தோடு செங்கல்வராயன் எப்படிப்பட்ட திட்டம் போடுவாரென்று வேதாசலத்திற்கு மிக நன்றாகத் தெரியும். சாதாரணமாக சம்பந்தத்தை அவர் மில்லுக்கு வரவழைப்பதே அபூர்வம். அதுவும் அவனோடு அறைக்கதவைச் சாத்திக் கொண்டு பேசுகிறாரென்றால் அந்த விஷயம் மகா மோசமானதாக இருக்கும் என்று வேதாசலத்திற்குத் தெளி** வாகப் புரிந்தது.

அதன் பிறகு உள்ளே நடக்கும் பேச்சை மிக உன்னிப்பாக ஒட்டுக் கேட்க வேதாசலம் முயன்ற போதிலும் அந்த முயற்சியில் அவரால் வெற்றிபெற முடியவில்லை. அதன் பிறகு இரண்டொரு தடவை "சேகர்" பெயர் அடிப்பட்டது.

ஒருவாறு உள்ளே இருந்தவர்கள் பேச்சை முடித்துக் கொண்டார்கள் என்று புரிந்து கொண்டதும், வேதாசலம் அங்கே நிற்கக் கூடாதென்று தீர்மானித்து தம் அறைக்கு விரைந்தார்.

கால்மணி நேரங்கழித்து செங்கல்வராயனின் அறையை நோக்கி வேதாசலம் சென்றபோது அறைக் கதவு திறந்தே இருந்தது. உள்ளே சேகர் உட்கார்ந்து இருந்தான். கடிதங்களைக் கொண்டுபோய் செங்கல்வராயன் முன்னால் வைத்தார் வேதாசலம். அவற்றில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார் செங்கல்வராயன். அவற்றை எடுத்துக்கொண்டு வேதாசலம் வெளியேறும் வரை செங்கல்வராயன் எதுவும் பேசவில்லை.

பிறகு அன்பொழுகும் குரலில் செங்கல்வராயன், "நடந்ததை எல்லாம் மறந்து விடுவோம். சேகர்! அது ஒரு பயங்கரக்கனவு என்றுதான் சொல்ல வேண்டும்! நீ போய் வேலையைப் பார்! நான் வீட்டுக்குப் புறப்படும் பொழுது உன் அறைக்கு வருகிறேன் அப்பொழுது ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி கூறுகிறேன்" என்றார்.

**சேகரும் புன்னகையுடன் அங்கிருந்து கிளம்பித் தன் அறையை அடைந்தான். வேதாசலத்திற்குத் தன் அறையில் இருப்புக் கொள்ள இ**ல்லை. மணி ஐந்து அடித்ததும் செங்கல்வராயன் கிளம்பி விடுவார் அதன் பிறகு நேரே சேகரைச் சந்தித்து அவனை "உஷார்"ப் படுத்தி வைக்க வேண்டுமென்று தீர்மானித்தார் வேதாசலம். மணி சரியாக ஐந்து அடிக்க ஐந்து நிமிடம் இருக்கும் பொழுது செங்கல்வராயன், சேகரின் அறைக்கு வந்தார்.

"சேகர்! இன்றிரவு உனக்கு நம்வீட்டில் சாப்பாடு! அது முடிந்ததும் உன்னிடம் மிக முக்கியமான சந்தோஷச் செய்தியொன்று கூறப்போகிறேன். தவறாமல் வரவேண்டும்" என்றார் செங்கல்வராயன்.

"ஆகட்டும் வருகிறேன்," என்றான் சேகர். ஒரு விதத்தில் செங்கல்வராயனின் பெருந்தன்மையான போக்கு சேகரை வெகுவாகக் கவர்ந்தது.

செங்கல்வராயன் வெளியே சென்று தமது காரில் ஏறிய மறுவினாடியே வேதாசலம் வெகு வேகமாகத் தம் இடத்தை விட்டுக் கிளம்பி, "சேகர்!" என்று அழைத்தபடி சேகரின் அறைக்குள் நுழைந்தார். சேகர் வெளியே புறப்படும் முன்னால் அவனிடம் அந்தத் தகவலைக் கூறி எச்சரிக்கை செய்துவிட வேண்டுமென்ற தவிப்பு அவருக்கு!

ஆனால் அவர் எதிர்பார்த்ததைப்போல விஷயங்கள் நடைபெற இல்லை. ஐந்து மணிக்கு மில்லுக்கு வருவதாகக் கூறியிருந்த வசந்தா, "சேகர்" என்று அழைத்தபடி உள்ளே நுழைந்தாள். வசந்தாவைப் பார்த்ததும், வேதாசலம் எதற்கு வந்தார் என்று கேட்கக்கூட சேகர் மறந்துவிட்டான்.

**"இன்று இரவுச் சாப்பாடு உங்கள் வீட்டில்தான், வசந்தா!"என்று உற்சாகமாகக் கூறிய சேகர், "உன் தந்தை என்னை அழைத்து இ** ருக்கிறார்" என்றான். "அப்படியா!" என்று குதுகலத்துடன் கேட்ட வசந்தா, ரொம்ப நல்லதாகப் போயிற்று! சினிமா முடிந்ததும் நேரே போய்விடலாம்!" என்றாள்.

உடனே சேகர் வேதாசலத்தின் பக்கம் திரும்பி, "அம்மா விடம் தகவல் சொல்லி விடுங்கள்! நான் விருந்து சாப்பிட்டு விட்டுத்தான் வீடு திரும்புவேன் எனக்காக அவர்கள் சாப்பிடாமல் காத்திருக்க வேண்டாமென்று கூறிவிடுங்கள்" என்றான்.

பூனையின் வீட்டில் எலிக்கு விருந்தா என்று அவர் உள்ளம் குமுறியது.

## 20

பவானி தன் வீட்டிற்குப் புறப்பட்டு சென்று விட்டாளென்ற விவரம் வேதாசலத்திற்குத் தெரியாது. அப்படித் தெரிந்திருந்தாலும், அவளைச்

சந்திப்பதற்கு அவர் சென்றிருக்க மாட்டார். ஏனென்றால் அவர் மனோநிலை அவ்வளவு தூரம் குழம்பியிருந்தது.

**செங்கல்வராயனின் பிரத்தியேக அறையில் நடந்த சதியைப் பற்றி சேகரிடம், தான் கூறாமல் விட்டுவிட்டது முட்டாள் தனமாகவே அவருக்குத் தோன்றியது. வசந்தா குறுக்கிட்ட போதிலும் சேகரை தனியே அழைத்துப்போய் அதைச் சொல்லி** இருக்க வேண்டுமென்றே அவருக்குத் தோன்றியது. இருந்த போதிலும் இனி எதுவும் செய்வதற்கில்லை, சந்தர்ப்பம் கை நழுவிப்போய் விட்டது...

**கடமை தவறிவிட்டோம் என்ற எண்ணத்தினாலோ என்னவோ அவர் நிரம்பவும் சோர்ந்து போயிருந்தார். வீட்டை அடைந்தபோது அவர் ஒரு நோயாளி போலவே தோற்றமளி**த்தார்.

தன் தந்தை இருந்த நிலையைப் பார்த்து பரிமளா திடுக்கிட்டு விட்டாள்.

"என்ன அப்பா? உங்கள் உடம்புக்கு என்ன?" என்று படபடப்போடு கேட்டாள்.

"ஒன்றுமில்லையம்மா!"

"உங்களுக்கு உடல்நிலை சரியில்லை! நீங்கள் மறைக்கிறீர்கள்" என்று தவித்தாள் பரிமளா.

**"அதெல்லாம் ஒன்றுமில்லை பரிமளா! உன்னிடம் ஏன் மறைக்கப் போகிறேன்" என்று கூறியபடி ஒரு நாற்காலியில் ஆயாசத்தோடு அமர்ந்த வேதாசலம், கொஞ்ச நேரம் வரை எதுவுமே பேசவில்லை. வெட்ட வெளி**யை வெறிக்கப் பார்த்தபடி சிலை போல உட்கார்ந்திருந்தார்.

பரிமளா சிறிது நேரம்வரை அவரையே பார்த்தபடி நின்றாள். அவரது அப்பொழுதைய மனோநிலையில் எதுவும் கூறமாட்டாரென்று பரிமளா புரிந்து கொண்டாள். மெதுவாக உள்ளே சென்று வேதாசலத்திற்குச் சாப்பாடு பறிமாறும் வேலையில் ஈடுபட்டாள்.

சாப்பாட்டைக்கூட வேதாசலம் சரிவரச் சாப்பிடவில்லை ஏதோ கடனென்று கொஞ்சம் சாப்பிட்டார். சாப்பாடு முடிந்ததும் முடியாததுமாக

தன் அறைக்குச் சென்ற வேதாசலம் கொஞ்சநேரம் வரை குறுக்கும் நெடுக்குமாக உலவிக் கொண்டு இருந்தார். அவருடைய சிந்தனைகள் இன்னும் தீவிரமாயின. மனதை அழுத்திக் கொண்டிருந்த பாரத்தை யாரிடமாவது வாய்விட்டுக் கூறி ஆற்றிக்கொள்ளாதவரை அதன் பளு அவரை வெகுவாக வருத்தியது.

தன் சாப்பாட்டை முடித்துக் கொண்டு பரிமளா தந்தையின் அறைப்பக்கம் வந்தாள், படுக்கையை விரித்து வைத்துவிட்டு, வேதாசலம் அறையில் நடந்து கொண்டிருந்தார்.

"அப்பா!"

"என்னம்மா"

"சொல்லப்போகிறீர்களா, இல்லையா அப்பா" என்று கேட்கும் பொழுதே பரிமளாவின் குரலில் அழுகை தொனித்தது.

வேதாசலத்திற்கு எதையும் தாங்கும் இதயம் இருந்தாலும், தமது அருமை மகளின் கண்ணீரைத் தாங்கிக் கொள்ளும் சக்தி மட்டும் கிடையாது.

"எனவே பரபரப்போடு வேதாசலம், "ஒன்றுமில்லையம்மா - அது சேகரின் விஷயம்" என்றார்.

"சேகரின் விஷயமா! என்ன அப்பா!" என்று இன்னும் அதிகத் தீவிரமாகக் கேட்டாள் பரிமளா.

வேதாசலம் சுருக்கமாகத் தான் கேள்விப்பட்டதையும், தனது மனதில் எழுந்த சந்தேகத்தையும் கூறிவிட்டு; "இன்று இரவு சேகர் அவர்கள் வீட்டிற்குப் போவது எனக்குச் சஞ்சலமாக இருக்கிறது" என்றார்.

"அப்படி என்னப்பா நடந்து விடும்" என்று கலவரத்தோடு கேட்டாள் பரிமளா.

"யார் சொல்ல முடியும்" என்று எங்கோ பார்த்தபடி கூறிய வேதாசலம். "அவன் எதற்கும் துணிந்தவன்!"என்று பீதி கலந்த குரலில்

கூறினார்.

"உங்களால் எதுவும் செய்ய முடியாதா அப்பா", என்று திகிலோடு கேட்டாள் பரிமளா.

"நம்மால் என்ன செய்யமுடியும், அம்மா, பணம் பத்தும் செய்யும்! ம்...ம்...ம்..! என்னவோ பகவான் இருக்கிறார்" என்று பெருமூச்சு விட்டபடி தன் படுக்கையில் போய் படுத்தார் வேதாசலம்.

**கொஞ்சநேரம் வரை பரிமளா கற்சிலைபோல் நின்று கொண்டிருந்தாள். சேகரை ஏதோ ஒரு பேராபத்து எதிர்நோக்கி இருக்கிறதென்று அவளுக்குத் தெளி** வாகப் புரிந்தது. தன் தந்தை செயலற்ற நிலையில் சித்திரவதை படுவதையும் பரிமளா புரிந்து கொண்டாள். அவளையறியாமல் அவள் உடல் நடுங்கியது.

எங்கிருந்தோ ஒரு கடிகாரம் பத்து தடவை அடித்தது. தனது தந்தையின் பக்கம் பரிமளாவின் பார்வை திரும்பியது. அளவு கடந்த அயர்வினால் வேதாசலம் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்.

திடீரென ஏதோ முடிவுக்கு வந்தவளாய் பரிமளா தெருவாயிற்பக்கம் நடந்தாள். கதவைத் திறந்துகொண்டு வீதிப் பக்கம் அடியெடுத்து வைத்தவளாய், தெருக்கதவை மெதுவாக இழுத்துச் சாத்தினாள். பிறகு ரோடில் இறங்கி இருபுறமும் கவனித்துவிட்டு, செங்கல்வராயன் வீடிருந்த திசையிலே வேகமாக நடக்க ஆரம்பித்தாள்.

## *21*

சொகுசு கார் ஒன்று செங்கல்வராயனின் வீட்டின் முன்னால் நின்று கொண்டிருந்தது. அன்று பௌர்ணமி தினமாதலால், வெளிப்புறமுள்ள மின்சார விளக்கு அணைக்கப்பட்டிருந்தது. அது பரிமளாவிற்குப் பெரிதும் உதவியாக இருந்தது என்றே சொல்ல வேண்டும்.

**காரின் அருகில் யாரும் காணப்படவில்லை. பரிமளா மெல்லமெல்லப் பூனைபோல அடிவைத்து பூச்செடிகளின் நிழல்மறைவில் பதுங்கிப்பதுங்கி பங்களாவை நெருங்கினாள். கீழ்த்தளத்தில் எந்த**

**நடமாட்டமுமில்லை. மாடியிலிருந்து தான் பேச்சுக்குரல் கேட்டுக் கொண்டிருந்தது. பரிமளா ஓசைப் படாமல் மாடிப் படிக்கட்டில் ஏறி மேலே நடந்தாள். மாடியிலிருந்து பெரிய சாப்பாட்டு ஹாலில் மங்கலானவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. எல்லா பணக்கார வீடுகளையும் போல செங்கல்வராயன் வீட்டிலும் மின்சார சிக்கனம் கடைப்பிடிக்கப் பட்டு வந்ததால், ஹாலுக்கு வெளிப்புறமிருந்த வராந்தாவில் ஒரு மூலைப்** பக்கம் சென்ற பரிமளா, அங்கிருந்த ஒரு ஜன்னல் இடுக்கு வழியாக உள்ளே ஹாலைக் கவனித்தாள்.

சாப்பாட்டு மேஜை அருகே செங்கல்வராயன், சேகர், வசந்தா மார்த்தாண்டன் ஆகிய நால்வரும் தங்கள் சாப்பாட்டை முடித்து விட்டு பேசிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

அன்றையச் சாப்பாடு நேர்த்தியாக இருந்ததென்று சேகர் கூறினான்.

"செங்கல்வராயன் சிரித்தார். "இந்தச் சாப்பாட்டைப் பிரமாதமாகச் சொல்லுகிறாய்! ஆனால் என் மனைவி காமாட்சி உயிரோடிருந்த காலத்தில் அவள் சமைத்துப் பரிமாறிய சாப்பாட்டிற்கு இணையாக நான் இதுவரை சாப்பிடவே இல்லை. அவளுடைய திறமை எல்லை கடந்தது. சாப்பாடு மட்டுமல்லாமல் குழந்தை வளர்ப்பிலும் சரி, வீட்டு நிர்வாகத்திலும் சரி. என் மனைவி காமாட்சிக்கு இணை யாரும் கிடையாது. என் வாழ்க்கையைப் பொறுத்த வரையில் அவளோடு எனக்கு! எல்லாம் போய் விட்டது!" என்று பெருமூச்சோடு கூறினார்.

**தன் தாயின் பேச்சு பேசப்பட்டதும் மார்த்தாண்டனின் தோற்றத்திலே திடீரென ஒரு மாறுதல் ஏற்பட்டது. அவன் நெற்றி நரம்புகள் புடைத்துக் கிளம்பின. முகம் முழுவதும் முத்துமுத்தாக வியர்வைத் துளிகள் அரும்பி நின்றன. அவன் கண்கள் வெட்ட வெளியை நிலைக்குத்தாகப் பார்த்தபடி நின்றன. சட்டென்று தன் ஆசனத்தை விட்டுத் துள்ளி** யெழுந்த மார்த்தாண்டன், "விரு"ட்டென அங்கிருந்து ஓட ஆரம்பித்தான்.

"அதைப் பார்த்த வசந்தா வேதனையோடு, "ஏன் அப்பா இப்பொழுது அம்மாவின் பேச்சை எடுத்தீர்கள்? அண்ணாவை அது

பாதிக்கிறதென்று தெரிந்தும் நீங்கள் அடிக்கடி இப்படிப் பேசி விடுகிறீர்கள்!" என்று குறைப்பட்டாள்.

செங்கல்வராயன் சங்கடத்தோடு "மறந்து போய்ப் பேசி விட்டேன், வசந்தா!" என்று கூறிவிட்டு சட்டென நிமிர்ந்து உட்கார்ந்து, சேகரை நோக்கி, "சேகர்! நான் சொல்ல வேண்டிய விஷயத்தைச் சொல்லி விடுகிறேன். இன்றையத் தினம் உன்னை இங்கு விருந்து சாப்பிட அழைத்ததற்கு வேறு காரணம் இருக்கிறது. திருப்பூர் ஆலை அதிபர் பாஸ்கர் என்பவர் இங்கு வந்திருக்கிறார். அவர் விருந்தினர் மாளிகையில் தங்கியிருக்கிறார். அவருடைய மில்லையும் விலைக்கு வாங்க நான் தீர்மானித்திருக்கிறேன். விலை விவரங்களெல்லாம் பேசி முடித்து விட்டேன். அவர் அதிகாலையில் ஊருக்குப் புறப்படப் போகிறாராம். இன்று இரவே அச்சாரப் பணம் அவருக்கு அனுப்பி வைப்பதாகக் கூறியிருக்கிறேன். முதன் முதல் உன் கையால் அட்வான்ஸ் கொடுத்து மில்லை வாங்கி உன் கைராசியைப் பார்க்கப் போகிறேன்!" என்று உற்சாகத்தோடு கூறினார்.

"தாராளமாய்ப் பாருங்கள்" என்று புன்னகையோடு கூறினான் சேகர்.

"அதற்கு நான் கியாரண்டி!" என்று சிரித்தாள் வசந்தா.

**வெளி** யில் மறைந்து இதைக் கவனித்துக் கொண்டிருந்த பரிமளாவுக்கு உடம்பெல்லாம் தீப்பற்றி எரிவதைப் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

செங்கல்வராயன் தன் ஆசனத்தை விட்டு எழுந்து, "நான் பணம் எடுத்து வருகிறேன்!" என்று கூறிவிட்டு ஹாலை விட்டுக் கிளம்பி வெளி வராந்தா பக்கம் நடந்து வந்தார்.

பரிமளா, தான் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்த மூலைப்பக்கம் நன்றாக மறைந்து கொண்டாள். வராந்தாவை அடைந்த செங்கல்வராயன், பரிமளா பதுங்கியிருந்த இடத்திற்கு எதிர் திக்கில் நடந்து சென்றார். பரிமளா மீண்டும் ஜன்னல் அருகே சென்று உட்புறம் கவனித்தாள்.

**யாருமில்லாமல் தனியே விடப்பட்டதால், சேகர் மெதுவாக எழுந்து வசந்தாவை நெருங்கி அவள் கையைப் பற்றினான். வசந்தா ஒரு கிளுகிளுத்த புன்னகையுடன் தலையைக் குனிந்து கொண்டுமாட்டேன் என்ற பாவனையில் தலையை ஆட்டினாள். சேகர் ஆர்வத்தோடு அவள் முகத்தை உயரே நிமிர்த்தினான். வசந்தாவின் செவ்விதழ்கள், அலைகாற்றில் சிக்கிய தாமரை மடல்கள் போலத் துடித்தன. ஆர்வத்தோடு அவள் முகத்தருகே தன் முகத்தைக்கொண்டு போனான் சேகர். அதன் பிறகு நடந்த காட்சியைக் கண்ட பரிமளா சட்டென்று தன் முகத்தைப் பொத்திக் கொண்டாள். மீண்டும் அவள் தலை நிமிர்ந்த பொழுது அவள் கண்களி**லே கானாறு போலக் கண்ணீர் பெருகி வடிந்தது. "அத்தான்! நீங்கள் என்னுடையவரல்ல! என்னுடையவரல்ல!" **என்று மெல்லிய குரலில் முணுமுணுத்தபடி தன்னுணர்வற்றவளாய் வராந்தாவில் நடக்க ஆரம்பித்தாள். மாடிப்படிக்கட்டு இருந்த இடத்தை அவள் நெருங்குவதற்கு முன்னால் அவளது இடது பக்கமிருந்த ஒரு அறைக்குள்ளிருந்து கிளம்பிய சத்தம் அவளை உணர்வு பெறச் செய்தது. திடுக்கிட்டு அந்தப்பக்கம் திரும்பிப் பார்த்தாள். பாதி திறந்திருந்த ஜன்னல் கதவு வழியாக அறைக்குள் நடப்பது அவளுக்குத் தெளி**வாகத் தெரிந்தது...

உள்ளே, செங்கல்வராயன் தம் கையாளான சம்பந்தத்திடமிருந்த ஒரு தோல்பையை வாங்கியபடி, "எவ்வளவு இருக்கிறது?" என்று கேட்டார்.

"ஒரு லட்சம் இருக்கிறது!"

"எல்லாம் நம்முடைய சரக்கு தானே?"

"கலப்பே இல்லாத கள்ள நோட்டுகள்!" என்று சினிமா வசனம் பேசினான் சம்பந்தம்.

"சரி!" என்று திருப்தியோடு தலையாட்டிய செங்கல்வராயன் "சேகரிடம் இதைக் கொடுத்து நேராக விருந்தினர் மாளிகைக்கு அனுப்பப் போகிறேன். அவன் கார் புறப்பட்டதும் நீ உடனே போலீசுக்கு டெலிபோன் செய்யவேண்டும். கள்ள நோட்டுக்காரன் சேகர் அதை

வெளியூரில் வினியோகிக்கக் காரில் போகிறானென்றும், செல்வ வினாயகர் கோவில் முச்சந்தியில் நின்றால் அவன் காரை மறித்து, சரக்கோடு அவனைப் பிடித்து விடலாமென்றும் போலீஸாரிடம் சொல்லு உன் பெயர் என்னவென்று கேட்டால், ஏதாவது புளுகு!" என்றார்.

"மீன் குஞ்சுக்கு நீச்சல் பழகிக் கொடுக்கிறீர்களா?" என்று சிரித்தான் சம்பந்தம்.

சரி; நீ முன்னால் கீழே போய்க் கார் அருகே நின்று கொண்டிரு!"

**அடுத்த வினாடி சம்பந்தம் வெளியே என்பதை உணர்ந்த பரிமளா, பரபரப்போடு இரு புறமும் பார்த்து விட்டு, மீண்டும் தான் முதலி** ல் மறைந்திருந்த இடத்திற்கே விரைந்து பதுங்கி நின்றாள்.

சில வினாடிகளில் சம்பந்தம் மாடிப்படி வழியாகக் கீழே இறங்கிச் சென்றான். செங்கல்வராயன் தன் கையிலே தோல்பையுடன் சேகர் இருந்த ஹாலுக்கு வந்து கொண்டிருந்தார்.

அடுத்தபடியாக என்ன செய்வதென்று பரிமளாவுக்குப் புரியவில்லை. அங்குமிங்கும் பார்த்தாள். அவள் நின்று கொண்டிருந்த இடத்தின் அருகே மின்சார விளக்குகளின் "மெயின் - சுவிட்ச்" இருந்தது பரிமளாவின் கண்கள் மலர்ந்து பிரகாசித்தன.

ஹாலுக்குள் நுழைந்த செங்கல்வராயன் தன் கையில் இருந்ததோல் பையை சேகரின் பக்கம் நீட்டியபடி, "இதில் ஒரு லட்ச ரூபாய் இருக்கிறது. இதை கொடுத்துவிட்டு பாக்கி தொகைக்கு ஒரு வாரத்தில் "பாங்-டிராப்ட்" வாங்கி அனுப்புவதாகச் சொல்லு!" என்று கூறிக் கொண்டிருக்கும் பொழுதே திடீரென விளக்குகள் அணைந்தன.

"என்ன இது..." என்று ஏதோ கூற ஆரம்பித்தபடி வேகமாகத் திரும்பினார் செங்கல்வராயன்.

அதே வினாடி கையிலிருந்த தோல் பையை ஒரு கரிய உருவம் "வெடுக்" கென்று பிடுங்கிக்கொண்டு வெளியே பறந்தோடுவதை உணர்ந்தார் செங்கல்வராயன்!

**வெளி** யே ஓடிய அந்த உருவம் மாடிப் படிக்கட்டில் "தடதட" வென இறங்கிச் செல்வதை உணர்ந்த செங்கல்வராயன் "பிடி-பிடி" என்று கூச்சல் போட்டார்.

இதற்குள் கீழ்த்தளத்தை அடைந்து விட்ட அந்தக் கரிய உருவமான பரிமளா ஒரே தாவில் தெரு வாயிற்கதவை அடைந்து காரைத் தாண்டி தோட்டத்திலே மறைந்து ஓட ஆரம்பித்தாள்.

**திடீரென பங்களாவின் உள்ளே மின்சார விளக்குகள் எரிய ஆரம்பித்தன. "பிடி-பிடி!" என்று கூச்சலிட்டபடி செங்கல்வராயன் கீழ்த்தளத்திற்கு ஓடி வந்தார். இந்தக் கூச்சலைக் கேட்டு காரின் மீது சாய்ந்து கொண்டு சிகரெட் பிடித்துக் கொண்டிருந்த சம்பந்தம் திடுக்கிட்டு உற்றுக் கவனித்தான். தோட்டத்துக் கோடியிலே ஒரு நிழலுருவம் ஓடுவது அவன் கண்களுக்குத் தெரிந்தது. சட்டென்று தன் கையிலி** ருந்த சிகரெட்டை வீசி எறிந்து விட்டு அந்த உருவத்தைத் துரத்திக் கொண்டு ஓடினான்.

## 22

கட்டு மீறிய கதி கலக்கத்திற்கு ஆளான பரிமளா எந்தத் திசையில் ஓடுவதென்று தெரியாமல் கால் போன வழியே ஓட ஆரம்பித்தாள். தனக்குப் பின்னால் தன்னை ஒரு முரடன் துரத்தி வருவது அவளுக்குத் தெரிந்தே இருந்தது.

அவன் கையில் சிக்காமல் அவள் எப்படியும் தப்பியாக வேண்டும்! தன் வீட்டுப் பக்கம் செல்வதற்கு அவளுக்குத் துணிவு ஏற்படவில்லை. ஏனென்றால் தன்னைத் துரத்திவருபவன், ஒருக்கால் தன்னை வீட்டுக்குள் நுழைந்து பிடித்து விட்டால் அதனால் தனது தந்தைக்கு மிகப்பெரிய தொல்லை வந்து சேருமென்று பரிமளா அஞ்சினாள்.

**எனவே இருள் கண்ட பக்கமெல்லாம் வளைந்துவளைந்து ஓடினாள் பரிமளா. பூரணசந்திரன் அவளுக்கு எதிரியாக மிகப் பிரகாசமாய்க் காய்ந்து கொண்டிருந்தான். கையிலிருக்கும் பையை எங்காவது ஒரு இடத்தில் வீசி எறிந்து விட வேண்டுமென்று தவித்தாள் பரிமளா.**

**ஒருக்கால் அந்தப் பையை வீசி எறிந்தால், தன்னைத் துரத்திவருபவன் மீண்டும் அதை எடுத்துப்போய் செங்கல்வராயனிடம் கொடுத்து விடக்கூடுமென்றும் செங்கல்வராயன் தன் திட்டப்படி சேகரை நயவஞ்சக வலையில் தள்ளி** விடக் கூடுமென்றும் அவளுக்குத் தோன்றியது.

எப்படியிருந்தாலும் கையிலே பையுடன் ஓடுவது அவ்வளவு வசதியாக இல்லை. அவளது வேகத்தையே அது தடைப் படுத்தியது. அதை எங்காவது அவள் எறிந்தாக வேண்டும்.

இந்த முடிவோடு இறைக்கஇறைக்க அவள் ஓடிக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக ஒரு பாழுங்கிணறு குறுக்கிட்டது. அந்தக் கிணற்றுக்குள் பையை வீசி எறிந்து விட்டு வேகமாக ஓட ஆரம்பித்தாள் பரிமளா. நேராக ஒரு குறிப்பிட்ட இலக்கு வைத்து அவள் ஓடி இருந்தால், சம்பந்தம் இந்நேரம் அவளைப் பிடித்திருப்பான். ஆனால் தனக்கே நிர்ணயமில்லாமல் திடீர்திடீரென அவள் திசை மாறி ஓடியதால் சம்பந்தம் அவளைப் பிடிக்க முடியாமல் திணறி விட்டான்.

எங்கெங்கோ சுற்றிக் கடைசியாக மாந்தோப்பிற்குள் நுழைந்தாள் பரிமளா. வெகு தொலைவிலே அவளைப் பின் தொடர்ந்து வந்த சம்பந்தம் ஒரு கரிய உருவம் வேகமாக மாந்தோப்பிற்குள் நுழைவதைக் கவனித்து விட்டான். வேகமாகத் தோப்பை நோக்கி ஓடி வந்தான்.

**இருண்டு கிடந்த தோப்பிற்குள் நுழைந்து ஓடிய பரிமளா அங்குள்ள பேய்ப் பங்களா பக்கம் நெருங்கினாள், பங்களாவின் முன் கதவு திறந்திருந்தது. சட்டென உள்ளே நுழைந்த பரிமளா பங்களா கதவைச் சாத்தி உட்புறம் தாளி**ட்டுக் கொண்டாள்.

**துரத்தி வந்த சம்பந்தம் சுற்றிலும் அங்குமிங்கும் பார்த்தான். எங்கும் ஒரே நிசப்தமாக இருந்தது. பங்களாவை நெருங்கி அங்கு** யாராவது ஒண்டி நிற்கிறார்களா என்று கவனித்தான். அங்கு யாரும் இல்லை. பங்களாக் கதவும் சாத்தப்பட்டபடி இருந்தது.

அந்தச் சமயத்தில் சிறிது தொலைவிலே நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டது. வேகமாக அந்தத் திசையை நோக்கி ஓடினான் சம்பந்தம்.

பங்களாவின் உள்ளே பதுங்கிக் கொண்டிருந்த பரிமளாவுக்குப் பயங்கரமாக மூச்சு வாங்கிக் கொண்டிருந்தது. தன் சேலைத் தலைப்பினால், பெருகி ஓடும் வியர்வையைத் துடைத்து விட்டுக் கொண்டாள். நிற்கக் கூட முடியாமல் அவள் கால்கள் கெஞ்சின. மெதுவாக முந்தானையால் விசிறிக் கொண்டபடி இருண்டு கிடந்த அந்த ஹாலைத் திரும்பிப் பார்த்தாள்.

**இருளி** னூடே ஒரு விசித்திரமான அமைதி குடி கொண்டிருந்தது. புழுக்கத்தின் வாசனையோடு பலவிதத் துர்க்கந்தங்களும் சேர்ந்து வீடு ஒருவிதப் பயப்பிராந்தியை மூட்டியது.

அந்தச் சமயத்தில் மாடிப்படிக் கட்டிலே யாரோ இறங்கி வரும் சத்தம் கேட்டது. திடுக்கிட்டுப் படிக்கட்டின் பக்கம் திரும்பினாள் பரிமளா.

**மாடிப்படியிலே தலைவிரி கோலமாய் பத்திரகாளி** போல் ஒரு பெண் உருவம் கன்னங்கரேலென்று கறுப்பு உடையணிந்த படி மெதுவாக இறங்கிவந்தது. அதன் பேய்க்கரத்திலே பளபளவென மின்னும் ஒரு கொலைக்கத்தி இருந்தது!.

**இரத்தத்தை உறைந்து போகச் செய்யும் அந்தக்காட்சியைக் கண்ட பரிமளா பயங்கரமான குரலில் வீறிட்டு அலறி விட்டாள். அதே வினாடி ஒரு அமானுஷ்யக் கூச்சலோடு பாய்ந்து ஓடி வந்த அந்தப் பேய் உருவம், பரிமளாவின் நெஞ்சிலே "சதக் சதக்" என்று தன் கையிலி**ருந்த கத்தியால் பலமுறை குத்தியது.

நிம்மதி இல்லாமல் உலாவிக் கொண்டு இருந்த செங்கல்வராயனைச் சம்பந்தம் மீண்டும் சந்திப்பதற்குக் கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்திற்கு அதிகமாக ஆகி விட்டது.

"திருடன் தப்பி விட்டான்!" என்று தலை குனிந்தபடி கூறினான் சம்பந்தம். செங்கல்வராயன் வினாடி நேரம் ஸ்தம்பித்து நின்றார். பிறகு சேகர் இருந்த பக்கம் திரும்பினார்.

**"சேகர்! இன்று சகுனம் சரி இல்லையே!" என்று வறண்ட குரலில் கூறிய செங்கல்வராயன், நீ வீட்டுக்குப் போ! இன்னொரு தடவை**

**பார்த்துக் கொள்ளலாம்" என்றார். சில வினாடிகளி** ல் சேகரும் அங்கிருந்து கிளம்பினான்.

## 23

அதிகாலையிலேயே வேதாசலம் படுக்கையை விட்டு எழுந்து விடுவார். அவருக்கு முன்னாலேயே பரிமளாவும் படுக்கையிலிருந்து எழுந்து விடுவது வழக்கம் வேதாசலம் எழுவதற்கு முன்பாகவே அவருக்கு ஸ்நானம் செய்ய வெந்நீர் போட்டு வைத்துவிடுவாள்.

அன்று காலையில் வேதாசலம் எழுந்திருக்கும்போது மணி ஆறு ஆகிவிட்டது. தன்னை மீறி அயர்ந்து தூங்கிவிட்டதற்கு வெட்கியவராய், "பரிமளா! பரிமளா!" என்று அழைத்தபடி அறையை விட்டு வெளியே வந்தார்.

**பரிமளா வீட்டில் இல்லை! தெருக்கதவு சாத்தப்பட்டு இருந்தது. ஒருக்கால் பவானியின் வீட்டிற்கு அவள் சென்றிருக்கலாம் என்று நினைத்த வேதாசலம், வாசற்கதவைத் தாளிட்டு விட்டு தன் காலைக் கடன்களை முடிக்கப் பின்கட்டுக்குச் சென்றார். சமையற்கட்டில் அடுப்பு** பற்ற வைக்கப்படாம் இருந்தது. அவருக்குச் சிறிது வியப்பை ஏற்படுத்தியது. ஏதோ அவசரமாக பவானி வீட்டிற்கு அவள் சென்றிருக்கக் கூடுமென்று மனதைத் தேற்றிக் கொண்டார்.

பல் துலக்கிக் கொண்டு தானே அடுப்பைப் பற்ற வைத்து வெந்நீர் தவலையை நிரப்பி வைத்தார். தண்ணீர் சுடும் வரையில் காத்திருக்க வேண்டியிருந்ததால், ஹாலில் கிடந்த நாற்காலியில் வந்து உட்கார்ந்தார்.

அப்பொழுது யாரோ தெருக்கதவை "படபட"வென்று தட்டும் சத்தம் கேட்டது. தம் மகள் பரிமளாதான் திரும்பி விட்டாள் என்று நினைத்து, "எங்கே அம்மா போய்விட்டாய்?" என்று கேட்டபடி வாசற்கதவைத் திறந்தார்.

வெளியே பவானி தலைவிரி கோலமாக நின்று கொண்டிருந்தாள்.

"என்ன பவானி? என்ன?" என்று பதறினார் வேதாசலம்.

"நான் என்னத்தைச் சொல்வேன் அண்ணா?" என்று கதறியபடி அவர் காலடியில் விழுந்து அலறினாள் பவானி.

"என்ன பவானி? சேகருக்கு எதுவும் நேர்ந்துவிட்டதா?" என்று தவித்தார் வேதாசலம்.

அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லும் அவசியத்தை பவானிக்கு வைக்காமல், சேகரே அங்கு வந்துவிட்டான். அவன் தோளிலே இரத்த வெள்ளத்தில் ஊறிய பரிமளாவின் பிணம் கிடந்தது. அவனுக்குப் பின்னால் ஊர்க்காரர்கள் சிலர் வந்திருந்தார்கள்.

அந்தக் காட்சியைக் கண்ட வேதாசலம் தடுமாறி விழுந்து விடாமலிருக்க வாசற் கதவைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். சேகர் மெதுவாக உள்ளே நுழைந்து பரிமளாவின் சவத்தைத் தரையில் கிடத்தினான்.

"மாந்தோப்பு பேய் இவள் உயிரைக் குடித்து விட்டது அண்ணா! என் மருமகளாக்கி நான் மகிழ நினைத்த என் செல்வத்தை அந்தப் பாழும் பேய் பறித்துக்கொண்டு விட்டது அண்ணா!" என்று கதறினாள் பவானி.

வேதாசலம் அந்த உயிரற்ற உடலையே வெறிக்கப் பார்த்தபடி நின்றார்.

"கூட்டத்தினரில் ஓர் ஆசாமி முன்னால் வந்து, "ஐயா! மாந்தோப்பில் மாடு மேய்க்க என் மகன் போனான். அப்பொழுது மாந்தோப்பு பங்களா திறந்து கிடந்ததைப் பார்த்து, உள்ளே எட்டிப் பார்த்திருக்கிறான். உங்கள் பெண் பிணமாகக் கிடந்ததைப் பார்த்து அலறிக்கொண்டு வந்து என்னிடம் சொன்னான். நான் ஓடிப்போய்ப் பார்த்துவிட்டு பவானி அம்மாளிடம் வந்து தகவல் கொடுத்தேன்" என்று நடந்த விவரங்களை விவரித்தான்.

"அந்தப் பேச்சுகள் எதுவுமே வேதாசலத்தின் காதில் விழவில்லை வெகுநேரம் வரை பரிமளாவின் உடலை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்த வேதாசலம், திடீரென குண்டடிபட்ட யானை பிளிறுவதைப்

போல பயங்கரமாகக் கூச்சலிட்டபடி, "பரிமளா" என்று அலறிக் கொண்டே அந்த உடலின்மீது தடாலென விழுந்தார்.

நெஞ்சு பிளக்கும் அந்த சோகக் காட்சியைக் காணச் சகியாமல் சேகர் வேறு பக்கம் திரும்பிக் கொண்டான்.

"நீ போய் விட்டாயா பரிமளா! தனியாக ஏன் போனாய்? என்னை ஏன் அழைக்கவில்லை? உனக்காகத் தானே நான் வாழ்ந்தேன் - உனக்காகத் தானே இந்தப் பாவி வாழ்ந்தேன்!" என்று வேதாசலம் தம் இரு கரங்களாலும் நெஞ்சிலே படீர் படீர் என அறைந்து கொண்டார்.

"வேண்டாம் அண்ணா வேண்டாம்!" என்று அவருடைய இரு கரங்களையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள் பவானி.

**"என்னிடம் சொல்லி** க் கொள்ளாமல் போக நான் என்ன தீங்கு உனக்குச் செய்தேன் பரிமளா? ஊரிலுள்ளோர் போற்றி வளர்ப்பதுபோல் உனக்குப் பொன்னும் பூஷணமும் பூட்டி வளர்க்கவில்லை என்று என்னை வெறுத்தாயா? என்னுடைய இந்தப் பாழான உடலை வளர்க்க உன்னை வேலைக்காரியாகப் பயன்படுத்தினேனென்று என்னை இகழ்ந்து ஒதுங்கினாயா?" என்று அலறிய வேதாசலம், "கோ"வென்று கதறியவராய், "நான் கிராதகன் தான் பரிமளா! நான் சுயநலக்காரன்தான்! எனக்கு இதயமே இல்லை! இந்த நெஞ்சு பயங்கரமான கல்நெஞ்சு உன்னை வறுமையிலும் உழைப்பிலும் வாடித் தவிக்கச் செய்து பார்த்து ரசித்த பாழ்நெஞ்சு," என்று பைசா வெறிகொண்டவர் போல படீர்படீரென மீண்டும் பலமுறை தம் நெஞ்சிலே அறைந்து கொண்டார்.

கதிகலங்கிப் போன பவானியும் சேகரும் எவ்வளவோ முயன்றும் அவரைத் தடுக்க முடியவில்லை!

திடீரென வேதாசலத்தின் தலை சுழன்றது. பரிமளாவின் பிணத்தின் மீதே தலை கவிழ்ந்து சாய்ந்தார் பரபரப்போடு அவரது சுவாசத்தை சோதனை செய்து பார்த்தாள் பவானி. அவள் முகம் பயங்கரமாக மாறியது அவசர அவசரமாக அவரது கைகளையும் கால்களையும் தொட்டுப் பார்த்தாள்.

**அடுத்த வினாடி ரத்தத்தை உறைந்து போகச் செய்யும் பயங்கரக் குரலிலே "அண்ணா!"என்று வீறிட்டு அலறியபடி வேதாசலத்தின் உயிரற்ற உடலி** ன் மீது விழுந்தாள் பவானி.

## 24

வேதாசலத்தின் மரணத்திற்குப் பிறகு பவானி ஒரு நடை பிணம் போலவே ஆகி விட்டாள். ஏக காலத்தில் அவளுக்கு ஏற்பட்ட அந்த இரட்டை அதிர்ச்சி பவானியைப் பைத்தியம் பிடித்தவள் போல ஆக்கி விட்டது.

மாந்தோப்பு பங்களாவில் நடந்த படுகொலையைப் பற்றி போலீசாருக்கு தகவல் கிடைத்ததால் சில தினங்கள் வரை அங்கு தீவிரமாக புலன் விசாரணை நடத்திப் பார்த்தார்கள். ஆனால் கொலையைப் பற்றி எந்தவிதத் தடயமும் கிடைக்காததால் அதை கண்டு பிடிக்க முடியாத கொலைகளில் ஒன்றாக அறுதியிட்டு விசாரணையை கைவிட்டு விட்டார்கள். யாராவது மூர்க்கர்கள் பரிமளாவைக் கொலை செய்து அந்த பங்களாவிற்குள் கொண்டு போய் போட்டிருக்கலாம் என்றும் சில அதிகாரிகள் கருதினார்கள். அந்தக் கொலைக்குக் காரணம் மோக வெறியாக இருக்கக் கூடுமென்றும் அவர்கள் முடிவு கட்டினார்கள். இந்தப் படியாக மாந்தோப்பு படுகொலை விவகாரம் எந்தவிதத் துப்பும் கிடைக்காமல் மூலையில் போட்டு வைக்கப்பட்டு விட்டது.

வேதாசலத்தின் திடீர் மரணத்தினால் மில்லில் சேகருக்கு இரட்டைப் பொறுப்பு ஏற்பட்டது. ஓய்வு ஒழிவில்லாமல் அவன் இரவு பகலாகக் கஷ்டப்பட்டு வேலை பார்க்க வேண்டியிருந்தது.

**தன் மகன் இம்மாதிரி அங்கு கஷ்டப்பட்டு உழைப்பது பவானிக்குக் கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லை. செங்கல்வராயனின் ஸ்தாபனத்தில் அவன்வேலை பார்ப்பதையே அவள் விரும்பவில்லை. இருந்த போதிலும் அதை சேகரிடம் எப்படிக் கூறுவதென்று புரியாமல் தத்தளி** த்துக் கொண்டிருந்தாள்.

அந்தச் சமயத்தில் எதிர்பாராத விதமாக ஒரு விசித்திரத் திருப்பம் அவர்கள் எல்லோருடைய வாழ்க்கையிலும் ஏற்பட்டது.

செங்கல்வராயனின் உறவினர் பிள்ளை ஒருவன் ஐ.ஏ.எஸ். பரீட்சை தேறியிருந்தான். அவனுக்கு வசந்தாவை பெண் பேசி முடிக்க அந்த உறவினர்கள் ஆசைப்பட்டார்கள். வசந்தா எம்.ஏ. பரீட்சையில் தேறியிருப்பதாலும், செங்கல்வராயன் இடமுள்ள ஏராளமான சொத்துக்களில் பாதி அவளுக்குக் கிடைக்கு ஆதலாலும், எப்பாடு பட்டாவது அந்தத் திருமணத்தை நடத்தி விடவேண்டுமென்று பிள்ளை வீட்டார் தவித்தார்கள்.

செங்கல்வராயனுக்கும் அந்த சம்பந்தம் வெகுவாகப் பிடித்திருந்தது. தம் மாப்பிள்ளை ஒரு பெரிய சர்க்கார் உத்தியோகஸ்தனாக இருந்தால் தமக்கு அதனால் பல விதத்தில் நன்மை உண்டு என்று தீர்மானித்து கொண்டார். சம்பிரதாயத்தையொட்டி தம் பெண்ணின் விருப்பத்தைக் கேட்டார் செங்கல்வராயன்.

திருமண ஏற்பாட்டைப் பற்றிக் கேட்டவுடன் வசந்தா துடிதுடித்துப் போய் விட்டாள். "மணந்தால் சேகரையே மணப்பேன், இல்லாவிட்டால் கன்னியாகவே காலங் கழித்து விடுவேன். என்று கொஞ்சங்கூட அஞ்சாமல் தந்தையின் முகத்திற்கு நேராகவே கூறி விட்டாள்.

**"அதைக் கேட்டதும் செங்கல்வராயனின் ரத்தம் கொதித்தது. "என் ஆயுள் உள்ளவரை அது நடக்காது!" என்று கூச்சலி** ட்ட செங்கல்வராயன், "நான் நிச்சயிக்கும் மாப்பிள்ளையை நீ மணந்தே தீரவேண்டும்! இல்லாவிட்டால் உன்னைக் கட்டாயப் படுத்தி அந்தத் திருமணத்தை நடத்தி விடுவேன்!"என்று கத்தினார்.

வசந்தா அதற்குமேல் தந்தையிடம் எதுவும் பேசவில்லை. அவர் இருந்த இடத்தைவிட்டு வேகமாக அப்பால் சென்று விட்டாள்.

செங்கல்வராயன் எல்லைமீறிய ஆத்திரத்தோடு மில்லுக்குப் புறப்பட்டார். வசந்தாவுக்கும் சேகருக்கும் சரியான பாடம் கற்பிக்க வேண்டுமென்று தனக்குள் தீர்மானித்தவராய், மாப்பிள்ளை வீட்டாருக்குத் தன் சம்மதத்தைத் தெரிவித்துத் தகவல் அனுப்பிவிட்டார். திருமணத்தையும் அடுத்த மாதமே நடத்தி விடலாமென்றும் யோசனை கூறியிருந்தார்.

**இந்த விவரங்களெல்லாம் வசந்தாவுக்குத் தெரிந்தன. சேகரிடம் எல்லா விவரங்களையும் தெரிவித்து ஆவன செய்ய வேண்டுமென முடிவு செய்தாள். ஆனால் திருமண விஷயமாக செங்கல்வராயனிடம் வசந்தா தகராறு செய்துகொண்ட பிறகு அவளது நடமாட்டங்களுக்குக் கட்டுத்திட்டம் விதிக்கப்பட்டு இருந்தது. தனியாக அவள் எங்கும் வெளி** யே செல்ல முடியாதபடி ஆட்களை நியமித்திருந்தார் செங்கல்வராயன்.

எனவே தன் சங்கடமான நிலையை விளக்கி சேகருக்கு ஒரு விரிவான கடிதம் எழுதினாள் வசந்தா. அந்தக் கடிதத்தின் முடிவில் பின் வருமாறு குறிப்பிட்டிருந்தாள்:

"...இதனால் தங்கள் வேலை போய்விடுமென்று கவலைப்பட வேண்டாம். தாய்வழிச் சொத்தாக எனக்குக் கிடைத்திருக்கும் தங்க நகைகளை விற்றாலே பல லட்ச ரூபாய்க்குமேல் கிடைக்கும். அதை வைத்து நீங்கள் சுதந்திரமாகத் தொழில் நடத்திச் சம்பாதிக்கலாம்..."

தனக்கு மிகவும் நம்பிக்கையான ஒரு வேலைக்காரன் மூலம் அந்தக் கடிதத்தைக் கொடுத்தனுப்பினாள் வசந்தா.

**அன்று மாலை மில்லிலி** ருந்து சேகர் திரும்புவதற்கே வெகு நேரமாகிவிட்டது. அவன் வீட்டுக்கு வந்த சமயத்தில் அந்தக் கடிதத்தை பவானி அவனிடம் கொடுத்தாள்.

சில தினங்களாக வேலை மிக்க கடுமையானதனால் வசந்தாவைப்பற்றிய சிந்தனையே இல்லாமல் வேலையில் ஈடுபட்டிருந்த சேகர், பவானி கொடுத்த கவரின் மீது வசந்தாவின் கையெழுத்தைப் பார்த்ததும், பரபரப்புடன் பிரித்துப் படிக்க ஆரம்பித்தான்.

செங்கல்வராயனின் மூர்க்கத்தனமான போக்கு அவனை வெறிகொள்ளச் செய்தது. எப்படியும் வசந்தாவைப் பதிவுத் திருமணம் செய்துகொண்டு செங்கல்வராயனுக்குப் பாடங்கற்பிக்க வேண்டுமென்ற தவிப்பு சேகருக்கு ஏற்பட்டது.

**வேலையிலி** ருந்து திரும்பிய மகன் காபிகூட அருந்தாமல் அந்தக் கடிதத்தில் மூழ்கிக்கிடப்பதைக் கண்ட பவானி "என்ன விசேஷம் சேகர்?" என்று மெதுவாகக் கேட்டாள்.

திடுக்கிட்டு உணர்வு பெற்ற சேகர் அந்தக் கடிதத்தைத் தன் தாயாரிடம் கொடுத்தான். பவானி அதைப் படித்துப் பார்க்க ஆரம்பித்தாள்.

தன் புரட்சித் திருமணத் திட்டத்திற்கு தன்னுடைய தாயார் அவசியம் அனுமதி கொடுப்பாளென்று முடிவு செய்திருந்த சேகர், அந்தத் திருமணத்தினால் செங்கல்வராயனிடமிருந்து ஏற்படக் கூடிய எதிர்ப்புகளை எப்படியெப்படியெல்லாம் சமாளிக்க வேண்டும் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தான்.

பவானி அந்தக்கடிதத்தைப் படித்து முடித்தாள். பிறகு மெதுவாக மடித்து அதை மீண்டும் கவருக்குள் போட்டாள். அந்தக் கவரை சேகரிடம் நீட்டினாள்.

அவள் முகத்தையே ஆவலோடு பார்த்தபடி அந்தக்கவரை வாங்கினான் சேகர்.

**"இது நடக்காது வசந்தாவை நீ மணப்பதென்பது நடக்காது!" என்று தீர்மானமான குரலி** ல் கூறினாள் பவானி.

அந்த வார்த்தைகள் சேகரின் மனதிலே சம்மட்டிபோல பயங்கரமாகத் தாக்கின.

## 25

"ஏன் அம்மா அப்படிச் சொல்லுகிறாய்?"என்று பதறினான் சேகர்.

வெகு நேரம் வரை ஒன்றுமே பேசாமல் உட்கார்ந்திருந்தாள் பவானி.

சேகரிடம் உண்மையான காரணத்தை கூறாமல் அந்தத் திருமணத்தைத் தடைசெய்ய முயன்றால் சேகரின் உள்ளம் உடைந்து போய்விடுமென்று பவானிக்குத் தெரியும். எப்படியும் அந்த பயங்கர உண்மைகளையெல்லாம் என்றாவது ஒருநாள் சேகர் அறிந்து கொள்ளத்தான் வேண்டும். அதற்குறிய நேரம் இப்பொழுது வந்து விட்டதென்று தீர்மானித்தாள் பவானி.

மெதுவாக சேகரின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். ஆவலாக அவள் முகத்தை பார்த்தபடி உட்கார்ந்திருந்தான் சேகர். மிகவும் நிதானமான குரலில் பவானி பேச ஆரம்பித்தாள்.

**"இப்பொழுது நான் சொல்லப்போகும் விஷயங்கள் எல்லாம் நடந்து முடிந்து பதினேழு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. அதனால் அவற்றை நினைத்து நாம் இப்பொழுது உணர்ச்சி வசப்படுவதோ ஆத்திரப்படுவதோ புத்திசாலி** த்தனமாகாது" என்ற பீடிகையுடன் தொடங்கினாள். சேகர் மௌனமாகத் தலையை ஆட்டியபடி உட்கார்ந்திருந்தான்.

தொடர்ந்து கூறினாள் பவானி.

**"பதினேழு ஆண்டுகளுக்கு முன்னால் உன் தந்தையும் செங்கல்வராயனும் உயிர் நண்பர்களாக இருந்தார்கள். அப்பொழுது செங்கல்வராயன் பெரிய கடனாளியாக இருந்தார். அவருக்குத் தொழில் சம்பந்தமான திட்டங்கள் போட்டுக் கொடுத்து கூடவே இருந்து அவற்றை நிறைவேற்றி வைத்து உன் தந்தை இரவு பகலாகப் பாடுபட்டார். அதன் விளைவாகத்தான் இப்பொழுது செங்கல்வராயனுக்கு இவ்வளவு சொத்து சேர்ந்திருக்கிறது. அந்தக் காலத்தில் உன் தந்தை ரொம்ப ஜம்பக்காரராக இருந்தார். செங்கல்வராயனோடு சம அந்தஸ்தில் பழகுகிறோமென்ற பூரிப்பில் தான் செய்து கொடுத்த காரியங்களுக்கு எல்லாம் செங்கல்வராயனிடமிருந்து போதிய ஊதியம் பெறவில்லை. இந்தச் சூழ்நிலையில்தான் உன் தந்தைக்கும் செங்கல்வராயனுக்குமிடையே இருந்த உறவில் ஏதோ சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. ஒருநாள், - சித்ராபௌர்ணமி தினத்தில் - வீட்டைவிட்டு வெளியே சென்ற உன் தந்தை மாயமாய் மறைந்து விட்டார். இன்றுவரை அவரைப்பற்றி எந்தவித நிச்சயமான தகவலும் தெரியவே இல்லை. ஆனால் அவரை அம்மாதிரி தலைமறையச் செய்தது நிச்சயம் செங்கல்வராயன் தான் என்று எனக்குப் புரிகிறது. அவரது இஷ்டத்திற்கு விரோதமான ஏதோ ஒரு செயலை அவரைப் பலவந்தப்படுத்திச் செய்ய வைப்பதற்காக, செங்கல்வராயன்தான் அவரை எங்கோ ஓரிடத்தில்**

**மறைத்து வைத்திருக்கிறான் என்று எனக்கு ஆரம்பத்திலிருந்தே சந்தேகம் ஏற்பட்டது** - அந்தச் சந்தேகம் உன்னுடைய ஏற்காட்டுப் பயணத்திற்குப் பிறகு ஊர்ஜிதமாகி விட்டது."

"என்ன!" என்று பிரமை தட்டிப்போய்க் கேட்டான் சேகர்.

**"ஏற்காடு செல்லும் போது உனக்குக் கொடுக்கப்பட்ட நோட்டுக்கள் கள்ள நோட்டுக்களாக இருந்தனவென்று நீ கூறினாய். அந்த நோட்டுகளை அச்சடிப்பதற்காகத் தான் உன் தந்தையை செங்கல்வராயன் எங்கோ மறைத்து வைத்திருக்கிறான் -அப்பொழுதே உன் தந்தை என்னிடம் இதைப்பற்றி ஒரு தடவை கூறினார். உன் தந்தைக்கு "சித்திரத் தகடு செதுக்கும்" (என்கிரேவிங்) கலையில் நல்ல தேர்ச்சி இருந்தது. அதைப் பயன்படுத்திக் கள்ள நோட்டுகள் தயாரிக்க செங்கல்வராயன் அப்பொழுதே வற்புறுத்தி வந்திருக்கிறான். ஆனால் நேர்மையுணர்ச்சி கொண்ட உன் தந்தை அதற்குச் சம்மதிக்கவில்லை. அதனால் அவரை நயவஞ்சகமாகக் கடத்திச் சென்று எங்கோ அடைத்து வைத்து அவரைப் பயமுறுத்தி வேலை வாங்குகிறானோ என்ற சந்தேகம் தான் எனக்கு ஆரம்பகாலம் முதல் இருந்து வந்தது. அந்தச் சந்தேகம் இப்பொழுது ஊர்ஜிதமாகி விட்டது! - செங்கல்வராயன் திடீரென உன்** தந்தையை மறையச் செய்ததால் நமது குடும்பமே நடுத்தெருவில் நிற்கும் நிலை ஏற்பட்டது. அப்பொழுதெல்லாம் நான் பட்டபாடும், உனக்கு நன்றாகத் தெரியும்! நம்மை இப்படிப்பட்ட நிலைக்கு ஆளாக்கி, நமது குடும்பத் தலைவரையும் நம்மிடமிருந்து பறித்துக் கொண்டு, நம் குடும்பத்தையே நாசமாக்கிய கயவனின் வீட்டிலா நீ சம்பந்தம் வேண்டுமென்கிறாய்?" என்று நிறுத்தினாள்.

கற்சிலைபோல் சமைந்துபோய் உட்கார்ந்திருந்தான் சேகர். அவன் எண்ணங்களெல்லாம் வசந்தா மீதோ, திருமணத்தின் மீதோ நிலைத்திருக்கவில்லை. மாயமாய் மறைந்த தன் தந்தை இன்னும் உயிரோடிருக்கிறார் என்ற நினைவு அவனைப் பிரமை தட்டிப் போகச் செய்தது. எப்படியும் அவரை மீட்டு வரவேண்டுமென்ற துடிப்பு அவனுக்கு ஏற்பட்டது.

"அப்பாவைப் பற்றி செங்கல்வராயனிடமே நேரில் கேட்டால் என்ன?"

"தெரியாது என்பான்"

"போலீசில் புகார் செய்தால்?"

"தனக்கு ஏதாவது அபாயம் வருமென்று அவன் நினைத்தால் உன் தந்தையைக் கொலை செய்து அவர் உடலை ஆற்றிலோ குளத்திலோ வீசி எறியச்செய்து விடுவான். அதன் பிறகு அவன் மீது நாம் எந்த விதத்திலும் சட்டப்படி குற்றஞ்சாட்டவும் முடியாது. அது மட்டுமல்லாமல் எந்த ஆதாரத்தைக்கூறி நாம் போலீசில் புகார் செய்ய முடியும்?" என்று வேதனையோடு கேட்டாள் பவானி.

பவானி கூறிய வாதங்கள் பொருத்தமானவையாக இருந்தாலும் இளமைத் துடிப்பு நிறைந்த சேகரால் செயலற்று இருக்க முடியவில்லை. செங்கல்வராயனோடு நேருக்குநேர் பேசி அவனிடமிருந்து விஷயத்தைக் கிரகித்துவிடத் தன்னால் முடியும் என்ற எண்ணம் அவனுக்கு ஏற்பட்டது. ஆனால் தனது தாய் அதற்கு அனுமதி தரமாட்டாள் என்று சேகர் அறிவான். அவளுக்குத் தெரியாமல் அந்த வேலையில் ஈடுபட வேண்டுமென முடிவு கட்டிக் கொண்டவனாய் கொதித்தெழுந்த தன் உணர்ச்சி வேகத்தை மிகச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான்.

இரும்புப் பெட்டியருகே நின்று செங்கல்வராயன் ஒரு நூறு ரூபாய் நோட்டுடன் மற்றொரு நூறு ரூபாய் நோட்டை ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

திடீரென அவர் முகம் ஆத்திரமடைந்தது. மற்றொரு நோட்டைத் தம் சட்டைப் பையிலிருந்து எடுத்து அதோடு ஒப்பிட்டுப் பார்த்தார். அவர் ஆத்திரம் இன்னும் அதிகமாயிற்று.

இன்னொரு நோட்டை தம் சட்டைப் பையிலிருந்து எடுத்து ஒப்பிட்டுப் பார்த்தார். அவர் முகத்திலிருந்த ஆத்திரம் பன்மடங்காகப் பெருகி மேலோங்கியது.

"மடையன்! - அயோக்கியன்! என்னை நாசமாக்கத் திட்டமிட்டு விட்டான்!" என்று சீறியபடி அந்த நோட்டுகளைக் கசக்கிச் சட்டைப் பையில் வைத்துக்கொண்டு இரும்புப்பெட்டிக் கதவைப் "படீர்" எனச் சாத்திப் பூட்டினார்.

பிறகு அவர் பார்வை சுவர்ப்பக்கம் சென்றது. அங்கு தொங்கிக் கொண்டிருந்த ஒரு சாட்டையைக் கையில் எடுத்துச் சுருட்டிப் பிடித்து கொண்டார்.

பிறகு வேகமாக அறைக்கதவின் தாழ்ப்பாளை நகர்த்திக் கதவைத் திறந்தார்.

**வெளி** யே சேகர் நின்று கொண்டிருந்தான்!

சேகரைப் பார்த்ததும் செங்கல்வராயனின் ஆத்திரம் பன் மடங்காக உயர்ந்தது.

"நீ எங்கே இங்கு வந்தாய்?" என்று முழங்கினார் செங்கல்வராயன்.

"அறைக்குள் போங்கள்! - பேச வேண்டும்!" என்று பயங்கரமாகக் கூறினான் சேகர்.

செங்கல்வராயன் சந்தேகத்தோடு அறைக்குள் பின் வாங்கினார்.

அறைக்குள் நுழைந்ததும் சேகர் எடுத்த எடுப்பில், "என் தந்தை எங்கே?" என்று முழங்கினான்.

ஏற்கனவே ஆத்திரமடைந்திருந்த செங்கல்வராயனின் மனப் போக்கு இன்னும் மோசமாக மாறியது.

"உன் தந்தை யமலோகத்தில் இருக்கிறார்!" என்று குலைத்தார் செங்கல்வராயன்.

"மரியாதையாகச் சொல்லிவிடு! எங்கே என் தந்தை?"

"சொல்லாவிட்டால் நீ என்ன செய்து விடுவாய்?-"

"என்ன செய்வேன் என்று பிறகு தெரியும்! முதலில் என் கேள்விக்குப் பதில் சொல்! - எங்கே என் தந்தை?"

"அவர் இருக்குமிடம் எனக்குத் தெரிந்தாலும் நான் உன்னிடம் சொல்ல மாட்டேன்! உன்னால் முடிந்ததைச் செய்து கொள்! முதலில் நட வெளியே!" என்று கத்தினார் செங்கல்வராயன்.

"கள்ள நோட்டுக் கயவனே! பிறர் அழிவில் வாழ்வு தேடும் வஞ்சகனே! மரியாதையாக நடந்துகொள்!" என்று முழங்கினான் சேகர்.

"பளீர்" என்று சேகரின் முகத்திலே ஒரு அறைவிட்ட செங்கல்வராயன், "என்ன சொன்னாய், அற்பனே! நட வெளியே!" என்று கூச்சலிட்டார்.

வினாடி நேரம் பிரமை தட்டிப்போன சேகர், "கிராதகனே! உன்னைப் பழிவாங்காமல் விடமாட்டேன்!" என்று கூச்சலிட்டபடி மாடிப்படிகளில் வேகமாக இறங்கி வெளியே நடந்தான்.

சேகர் ஆத்திரத்தில் கூச்சலிட்டது. தன் அறையிலிருந்த வசந்தாவுக்கும் கேட்டது. அவசரமாக வெளியே வந்தாள். சேகர் தெருவாயிற் கதவைத் தாண்டி வெளியே செல்லுவதைத் தான் அவளால் பார்க்க முடிந்தது.

சில வினாடிகளில் செங்கல்வராயனும் கோபாவேசத்தோடு மாடிப்படிக்கட்டில் இறங்கி வெளியே புறப்பட்டுச் செல்வதைக்

கவனித்தாள் வசந்தா.

நடந்த விவரங்கள் எதுவும் புரியாததால் வசந்தா அப்படியே பிரமை தட்டிப்போய் நின்றாள்!

மகனைக் காணோமென்று வந்திருந்த பவானி, அவன் தலைவிரி கோலமாக வருவதைக் கவனித்தாள்.

"என்ன சேகர்? என்ன நடந்தது?" என்று பதறினாள் பவானி.

நடந்த விவரங்களையெல்லாம் மறைக்காமல் கூறினான் சேகர். பவானி சில வினாடிகள் வரையில் ஒன்றும் பேசவில்லை.

பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவள்போல், "நீ போய்ப் படுத்துக்கொள்! நாளை பார்த்துக் கொள்ளலாம்" என்று கண்டிப்பான குரலில் கூறினாள். சேகர் தலைகுனிந்த வண்ணம் மாடிப்படியில் ஏறி நடந்தான்.

அவன் மேல்தளத்தை அடைந்த பிறகு பவானி மெதுவாகத் தன் கணவரின் படம் இருந்த இடத்தை நெருங்கினாள்.

## 27

**நீலவானத்திலே பூரணசந்திரன் பிரகாசமாய் ஒளி** பரப்பிக் கொண்டிருந்தான். முதுவேனிற்காலத்துப் பௌர்ணமியானதால் வானவீதி நிர்மலமாக இருந்தது. ஊரெங்கும் பட்டப்பகலைப் போல பால்நிலா காய்ந்து கொண்டிருந்தாலும் மாந்தோப்பும், அதன் நடுவே இருந்த பேய்ப் பங்களாவும் பயங்கர இருளைப் பரப்பிக் கொண்டுதான் நின்றன.

இருண்டு கிடந்த அந்தத் தோப்பிற்குள் வேகமாக நுழைந்தார் செங்கல்வராயன். நேராக பங்களாவை நோக்கி அவர் கால்கள் நடந்தன.

பங்களாவின் வெளிக்கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்த செங்கல்வராயன் இருண்டு கிடந்த ஹாலுக்குள் தட்டுத் தடுமாற்றம் இன்றி நடந்து ஒரு சுவர்ப்பக்கம் சென்றார். அங்கு மறைவாக அமைக்கப்பட்டிருந்த ஒரு விசையை மெதுவாக அழுத்தினார். சுவரோடுசுவராக சுவர்போலவே காட்சியளித்துக் கொண்டிருந்த ஒரு

பகுதி மெதுவாக நகர்ந்து அந்த இடத்தில் ஒரு திறப்பு காட்சியளித்தது. அந்தத் திறப்புக்கு அப்பால், பாதாளத்தை நோக்கிச்செல்லும் ஒரு படிக்கட்டு இருந்தது. அந்தப் படிக்கட்டில் இறங்கிய செங்கல்வராயன் உட்புறமிருந்த ஒரு விசையை அழுத்தி மீண்டும் அந்த ரகசியக் கதவை மூடச் செய்தார். பிறகு வேகமாகப் படிக்கட்டில் இறங்கிப் பாதாளத்தை நோக்கி நடந்தார்.

பாதாள அறையிலே அச்சு யந்திரத்தின் முன்னால் நின்று காகிதங்களை அச்சேற்றிக் கொண்டிருந்தார் கஜபதி. பதினேழு ஆண்டுகளுக்கு முன் காணாமற் போனவர். துல்லியமான அவரது வெள்ளை முடி அலங்கோலமாகப் பறந்து கிடந்தது. சுரங்கப்படிக்கட்டுப் பக்கம் முதுகைத் திருப்பிக்கொண்டு நின்றதால் செங்கல்வராயன் வந்ததை அவர் கவனிக்கவில்லை.

கஜபதியையே சில வினாடிகள் வெறிக்கப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தார் செங்கல்வராயன். வரவர அவரது முகபாவம் பயங்கரமாக மாறியது தம் கையில் சுருட்டி வைத்திருந்த சாட்டையை மெதுவாக உதறிவிட்டுத் தயார் செய்து கொண்டார்.

திடீரென வெறி கொண்ட பிசாசைப் போலக் கூச்சலிட்ட செங்கல்வராயன், "அடே" கஜபதி! என்னை அழிக்கவா திட்டமிட்டாய் வஞ்சகனே!" என்று முழங்கியபடி தம் சாட்டையினால் கண்மூடித்தனமாக ஓங்கி ஓங்கி கஜபதியை அடித்தார். கஜபதி குப்புறத் தரையில் விழுந்து புழுப் போலத் துடித்தார்.

"சாவு!லிசெத்து ஒழிந்து போ!" என்று மேலும்மேலும் அடித்தார் செங்கல்வராயன்.

அந்தச் சமயத்தில் திடீரென மனோகரமான குரலில் நெஞ்சையள்ளும் ஒரு கீதம் மெதுவாக ஒலித்தது. மாயப்பெண்மணியின் குரல்தான் அது.

**"துன்பம் நேர்கையில்**
**யாழ் எடுத்து நீ**

**இன்பம் சேர்க்க மாட்டாயா? - கண்ணே...**
**இன்பம் சேர்க்க மாட்டாயா?"**

கதி கலங்கிப் போன செங்கல்வராயனின் கையிலிருந்து சவுக்கு தானே நழுவிக் கீழே விழுந்து விட்டது. அவர் கண்கள் மிரளமிரள விழித்தன.

"நீ! - நீ!" என்று மூச்சு வாங்கக்கூறியபடி, அந்த இன்னிசைச் சத்தம் எங்கிருந்து வருகிறதென்று சுற்றிலும் பார்த்தார் செங்கல்வராயன். அந்தப் பாதாள அறையில் அவரையும் கஜபதியையும் தவிர வேறு யாரும் இல்லை.

**இருந்தபோதிலும் அவரது கண்கள் அந்த அறையைத் துழாவித் துழாவி ஆராய்ந்தன. ஒரு பக்கம் பலகை மீது என் கிரேவிங் சாமான்கள் இருந்தன. அவற்றின் அருகே "என் கிரேவ்" செய்த உலோகத் தகடுகள் நான்கைந்து கிடந்தன. ஒரு மூலையில் கஜபதி படுக்கும் கட்டிலும், அதன் அருகே கஜபதி சமையல் செய்யும் "ஸ்டவ்" அடுப்பும் இருந்தன. அவற்றிற்கு அப்பால் மாதாந்தர சமையற் சாமான்கள் நிரப்பப்பட்ட பல தகர டின்கள் காட்சியளித்தன. மற்றொரு மூலையில் ஒரு தண்ணீர் குழாயும் அதையொட்டி ஒரு குளி**யல் அறையும் இருந்தன.

மூடப்பட்டிருந்த குளியல் அறையை நெருங்கி வேகமாகத் திறந்து பார்த்தார் செங்கல்வராயன். அங்கும் யாரும் இல்லை!

ஆன்மாவையே இன்ப வேதனையில் ஆழ்த்தும் அந்த அமர கீதம் மெல்லிய ஸ்தாயியில் இன்னும் ஒலித்துக்கொண்டே இருந்தது.

அளவு கடந்த தடுமாற்றத்தோடு மாடிப்படிக்கட்டை நோக்கி ஓடிய செங்கல்வராயன் அதில் தாவி ஏறினார். வரவரப் பெண் குரல் எழுப்பும் சோக கீதத்தின் ஒலி பலமாகக்கேட்டது.

"நீயா...நீயா?... இருக்க முடியாது! நீ செத்து விட்டாய்! என்னுடைய இந்தக் கைகளால் தான் உன்னைக் கொன்றேன்! - இருந்தபோதிலும்...இது உன் குரல் தான்! - நீ தான்!" என்று உளறியபடி விசைக் கதவைத் திறந்தார் செங்கல்வராயன்.

அவர் கதவைத் திறந்ததும் பளீரெனத் தெளிவுடன்

ஒலித்தது அந்த அமரகீதம்.

**பாதாளச் சுரங்கத்தைவிட்டு ஹாலை அடைந்த செங்கல்வராயன் மீண்டும் விசைக்கதவை மூடிவிட்டு, அவசரமாக மாடிப்படிக்கட்டை நோக்கி ஓடினார். அந்தச் சமயத்தில் வீதிக் கதவு வழியாக உள்ளே நுழைந்த பவானி, அப்படியே பிரமை தட்டிப் போய் நின்றுவிட்டாள். செங்கல்வராயனோ பரபரப்புடன் மேல்தளத்தை அடைந்ததும், எதிரே இருந்த அறைக் கதவின் ஓட்டை வழியாக உள்ளே உற்று ஊடுருவிப் பார்த்தார். உள்ளே பாவை விளக்கின் மங்கலான ஒளி** யிலே தலை விரித்துப் போட்டபடி ஒரு பெண் பாடிக்கொண்டு இருந்தாள்.

"காமாட்சி! நீ சாகவில்லை! நீ சாகவில்லை! என் கைகளாலேயே உன் கழுத்தை நெறித்துக் கொன்றும் நீ சாகவில்லை!" என்று பற்களை "நற நற" வென்று கடித்த செங்கல்வராயன், படீரென அறைக் கதவை ஓங்கி உதைத்தார். தாளிடப்படாமலிருந்த அந்தக் கதவு வெகு வேகமாகத் திறந்து படாரெனச் சுவரில் மோதியது.

அடுத்த வினாடி அமானுஷ்ய அலறலோடு வெளியே ஓடி வந்த அந்தத் தலை விரிகோலப் பெண்மணி, தன் பேய்க் கரங்களிலிருந்த கொலைக் கத்தியால் செங்கல்வராயனின் நெஞ்சிலே ஓங்கிக் குத்தினாள். தடுமாறிப் பின் வாங்கிய செங்கல்வராயன் மாடிப்படிக்கட்டில் மல்லாந்து விழுந்து தட தடவென கீழே உருண்டார்.

இந்தப் பயங்கரக் காட்சியைக் கண்ணால் கண்ட பவானி வீரிட்டலறியபடி மாந்தோப்பிலே விழுந்து ஓட ஆரம்பித்தாள்.

## 28

பொழுது விடிந்ததும் செங்கல்வராயன் படுகொலை செய்யப்பட்ட செய்தி ஊரெங்கும் பரவியது. பெரிய போலீஸ் அதிகாரிகளும் ஏராளமான போலீஸ் வீரர்களும் மாந்தோப்பு பங்களாவை முற்றுகையிட்டனர். அதே இடத்தில் முன்பே அதைப் போன்ற ஒரு

படுகொலை நடந்திருந்ததால் போலீஸ் விசாரணை வெகு ஜரூராக நடந்தது.

செங்கல்வராயனின் வீட்டு வேலைக்காரர்கள் எல்லாம் விசாரிக்கப் பட்டனர். முதல் நாள் இரவு செங்கல்வராயன் வீட்டுக்கு சேகர் வந்து சச்சரவிட்டதும் "உன்னைப் பழிவாங்காமல் விடமாட்டேன்!" என்று சூளுரைத்துச் சென்றதும் விசாரணையில் வெளியாயின.

சேகர் மீது போலீசாருக்குச் சந்தேகம் விழுந்தது. அவனை பெரிய அதிகாரிகள் அழைத்துப் போய் விசாரித்தார்கள். நடந்த உண்மைகளை சேகர் கூறிய போதிலும் போலீசார் அதை நம்பவில்லை. சந்தேகத்தின் பேரில் சேகர் கைது செய்யபட்டுக் காவலில் வைக்கப்பட்டான். சேகர் கைது செய்யப்பட்டதும் பவானியின் நிலைமை மிகவும் தர்ம சங்கடமாகி விட்டது. செங்கல்வராயன் படுகொலை செய்யப்பட்டதைத் தன் கண்களால் பார்த்தவள் பவானி. ஆனால் ஒரு பெண் பேய்தான் செங்கல்வராயனைக் கொலை செய்தது என்று பவானி. கூறினால் அதை யாரும் நம்ப மாட்டார்கள். அதோடு அந்த அகால நேரத்தில் பவானிக்கு மாந்தோப்பு பங்களாவில் என்ன வேலை என்றும் கேட்பார்கள். இதனால் அவள் சொல்வதெல்லாம் பச்சைப் பொய் என்றும் தன் மகன் சேகரைக் காப்பாற்றவே அப்படிப் பொய் பேசுகிறாள் என்றும் நினைப்பார்கள். இப்படி பவானி பொருத்தமில்லாமல் ஏதாவது கூறினால் சேகர் மீது போலீசாருக்குள்ள சந்தேகம் இன்னும் வலுப்படும்.

**எனவே தான் கண்ட காட்சியை வெளி** யே சொல்லுவதற்கு முன்னால் அந்தப் பேய்ப் பெண்மணியை அவள் பிடித்தாக வேண்டும். அவளை எப்படியும் பிடித்துவிட வேண்டுமென்று பவானி வைராக்யம் செய்து கொண்டாள். செங்கல்வராயனின் மரணம் அவருடைய அருமை மகனான மார்த்தாண்டனின் வாழ்க்கையிலே மிகப் பயங்கரமான பாதிப்பை ஏற்படுத்தியது. அந்த அதிர்ச்சியில் படுக்கையில் விழுந்தவன் மூன்று வார காலம் வரையில் எழுந்து நடமாடவே இல்லை.

**வசந்தாவின் நிலையோ மிகவும் தர்ம சங்கடமாய் இருந்தது. தன் தந்தையைத் தன் காதலன் சேகர்தான் கத்தியால் குத்திக்கொலை**

**செய்திருப்பானென்று போலீசார் கருதுவது எவ்வளவு அபத்தமானது என்று வசந்தாவுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் சந்தர்ப்பச்** சாட்சியங்கள் தன் காதலனுக்கு விரோதமாக இருந்ததால் அவளால் எதுவும் செய்ய முடியவில்லை. இருந்தபோதிலும் எப்பாடுபட்டாவது அவனைக் காப்பாற்றியே தீரவேண்டும் என்று வைராக்யம் செய்து கொண்டாள்.

தந்தையை இழந்த மனவேதனையிலும் அவள் பவானிக்கு ஆறுதல் கூறுவதற்காக பவானியின் வீட்டிற்குச் சென்றாள். எந்த விதத்திலும் சேகரைக் காப்பாற்றியே தீருவதென்று வசந்தா கொண்டிருந்த வைராக்யம் பவானியின் மனதை உருக்கிவிட்டது. செங்கல்வராயனின் கொலை சம்பந்தமாக தான் கண்ணால் கண்ட காட்சியை பவானி வசந்தாவிடம் கூறினாள். அந்தப் பங்களாவில் மர்மமாய் வாழ்ந்துவரும் அந்தப் பேய் பெண்மணியை எப்படியும் பிடித்துவிட வேண்டுமென்று இருவரும் முடிவு கட்டினார்கள்.

தினசரி இரவு நேரத்திலே பவானியும் வசந்தாவும் மாந்தோப்பு பங்களாவிற்குச் சென்று அந்த பேய்ப் பெண்மணிக்காகக் காத்திருந்தார்கள். ஆனால் அதனால் எந்தவிதப் பயனும் ஏற்படவில்லை. பேய்ப் பெண்மணியின் நடமாட்டமே அங்கு இல்லை! பங்களாவின் மாடியில் ஏதாவது இரகசிய அறைகள் இருக்கின்றனவா என்றும் ஆராய்ந்து பார்த்தார்கள். அப்படிப்பட்ட அறைகள் இருப்பதாகவும் தெரியவில்லை. வழக்கமாக பேய்ப்பெண்மணி உட்கார்ந்திருக்கக் கூடிய அறையும் சாதாரண அறையாகத்தான் இருந்தது!

இப்படிப் பல நாட்கள் கழிந்தன. இருந்தபோதிலும் பெண்கள் இருவரும் சிறிதும் சோர்வடையவில்லை. விடாமல் முயன்று எப்படியும் அந்தப் பேய்ப் பெண்மணியைப் பிடித்துவிடத் தீர்மானித்தார்கள்.

**இடையிலே வசந்தாவும் பவானியும் சேகரைச் சிறையில் சந்தித்து ஆறுதல் கூறிவிட்டு வந்தார்கள். நிரபராதியான தன் மகனைத் தண்டிக்க ஆண்டவன் ஒருபோதும் இடமளி**க்க மாட்டான் என பவானி திடமாக

நம்பியிருந்தாள். வசந்தாவோ தன் காதலன் நிரபராதியென்று நிரூபணமாகிச் சிறையில் இருந்து மீளவேண்டுமென்று தவித்தாள்.

## 29

அன்று பௌர்ணமி தினம்!

**வழக்கம்போல இரவு பத்து மணிக்கு பவானியும் வசந்தாவும் மாந்தோப்பு பங்களாவுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். பேய்த்தனமான இருளில் பயங்கரமான நிசப்தம் உறைந்து இருந்தது. வசந்தாவையும் பவானியையும் இனம்புரியாத பயம் கவ்விக்கொண்டது. இருந்தாலும் சேகரை முன்னிட்டு இருவருமே மரணத்திற்கும் துணிந்து விட்டார்கள். கீழ் ஹாலில் அவர்கள் நின்று கொண்டிருந்தபோது வெளியே சரசரவென யாரோ சருகுகளி**ன் மீது நடந்து வரும் சத்தம் கேட்டது. சட்டென இருவரும் எதிர்ப்புறம் ஓடிச்சென்று சுவரோரமாக ஒதுங்கினார்கள். அப்பொழுது எதிர்பாராதவிதமாக வசந்தா பாதாள அறையின் விசைப்பித்தான் மீது சாய்ந்து விட்டாள். அடுத்த வினாடியே பாதாள அறைக்கதவு திறந்தது. பவானியும் வசந்தாவும் வியப்போடு அதையே பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

அந்தச் சமயத்தில் தெருவாயிற் கதவருகே ஓர் உருவம் விருட்டென்று இருளில் வந்து நின்றது. திறந்திருந்த கதவைத் தடவிப் பார்த்துவிட்டு சட்டெனப் பின் வாங்கித் தோப்பின் பக்கம் நடந்தது அந்த உருவம். இரண்டொரு வினாடிகள் காத்திருந்த பிறகு பவானி தெருவாயிற் கதவுப் பக்கம் சந்தடியில்லாமல் போய்ப் பார்த்தாள். அங்கு யாரையும் காணோம்! மீண்டும் திரும்பி வசந்தா இருந்த இடத்திற்கு வந்தாள். இருவரும் பாதாள அறைக்குள் இறங்கினார்கள்.

பாதாள அறையின் ஒரு மூலையிலே மங்கலான விளக்கு எரிந்து கொண்டிருந்தது. மெதுவாக அந்தப் பக்கமாக இருவரும் நடந்தார்கள். அங்கு கிடந்த கட்டிலில் ஒரு நரைத்ததலை மனிதன் குப்புறப்படுத்துக் கிடந்தான். வசந்தா அந்த மனிதனின் முகத்தை மெதுவாகத் திருப்பினாள். அது கஜபதி தான்!

"நீங்களா?" என்று அலறிய பவானி பாய்ந்து ஓடிவந்து அழ ஆரம்பித்தாள். வசந்தா ஒருகணம் திகைத்து நின்றாள். பிறகு தன் கணவரான கஜபதியைக் கட்டிக்கொண்டு விம்மிவிம்மி அழ ஆரம்பித்தாள்.

வசந்தா ஒரு கணம் திகைத்து நின்றாள். பிறகு குற்றுயிரும் குலை உயிருமாகக் கிடக்கும் கஜபதிக்கு கொஞ்சம் தண்ணீர் தெளித்து, வாயிலே சிறிது தண்ணீர் ஊற்றி பிரக்ஞை வரச் செய்யத் தவித்தாள்.

கஜபதி மெதுவாகக் கண்களைத் திறந்தார். அந்தச் சமயத்தில் திடீரெனப் பழைய மனோகர கீதம் ஒலிக்க ஆரம்பித்தது. அதே பேய்ப் பெண்மணி பாடும் உருக்கமான கீதந்தான்!

**"துன்பம் நேர்கையில்**

**யாழ் எடுத்து நீ**

இன்பம் சேர்க்க மாட்டாயா? - கண்ணே..."

அந்தப் பாடலைக் கேட்டதும் திடுக்கிட்ட வசந்தா வேகமாகப் படிக்கட்டுப்பக்கம் ஓடினாள்.

"தனியாகப் போகாதே!" என்று பதறினாள் பவானி.

ஆனால் வசந்தா நிற்கவில்லை. வேகமாகப் படியேறி ஹாலை அடைந்த வசந்தா "தடதட" வென மாடிப்படிக்கட்டில் ஏறி ஓடினாள். திடீரென பாட்டுச் சத்தம் நின்றது. எதிரே இருந்த அறைக் கதவைத் திறந்துகொண்டு வேகமாகப் பாய்ந்து வந்தாள் அந்தப் பைசாசப் பெண்மணி. அவளது பேய்க்கரத்திலே கொலைக்கத்தி பளிச்சிட்டது.

விவரிக்க இயலாத கலவரத்திலே வசந்தா வீரிட்டு அலறினாள். ஆனால் அந்தப் பேய்ப் பெண்மணி ஒரே தாவாக அவள்மீது பாய்ந்தாள். அதே சமயத்தில் ஒரு கரம் வசந்தாவை வேகமாக வேறுபக்கம் இழுத்துவிட்டதால், அந்தப் பேய்ப் பெண்மணி தலை குப்புற படிக்கட்டில் விழுந்து தடதடவென உருண்டு ஹாலில் போய் விழுந்தாள்.

"என்ன காரியம் செய்தாய்!" என்று கடிந்தபடி வசந்தாவைப் பிடித்திருந்த பிடியை விட்டுவிட்டு பவானி நேரே பேய்ப் பெண்மணி விழுந்துகிடந்த இடத்திற்கு ஓடினாள். மூக்கிலும் வாயிலும் ரத்தம் ஒழுக விழுந்து கிடந்த அந்தப் பேய்ப் பெண்மணியின் தலை முடியும் கழன்று கிடந்தது. அவ்வாறு வேஷம் போட்டிருந்தது. பைத்தியக்காரன் மார்த்தாண்டன்தான்!

அவன் ஆவி பிரிந்து விட்டது! "அண்ணா!" என்று அலறியபடி அவன் உடல்மீது விழுந்து கதறினாள் வசந்தா.

நடந்தேறிய பயங்கர நிகழ்ச்சிகளை கஜபதிதான் போலீஸ் அதிகாரிகளுக்கு விளக்கிக் கூறினார்.

"செங்கல்வராயனின் மனைவி காமாட்சி ஒரு கலா ரசிகை. சங்கீதத்தில் பற்றுக் கொண்டவள். சங்கீத வித்வான்களிடம் பக்தி லயிப்பு உள்ளவள். ஆனால் கெட்டவளல்ல.

"இருந்தபோதிலும் செங்கல்வராயனுக்கு தன் மனைவிமீது சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. அது முற்றமுற்ற அவளது ஒவ்வொரு பேச்சும் அவருக்கு விபரீதமாக அர்த்தங்கொடுக்க ஆரம்பித்தது.

"ஒரு நாள் ஒரு சிறு தகராறு பெரிதாக முற்றி தன் மனைவியின் குரல் வளையை நெறித்துக் கொன்று விட்டார் செங்கல்வராயன். அதை அவர்களுடைய பையன் மார்த்தாண்டன் - ஐந்து வயதுக் குழந்தை - தன் கண்களால் பார்த்துக் கொண்டிருந்தான். அதன் விளைவாக அவனுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி அவன் மூளையைக் கலக்கியிருக்க வேண்டும். அதனால் சந்திர கலை பூரணமாக ஆதிக்கம் செலுத்தும் பௌர்ணமி தினம் வந்ததும் அவனுக்கு தனது தாயின் நினைவு வந்து தாயைப் போல உடை உடுத்தி அவளைப் போலவே - அவளுக்குப் பிடித்தமான - பாடலைப்பாடிக் கொண்டிருப்பது வழக்கமாக இருந்திருக்கிறது. அந்தச் சமயத்தில் யாராவது குறுக்கிட்டால் தன் தாயைத்தான் கொலைசெய்ய வருகிறார்களென்று பீதியில் சித்த வெறிகொண்டு அவர்களை அவன் தாக்கிக் கொலை செய்வதும் வழக்கமாக இருந்து வந்திருக்கிறது."

**"இந்த நிலையில் என் விஷயத்தையும் சொல்லி விடுகிறேன் செங்கல்வராயன் தன் மனைவியைக் கொலை புரிந்த சமயத்தில் நானும் யதேச்சையாக அந்த இடத்திற்குப் போய்விட்டேன். என்னை வெளியே** விட்டுவைத்தால் தனக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமென அஞ்சி என்னையும் பாதாளச் சிறையில் போட்டு வைத்திருந்தான். அதே சமயத்தில் என்னை பலவந்தப்படுத்தி நான் அதுவரை செய்ய மறுத்துவந்த கள்ள நோட்டு அடிக்கும் வேலையிலும் என்னை ஈடுபடச் செய்தான்.

"ஒவ்வொரு மாதமும் எனக்குத் தேவையான உணவுப் பொருள்கள் பாதாள அறைக்கு வந்துவிடும். நானே சொந்த சமையல் செய்து சாப்பிட்டு வந்தேன். என்னை என் மனைவி கண்டு பிடிப்பதற்கு இரண்டு தினங்களுக்கு முன்புதான் ஆகாரப் பொருள்களெல்லாம் தீர்ந்து போய்விட்டன. இரண்டு நாள் பட்டினியில் தான் நான் மயங்கிக் கிடந்தேன்" என்று கூறி முடித்தார்.

நிரபராதியென நிரூபணமான சேகர் விடுதலை செய்யப்பட்டான். வசந்தாவுக்கும் அவனுக்கும் நடந்த திருமணத்தை பவானியும் கஜபதியும் கண் குளிரப்பார்த்தார்கள். தம்பதிகள் இருவரும் மாந்தோப்பு பங்களாவில்தான் குடித்தனம் வைத்துக் கொண்டார்கள். என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

அதன் பிறகும் அந்தப் பங்களா காலி இல்லை!

- முற்றும் -